# DJH2C - GENERAL ECONOMICS

**Unit -I**

Scope and Methods of Economics - Nature of Economics Laws - Fundamental Concepts - Consumption - Wants and their nature - The Law of diminishing marginal utility - Demand - Elasticity of demand - Consumer surplus-Production - Factors of Production and their combination - Law of Returns - the organization of Production - Division of labour - Location of industry - Large scale Production, small scale production.

**Unit-II**

Economics organization - Capitalism and Socialism - Mixed economy - Types of production organization - Partnership - Joint Stock companies, Co-operative organization, State enterprise - Industrial combinations - Value - The analysis of supply and demand - Value under perfect Competition - Market Value and normal value - Joint demand and join supply - Monopoly values - Monopolistic Competition - Distribution - General theory of distribution - Theories of wage interest, rent and profit.

**Unit -III**

Money and Banking - Functions of money - Kinds of money - The quantity theory of money - The gold Standard - Paper money - Credit instruments of credit - Banks, Commercial, Industrial and Land mortgage - The central Bank and its functions with special reference to India -Components of Indian money market.

**Unit-IV**

Foreign Trade - International trade - The theory of comparative cost - Balance of trade and balance of payments - Indian Balance of trade and payments - Free trade and protection - Foreign exchanges - The purchasing power parity theory.

**Unit -V**

Public finance: Public expenditure and sources of Public revenue - General principles of taxation Revenue and expenditure in India - Public debit and its redemption - Planning and Economic development - India’s five year plans

# UNIT I

## பொருளியலின் பரப்பளவு (Scope of Economics)

### பொருளியலின் பகுதிகள்

பொருளியல் மனிதனின் பொருள் சாா் நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்கின்றது. பொதுவாக அவனது எண்ணற்ற விருப்பங்களை அடிப்படையாகக் கொண்டு, அவற்றைப் பெற அவன் செய்கின்ற முயற்சிகளையும். அவற்றின் விளைவாக அவனது விருப்பங்கள் நிறைவு பெறுவதையும் உள்ளடக்கியவைகளாக மனித நடவடிக்கைகள் இருக்கின்றன.

மனிதனின் பொருளாதார நடவடிக்கைகள் பலவகையாக அமைந்துள்ளன. அவை எல்லாவற்றையும் பற்றிப் பொருளியல் ஆய்கின்றது. விருப்பங்கள், அவற்றை நிறைவு செய்யும் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடும் காரணிகள், உற்பத்தி செய்த பொருட்களைக் கைமாற்றுதல், அதற்கான விலை நிர்ணயம், பணம், வங்கி, பன்னாட்டு வாணிபம் நாட்டின் வருவாயைப் பகிர்தல் ஆகியவை எல்லாம் பொருளியலின் பரப்பளவில் அடங்கும். சரியான முறையில் பொருளியலின் பாடப் பொருளைத் தெளிவாக நுணுகி ஆராயும் நோக்கில் அதனை அ) நுகர்வு ஆ) உற்பத்தி இ) மாற்று ஈ) பகிர்வு உ) நிதி என்ற ஐந்து பிரிவுகளாகப் பகுக்கின்றனர்.

(அ) நுகர்வு:

இப்பகுதியில் விருப்பங்களின் இயல்பையும், கிடைப்பருமையுள்ள பொருட்களின், பணிகளின் பயன்பாட்டினை நுகர்வதன் மூலம் விருப்பங்கள் நிறைவு செய்யப்பெறுவதையும் பயில்கின்றறோம். மனித விருப்பங்களையும் அவற்றை நிறைவு செய்வதையும் பற்றிப் பல பொருளியல் விதிகளும் கோட்பாடுகளும் உள்ளன. அவற்றையும் ஆராய்கின்றோம்.

(ஆ) உற்பத்தி:

உற்பத்தி என்னும் சொல் பொருட்களில் பயன்பாட்டையும், மதிப்பையும் உருவாக்குவதைக் குறிக்கின்றது. இப்பகுதியில் உற்பத்தியில் ஈடுபடும் காரணிகள், அவற்றின் தன்மை, அவை இணையும் விகிதம் ஆகியவற்றைப் பயில்கின்றோம்.

(இ) மாற்று

ஒரு பொருளுக்கோ பணிக்கோ மற்றொரு பொருளையோ, பணியையோ பெறுவது மாற்று என்று கூறப்பெறுகின்றது. உற்பத்தி செய்த பொருள் நுகா்வோா் கைக்குச் செல்ல வேண்டும். பொருட்களை கைமாற்றுவதற்குக் கருவியாகப் பணம் பயன்படுகின்றது. உற்பத்தியான பொருட்கள் அங்காடிக்கு வருகின்றன. அங்கு அவற்றிற்கு விலை நிர்ணயமாகின்றது. மாற்றுப் பணியில் உள்நாட்டு வாணிபம், பன்னாட்டு வாணிபம், வங்கிகள், நிதிக்கழகங்கள் ஆகியவை பங்கு பெறுகினறது.

(ஈ) பகிர்வு

உற்பத்தியில் நிலம், உழைப்பு முதல், அமைப்பு ஆகிய காரணிகள் இணைந்து செயல்படுகின்றன. உற்பத்தியின் மூலம் கிடைக்கின்ற வருவாயில் உற்பத்திக் காரணிகள் உற்பத்திப் பணியில் ஈடுபட்ட அளவிற்கேற்பப் பங்கு பெறுகின்றன. மொத்த வருவாய்

உற்பத்திக் காரணிகளுக்கிடையில் எப்படிப் ˙பங்கிடப் படுகின்றதென்பதையும், அதற்குரிய பொருளியல் விதிகளையும் இப்பகுதியில் பயில்கின்றோம்.

(உ) நிதி

இப்பகுதியில் தனி மனிதர்களின் நிதி பற்றி ஆராய்வதில்லை. அரசின் பொருளாதார நடவடிக்கைகளை ஆராயும் பகுதியாக இது இருக்கின்றது. அரசுக்கு வருவாய் கிடைக்கின்ற வழிமுறைகளையும், அவற்றிற்குரிய கோட்பாடுகளையும் அரசின் செலவுகளையும் பொதுநிதிப் பகுதியில் ஆராய்கின்றோம். பொதுநிதி நேரடியாகவும், மறைமுகமாகவும் மனித நடவடிக்கைகளைப் பாதிக்கின்றது. ஆதலால் பொருளியலில் பொதுநிதிக்கு உள்ள முக்கியத்துவம் வளர்ந்து வருகின்றது.

**பொருளியல் விதிகள்**

அறிவியலாகத் திகழும் பொருளியலுக்கு மற்றைய அறிவியல்களைப்போன்று பல விதிகளை உருவாக்கியுள்ளனர். பொருளியல் விதிகளின் இயல்பை அறிந்துகொள்ள வேண்டும்.

**விதி**

பொருளியல் விதிகளின் தன்மையை ஆராய, 'விதி' என்னும் சொல்லுக்குரிய பொருளை அறிய வேண்டும். 'விதி' அல்லது சொல்லுக்குரிய சொல்லை இரு பொருட்களில் பயன்படுத்துகின்றனர். ஒன்று அரசு நிறைவேற்றுகின்ற மக்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டிய சட்டமாகும். மற்றொன்று அறிவியல் சட்டமாகும். இது காரண-காரிய முறையில் இவை நடந்தால், இவை விளைவாகத் தொடரும் என்று கூறுவதாக அமைந்திருக்கும் விதிகள் அறிவியலுக்கு அடிப்படையாக இருக்கின்றன. அவை ஓரளவு திட்டவட்டமாக ஒவ்வொரு துறையின் நடவடிக்கைகளின் போக்குகளைப் பொதுமைப்படுத்திக் கூறுகினறன.

**பொருளியல் விதி:**

அறிவியலான பொருளியல் மனிதனின் பொருள்சார் நடவடிக்கைகளைப் பற்றி பல விதிகளை வகுத்துள்ளது. பொருளியல் விதிகள் பொருளாதார நடவடிக்கைகளை ஊடுருவி நிற்பவைகளாகவும், அவற்றை விளக்குவதாகவும் உள்ளன. அவை அறிவியல் விதிகளைப்போன்று காரணங்களையும், விளைவுகளையும் விளக்குகின்றன. எடுத்துக்காட்டாகத் தேவை விதியைக் கூறலாம். ''விலைகள் குறைவதால் பொருட்களின் வேவை கூடும்'' என்பது விதி. விலை குறைவது காரணமாகவும் தேவை கூடுவது விளைவாகவும் இருப்பதை கவனிக்கலாம்.

இயற்கையைப் பற்றிய அறிவியல் விதிகளைப் போன்று பொருளியல் விதிகள் துல்லியமாகவும், திட்டவட்டமாகவும் இருப்பதில்லை. ஏனென்றால் இவை எண்ணங்களாலும், உணர்வுகளாலும் இயக்கப்பெறுகின்ற மனித நடவடிக்கைகளைப் பற்றியதாக இருக்கின்றன.

**பொருளியல் விதிகளின் இயல்புகள்:**

1. பொருளியல் விதிகள் அறிவியல் விதிகளைப் போன்றவை: சில பொருளியல் விதிகள் இயற்கை அறிவியலின் விதிகளைப்போன்று காரணத்தையும்,

விளைவுகளையும் கூறுவனவாக உள்ளன. எடுத்துக்காட்டாக குறைந்துசெல் பயன்பாட்டு விதியைக் கூறலாம். இதில் ''நுகா்வு'' காரணமாகவும், ''பயன்பாடு'' விளைவாகவும் இருக்கின்றன. இதனைப்போன்று காரணத்தையும் விளைவையும் கூறுகின்ற சில பொருளியல் விதிகள் உள்ளன.

2. பொருளியல் விதிகள் போக்குரைக் கூற்றுகளாக உள்ளன: பொருளியல் விதிகளை ''பொருளாதாரப் போக்குகளைப் பற்றிய கூற்றுக்கள்'', என்று மாா்ஷல் விளக்குகின்றாா். பொருளியல் விதிகள் சமுதாயத்தில் குறிப்பிட்ட சூழ்நிலையில் மக்களின் பொருளாதார நடவடிக்கைகள் ''எப்படி இருக்கலாம்'' என்பதைக்கூறுகின்றன. எடுத்துக்காட்டாக கிரஷாம் விதி, ''பழையகாசுகள் புழக்கத்திலிருந்து நல்ல புதிய காசுகளை விரட்டுகின்றன'', என்று கூறுகின்றது. பழைய காசுகளைச் சேர்க்கின்ற சில மனிதா்களிடம் இவ்விதி செயல் படாமல் போகலாம்.

3. பொருளியல் விதிகள் கட்டுப்பாடுகளுக்குட்பட்டவை: பொருளியல் விதிகள் செயல்பட பல சூழ்நிலைகள் கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும். அவை இருந்தால் மட்டுமே பொருளியல் விதிகள் செயல்படும். ஆதலால் தான் பேராசிரியா் செலிக்மான், ''பொருளியல் விதிகள் அடிப்படையில் ஐயப்பாட்டிற்கு உரியவை'', என்று கூறுகின்றாா். ஒவ்வொரு பொருளியல் விதிகளையும் கூறுகின்றபொழுது அதுசெயல்படுவதற்கு வேண்டிய எடுகோள்களைக் குறிப்பிடுவது தேவையாகின்றது. குறிப்பாக, ''மற்றவை மாறாமலிருந்தால்'' மட்டுமே பொருளியல் விதி செயல்படுமென்று கூறுகின்றோம். எடுத்துகாட்டாக ''விலை குறைந்தால் தெவை கூடும்'', என்னும் தேவை விதியைக் கூறலாம்.

4. பொருளியல் விதிகள் பிற அறிவியல் விதிகளைப் போலத் துல்லியமானவைகளாகவும் திட்டவட்டமானவைகளாகவும் இருப்பதில்லை: இயற்கை அறிவியல் விதிகள் துல்லியமானவை களாகவும், உறுதியாகச் செயல்படக் கூடியவைகளாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாகப் புவியீா்ப்பு விதியான அறிவியல் விதியைக் கூறலாம்.

5. பொருளியல் விதிகள் அலையெழுச்சி விதிகளைப் போன்றவை: மாா்ஷல், ''பொருளியல்விதிகளை எளிமையான திட்டவட்டமான புவியீா்ப்பு விதியோடு ஒப்பிடுவதைவிட அலைகளின் விதிகளோடு ஒப்பிடலாம்,'' என்கின்றாா். அலையெழுச்சி இருக்கும் தட்பவெப்ப நிலையை ஒட்டியது. கடலில் அலைகள் மேலெழுமா கீழிறங்குமா என்பதை ஊகித்துக் வுறுகினறனா். ஏதிா்பாா்ப்பதைப் போலச் சூழல் அமைந்தால் ஊகம் சரியாக இருக்கும். இல்லையேல் தவறாகி விடும். பொருளியல் விதிகளும் ஓரளவு ஊகங்களாக இருக்கின்றன. ஆதலால் அவை திட்டவட்டமானவைகளாக இருக்க முடியாது.

6. பொருளியல் விதிகள் சார்புடையவை: அவைகுறிப்பிட்ட இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்றவைகளாக இருக்கின்றன. இடமும் காலமும் மாறுகின்றபொழுது பொருளியல் விதிகளையும் மாற்றிக்கொள்ள வேண்டியது தேவையாகின்றது. இதனால்தான் வளர்ச்சி பெற்ற அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றவைகளாக இருக்கும் பொருளியல் விதிகள் சில இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகளுக்கு ஏற்றவைகளாக இருப்பதில்லை.

7. சில பொருளியல் விதிகள் எங்கும் எப்பொழுதும் பொருந்தக் கூடியவை: பொதுவாகப் பொருளியல் விதிகள் போக்குறைக் கூற்றுகளாக இருந்தபோதிலும் சில எங்கும் ஏற்றுக் கொள்ளத்தக்க உண்மைகளாக உள்ளன. எடுத்துக்காட்டாக, குறைந்துசெல் பயன்பாட்டு விதியைக் கூறலாம். இது எல்லா நாட்டிற்கும், எந்தகாலத்திற்கும் பொருந்தக் கூடியது. ஆதலால்தான் பேராசிரியர் நைட் ''அவை முதலாளித்துவ சமுதாயத்திற்கும் சமதர்ம சமுதாயத்திற்கும் ஏற்றவைகளாக உள்ளன'', என்று பொருளியல் விதிகளைப் பற்றிக் கூறுகின்றார்.

**அடிப்படைக் கலைச்சொற்கள்**

பொதுவாகப் பேச்சுவழக்கிலுள்ள சில சொற்களைப் பொருளியல் கலைச்சொற்களாகப் பயன்படுத்துகின்றோம். ஆனால் அவற்றைப் பொருளியலில் ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில் கருத்தில் பயன்படுத்துவதால் அவற்றைப்பற்றிய விளக்கத்தை அறிந்து கொள்ளுதல் தேவையாகும்.

**பொருட்கள்**

மனிதவிருப்பதை நிறைவுசெய்கின்ற எதனையும் பொருள் என்கின்றோம். பொருளியலில் ''பொருட்கள்'' என்ற சொல் பயன்பாடுடைய புத்தகம், பேனா போன்றவற்றையும், ஆசிரியர் மருத்துவர் ஆகியோரின் பணிகளையும் உள்ளடக்கிதாக இருக்கின்றது. ''பயன்பாடுடைய'' பொருள் என்றால் நன்மை பயக்கும் பொருளென்று அர்த்தமில்லை. மனிதவிருப்பத்தை நிறைவு செய்கின்ற ஆற்றல் படைத்த பொருளென்றே அர்த்தம்.

**இலவசப் பொருட்களும் செல்வப் பொருட்களும்:**

பொருட்களை அவற்றின் இயல்பையும் அளிப்பையும் ஒட்டி பொருட்களை அவற்றின் இயல்பையும் அளிப்பையும் ஒட்டி ''இலவசப் பொருட்கள்'' அல்லது ''விலைதராப் பொருட்கள்'' என்றும் ''செல்வப்பொருள்கள்'' அல்லது ''விலைப் பொருட்கள்'' என்றும் பிரிக்கலாம்.

கதிரவன் ஒளி, காற்று, கடல் நீர், கடல் மணல் போன்ற இயற்கையின் கொடையாகக் கிடைப்பவற்றைச் ''இலவசப் பொருட்கள்'' என்கின்றோம். முயற்சியின்றி இவற்றைப் பெறலாம். தேவையோடு ஒப்பிடுகையில் ஏராளமாக இவை கிடைக்கும். ஆதலால் இவற்றை அங்காடியில் விற்க முடியாது இவை விலையற்ற பொருட்களாகும்.

தேவையோடு ஒப்பிடுகையில் 'கிடைப்பருமையுள்ள உணவு, உடை, புத்தகம் போன்றவற்றைச் ''செல்வப் பொருட்கள்'' என்கின்றோம்.

**செல்வம்**

பொருளியலில் ஒன்றைச் செல்வமென்று குறிப்பிட வேண்டுமானால் அதனிடம் சில தனித்தன்மைகள் இருக்க வேண்டும், செல்வப் பொருட்கள் எல்லாம் செல்வமாகின்றன. செல்வத்தின் இயல்புகளை வகைப்படுத்திக் கூறலாம்.

**செல்வத்தின் இயல்புகள்:**

1. ஒரு பொருளைச் செல்வமென்று கருத அதனிடம் மனித விருப்பத்தை நிறைவு செய்கின்ற திறன் பயன்பாடு இருக்க வேண்டும்.
2. ஒரு பொருள் செல்லவத்தின் மதிப்பைப் பெறப் பயன்பாடுடையதாக இருந்தால் மட்டும் போதாது. கிடைப்பருமையுடையதாகவும் இருக்க வேண்டும்.
3. செல்வத்தின் மற்றொரு இயல்பு அது ஒருவரிடமிருந்து மாற்றக் கூடியதாக இருக்க வேண்டும்.
4. செல்வம் மனிதனிடமிருந்து பிரிக்கக்கூடிய புறத்தன்மையுடையதாக இருக்க வேண்டும்.
5. செல்வப் பொருள் தனி மனிதனுக்கு உடைமையாகக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.
6. பயன்மதிப்போடு கூட மாற்று மதிப்பும் உடையதாக இருக்க வேண்டும்.
7. செல்வப் பொருள் உருவமுடையப் பருப் பொருளாகவும் உருவமற்றதாகவும் இருக்கலாம்.

**செல்வத்தின் வகைகள்:**

1. தனிமனிதா்களுக்கு உடைமையாக இருக்கும் செல்வத்தைத் தனியாா் செல்வம் என்கின்றோம்.
2. சமுதாயத்திலுள்ள மக்களனைவருக்கும் பயன்படுத்த உரிமையுள்ளவை சமுதாயச் செல்வங்களாகும்.
3. ஒரு நாட்டிற்குச் சொந்தமான தனியாரின் செல்வங்களின் தொகுதியும், சமுதாயச் சொத்துக்களும் சோ்ந்து நாட்டுச் செல்வம் ஆகின்றது.
4. உலகத்திற்கெல்லாம் உரிமையுடையவற்றைப் பன்னாட்டுச் செல்வம் என்கின்றோம்.

பயன்பாடு

ஒரு பொருளில் இருக்கின்ற மனித விருப்பத்தை நிறைவுசெய்கின்ற ஆற்றலைப் பயன்பாடு என்கிறோம். ஒரு பொருளின் பயன் மதிப்பு பயன்பாட்டைக் குறிக்கினறது. ஒரு பொருளின் உள்ளாா்ந்த இயல்புகளுக்கும் பயன்பாட்டிற்கும் தொடா்பில்லை.

பயன்பாடு ஒரு சாா்புச் சொல்லாகும் ஆளுக்கு ஆளும். இடத்திற்கு இடமும், காலத்திற்கு காலமும் பயன்பாடு மாறுகின்றது.

பயன்பாட்டை மனநிறைவிலிருந்து வேறுபடுத்தலாம். பயன்பாட்டின் விளைவாக மன நிறைவு கிடைக்கின்றது. பயன்பாடுடைய பொருளைப் பயன்படுத்துகின்ற பொழுது மனநிறைவு ஏற்படுகின்றது.

பயன்பாடு வேறு; பயன் வேறு. பயன்பாடுடைய பொருளெல்லாம் பயனுள்ள பொருளாகவும் இருக்க வேண்டுமென்பதில்லை. மது குடிப்பவா்களுக்கு மது பயன்பாடுடைய பொருளாகும். ஆனால் அது பயனுள்ள பொருளென்று கூறமுடியாது.

**பயன்பாட்டை அளத்தல்:**

பொருளின் பயன்பாடு அதனைப் பயன்படுத்துகின்றவர்களின் மனநிலையை ஒட்டி அமைகின்றது. ஒரு பொருளிலிருந்து கிடைக்கின்ற பயன்பாடு ஆளுக்கு ஆள் மாறுபடுகின்றது. ஒரே ஆளுக்குச் சூழ்நிலையை ஒட்டிப் பல நேரங்களில் வெவ்வேறு வகையில் பயன்பாடு கிடைக்கலாம். பயன்பாட்டைத் துல்லியமாக அளக்க முடியாது. ஆனால் ஒப்பிட்டுப்பார்க்கலாம். பயன்பாடு முன்பு கிடைத்ததை விட மிகுதியாக இருக்கின்றதா, குறைவாக இருக்கின்றதா வென்பதைக் கூறலாம்.

வருவாய்

செல்வத்திலிருந்து வருவாய் கிடைக்கின்றது. செல்வமாக இருக்கும் நிலத்திலிருந்து வாரம் என்னும் வருவாய் கிடைப்பதை எடுத்துக்காட்டாகக் கூறலாம். உழைப்பிலிருந்தும் வருவாய் கிடைக்கின்றது. வருவாயைப் 'பண வருவாய்' 'உண்மை வருவாய்' என்று இருவகைகளாகப் பிரிக்கலாம். வருவாயை ஒரு குறிப்பிட்ட காலத்தில் எவ்வளவு கிடைக்கின்றதென்று கணிக்கின்றோம்.

**வேறு சில சொற்கள்**

மதிப்பு:

பொருட்களின் மதிப்பைப்பற்றி முதல் முதலில் விரிவாக ஆராய்ந்த ஆடம்ஸ்மித் மதிப்பைப் 'பயன்மதிப்பு' 'மாற்றுமதிப்பு' என்று பிரித்து, 'மதிப்புப் புதிர்' பற்றிக் குறிப்பிட்டார். பொருளியலில் 'மதிப்பு' என்ற சொல்லை ''மாற்று மதிப்பு'' என்ற பொருளில் பயன்படுத்துகின்றோம். பயன்பாடு, 'கிடைப்பருமை' மாற்றுத்தன்மை கொண்ட செல்வப் பொருட்களுக்கெல்லாம் மாற்றுமதிப்பு உண்டு.

விலை:

ஒரு பொருளின் மாற்று மதிப்பைப் பண அளவால் கூறுகின்றோம். இதுவே அப்பொருளின்விலையாகும். இருபொருட்களின் விலையைக் கொண்டு அவற்றின் தராதர மதிப்பை அறியலாம். பொருளியலில் விலை நிர்ணயத்திற்குத் தனியிடமுண்டு.

அங்காடி:

''நடைமுறையில்'' ''அங்காடி'' அல்லது ''சந்தை'' என்ற சொல்லைப் பொருட்களை வாங்குகின்றவர்களும் விற்கின்றவர்களும் கூடுகின்ற ஓர் இடத்தைக் குறிக்கப்பயன்படுத்துகின்றோம்.

## நுகர்வு

**நுகர்வு சொல் விளக்கம்:**

மனிதனை ஆவல்களும் விருப்பங்களும் இயக்குகின்றன. எண்ணற்ற விருப்பங்களை மனிதன் கொண்டிருப்பதால் மனிதனை ''விருப்பங்களின் மூட்டை'' என்று வர்ணிப்பதுண்டு. மனிதர்கள் மேற்கொள்கின்ற பல்வேறு அலுவல்களும் விருப்பங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை நிறைவு செய்யும் முயற்சிகளாக அமைகின்றன. செய்த தொழிலால்

கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு மனித விருப்பத்தை நிறைவுசெய்கின்றபொழுது மனநிறைவு கிடைக்கின்றது.

விருப்பங்களை நிறைவுசெய்யப் பணிகளையும் பொருட்களையும் பயன்படுத்துவதை ‘நுகர்வு’ என்கின்றோம். பொதுவாக ‘நுகர்வு’ என்ற சொல்லை ‘அழித்தல்’ என்ற பொருளில் பயன்படுத்துவதுண்டு. ஆனால், பொருளியலில் நுகர்வு என்றால் பொருளை அழிப்பது அல்ல; பொருளிலும் பணியலும் உள்ள பயன்பாடுகளைப் பெற்று விருப்பங்களை நிறைவு செய்வதே ‘நுகர்வு’ ஆகும். இதனைப் பேராசிரியர் இலி “நுகர்வில் பயன்பாட்டை ஆழிக்கின்றோம்; பொருளை அழிப்பதில்லை”, என்கின்றார். மேயர், “நுகர்வு அதனுடைய விரிந்த கருத்தில் மனித விருப்பங்களை நிறைவேற்றப் பொருளாதாரப் பொருட்களையும் பணிகளையும் பயன்படுத்துவதைக் குறிக்கின்றது”, என்கின்றார்.

**முக்கியத்துவம்:**

பொருளியலில் நுகர்வு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. பொருளியலின் அடிப்படையாகவும், தொடக்கமாகவும், நோக்கமாகவும், நுகர்வு விளங்கின்றது. பிரெஞ்சுப் பொருளியலறிஞரான ஜே.பி. சே. முதன் முதலாகப் பொருளியலை உற்பத்தி, பகிர்வு, மாற்று என்று மூன்று பிரிவுகளாகப் பகுத்தார். அவர் நுகர்வைக் குறிப்பிடவில்லை. ரிக்கார்டோ, மில் போன்றவர்களும் நுகர்வுக்குப் பொருளியலில் தனி இடம் தரவில்லை. மார்ஷல் முதன் முதலாக நுகர்வின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டினார். பென்ஹாம் பொருட்களின், பணிகளின் பயன்பாட்டை படிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

**பயன்பாடு விதிகள்**

**பயன்பாடு சொல்விளக்கம்:-**

ஒரு பொருளிலோ பணியிலோ இருக்கின்ற மனிதவிருப்பத்தை நிறைவுசெய்யும் ஆற்றலைப் பயன்பாடு என்று பொருளியலில் கூறுகின்றோம். மனிதனுக்கு மனநிறைவைத் தருகின்ற பொருட்களில் எல்லாம் பயன்பாடு இருக்கின்றது. பயன்பாட்டைப் பற்றிய சில கருத்துக்கயைக் குறிப்பிடுவது தேவையாகும்.

1. ‘பயன்பாடு’ என்ற சொல் ஒரு பொருளின் உள்ளார்ந்த இயல்பு எதையும் குறிப்பிடவில்லை. பொருளிலுள்ள மனிதவிருப்பத்தை நிறைவு செய்யும் ஆற்றலை மட்டுந்தான் குறிக்கின்றது.
2. பயன்பாடு என்பது அறக்கருத்தோடு தொடர்பு கொண்டிருக்கவில்லை. மது அருந்துவது உள்ளத்தையும், உடலையும் கெடுக்கக்கூடியது.
3. ஒரு பொருளின் மீதுள்ள விருப்பம் ஒருவருடைய சுவை உணர்ச்சி, பழக்கவழக்கங்கள் போன்ற பலவற்றைச் சார்ந்துள்ளது. ஒரு பொருளின் மீதுள்ள விருப்பத்தின் தீவிரத்தன்மை நேரத்திற்குநேரம் வேறுபடலாம்; பயன்பாடும் மாறுபடலாம்.
4. சாதாரணமாகப் பேச்சுவழக்கில் பயன்பாடும் திருப்தியும் ஒன்றொனக் கருதுவதுண்டு. ஆனால் பொருளியலில் அப்படிக் கருதுவதில்லை.

5. ஒருவருடைய பழக்கவழக்கங்கள் சுவையுணர்ச்சி ஆகியவை எல்லாம் மாறாமலிருந்தாலும் பொருட்களின் கையிருப்புக்கேற்ப விருப்பங்களின் தீவிரத்தன்மை மாறுபடும்.

**பயன்பாட்டை உருவாக்குதல்**

1. ஒரு பொருளின் உருவத்தை மாற்றுகின்றபொழுது அதில் பயன்பாடு தோன்றுகின்றது. இதனை என்கின்றோம். எடுத்துக்காட்டாக, மரத்தை நாற்காலியாக மாற்றுவது; நூலைத் துணியாக்குவது ஆகியவற்றைக் கூறலாம்.
2. ஓரிடத்திலிருக்கும் பொருளை அது தேவைப்படும் மற்றொரு இடத்திற்கு மாற்றுவதன் மூலம் அதன் பயன்பாடு கூடுகின்றது.
3. ஒரு பொருளைத் தேவைப்படும் காலம்வரை பாதுகாத்து வைத்திருந்து கொடுக்கின்றபொழுது அந்தப் பொருளின் பயன்பாடு அதிகரிக்கின்றது. இதனை ‘‘காலப்பயன்பாடு’’ என்று கூறுகின்றோம்.
4. பணிகளைச் செய்கின்ற முறையால் அவற்றில் பயன்பாடு தோன்றுகின்றது. மருத்துவர் பணியை எடுத்துக்காட்டாகக் கட்டிக் காட்டலாம். இதனை ‘‘பணிப்பயன்பாடு’’ என்கின்றனர்.

பயன்பாட்டை அளத்தல்

‘‘பயன்பாடு’’ ஓர் உளவியல் கருத்தாகும். ஒவ்வொருவரின் மனநிலைக்கேற்றவாறு ஒரு பொருளின் பயன்பாடு ஆளுக்கு ஆள் மாறுபடுகின்றது. உள்ளுணர்வின் அடிப்படையில் அமைகின்ற பயன்பாட்டை நேரடியாக அளக்க முடியாது. பயன்பாட்டை அளப்பதைப்பற்றி கருத்துக்கள் இருக்கின்றன.

பேரட்டோ, ஹிக்ஸ் போன்ற பொருளியலறிஞர்கள் பயன்பாட்டை அளக்க முடியாதென்று கருதுகின்றனர். பயன்பாடு பொருளின் தன்மையைச் சார்ந்திருக்கமால் நுகர்வோரின் மனநிலையைச் சார்ந்துள்ளது.

## குறைந்தசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி

குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியின் மூலக்கருத்துக்கள் கோசன், பென்த்தாம் ஆகியோரின் எழுத்துக்களிலேயே காணப்படுகின்றன. இதனை மதிப்பு நிர்ணயத்தோடு தொடர்பு படுத்தி முதன் முதலில் வில்லியம் ஸ்டேன்ஸி ஜெவான்ஸ் விளக்கினார். இவ்விதி ஒவ்வொரு நுகர்வோரின் அன்றாட அனுபவத்தைக் கூறுகின்றது. நாம் மேலும் மேலும் ஒரு பொருளை வாங்குகினறபொழுது அதனுடைய இறுதிநிலைப் பயன்பாடு குறைந்துகொண்டு செல்லும். இதனை இவ்விதி விளக்குகின்றது.

விளக்கம்:

மனிதவிருப்பங்கள் எண்ணற்றவை. ஆனால் ஒவ்வொரு தனி விருப்பத்தையும் நிறைவுசெய்து விடலாம். இதற்கு அந்த விருப்பத்தை நிறைவேற்றும் ஆற்றலுடைய பொருளைத் தொடர்ந்து நுகர வேண்டும். இதுதான் இவ்விதியின் அடிப்படை.

“மற்றவைகள் மாறாமலிருக்கின்ற பொழுது ஒருவரிடமிருக்கின்ற ஒரு பொருளின் இருப்புக் கூடிக்கொண்டே சென்றால் மிகுதியாகின்ற ஒவ்வோர் அலகிலிருந்தும் அவருக்குக் கிடைக்கும் பயன்பாடு குறைந்து கொண்டு செல்லும்”, என்கின்றார்

இவ்விதியை பேராசிரியர் போல்டிங் “மற்ற பொருட்களின் நுகர்வை மாறாமல் வைத்துக்கொண்டு நுகர்வோர் ஏதாவது ஒரு பொருளின் நுகர்வை மட்டும் கூட்டுகின்றபொழுது, மாறுகின்றபொருளின் இறுதிநிலைப் பயன்பாடு முடியவாகக் குறைய வேண்டும்” என்று விளக்குகின்றார்.

பட்டியல்:

| நுகரும் லட்டுகளின் எண்ணிக்கை | மொத்தப் பயன்பாடு | இறுதிநிலைப் பயன்பாடு |
|---|---|---|
| 1 | 50 | 50 |
| 2 | 90 | 40 |
| 3 | 120 | 30 |
| 4 | 140 | 20 |
| 5 | 150 | 10 |
| 6 | 150 | 0 |
| 7 | 140 | -10 |

இந்த பட்டியலிலிருந்து சில உண்மைகளை அறியலாம். ஐந்துலட்டுக்கள் சாப்பிடுகின்றவரை மொத்தப்பயன் பாடுகூடுகின்றது. அவற்றின் மொத்தப் பயன்பாடு 150 அலகுகள். ஆறாவது லட்டில் பயன்பாடு (0) இல்லை. அதனால் ஆறாவது லட்டுச் சாப்பிடுவதால் மொத்தப் பயன்பாடு கூடவில்லை. ஏழாவதில் பயன்பாடு எதிர்மறையில் 10 ஆக உள்ளது. ஆதலால் மொத்தப் பயன்பாடு குறைகின்றது.

## தேவையும் தேவை விதியும்

பொருளியலின் “தேவையும்” “அளிப்பும் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. பொருளியல் முழுமையும் தேவையும் அளிப்பையும், அவற்றின் தொடர்பையும் சார்ந்திருக்கின்றது. தேவை அளிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் மிகைப்படுத்தி “ஒரு கிளிக்கு ஒவ்வொரு கேள்விக்கும் “தேவை” “அளிப்பு” என்று பதில் கூறக் கற்றுக்கொடுத்து விட்டால், நல்ல பொருளியலாளராக இருக்கும்”, என்று கூறுவதுண்டு.

## தேவை விளக்கம்

சொல்விளக்கம்:

சாதாரணப் பேச்சு வழக்கில் "தேவை" என்னும் சொல்லை விருப்பம், ஆசை, ஆர்வம், வேட்கை, கோரிக்கை, என்று பலவகைப் பொருளில் பயன்படுத்தகின்றோம். ஆனால் பொருளியலில் வெறும் விருப்பம் தேவையாகாது. கையில் காசில்லாதவன் வானொலிப்பெட்டி வைத்துக்கொள்ள விரும்பலாம். ஆனால் அது தேவையாகாது. பொருளியலில் வாங்குந்திறன் கொண்ட விருப்பத்தையே தெவை என்று கூறுகின்றோம்.

## தேவையின் வகைகள்:

தேவையை அதன் இயல்பை ஒட்டிப் பல வகைகளாகப் பிரிக்கலாம்.

1. விலைத்தேவை:

   நுகர்வோரின் வருவாய் சுவையுணர்ச்சி, நாகரிகம், தொடர்புடைய மற்றைய பொருட்களின் விலைகள் ஆகியவை மாறாமலிருக்கின்றபொழுது ஒரு குறிப்பிட்ட காலத்தில் பல வகையான விலைகளில் பல்வேறு அளவுகளில் ஒரு பொருளை நுகர்வோர்கள் கேட்பதை விலைத்தேவை குறிக்கின்றது. பொருளியலில் விலைத் தேவையைத்தான் ஆராய்கின்றோம். விலைக்கும் ஒரு பொருளின் தேவைக்கும் தலைகீழ்த்தொடர்பு இருக்கின்றது. விலை குறைந்தால் தேவை கூடும். விலை கூடினால் தேவைகுறையும்.

2. வருவாய்த்தேவை:

   மற்றவை மாறாமலிருக்கின்ற பொழுது, நுகர்வோர்கள் தங்கள் வேறுபட்ட வருவாய் நிலைகளில் ஒருபொருளை வாங்கின்ற பல்வேறு அளவுகளை வருவாய்த்தேவை குறிக்கின்றது. வருவாய் கூடுகின்றபொழுது நுகர்வோரின் தேவைகூடும். ஆதலால் வருவாய்த் தேவைக்கோடு மேல் நோக்கிச் செல்வதைக் காணலாம்.

3. குறுக்குத் தேவை:

   மற்றவை மாறாமல் இருக்கின்ற பொழுது குறிப்பிட்ட காலத்தில் தொடர்புடைய பொருட்களின் பல்வேறு விலைகளில் நுகர்வோர்கள் வாங்குகின்ற ஒரு பொருளின் பல்வேறு அளவுகளைக் குறுக்குத்தேவை சுட்டிக்காட்டுகின்றது. பெரும்பாலான பொருட்கள் ஒன்றோடொன்று தொடர்புள்ளவையாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாகச் சீனி விலையில் ஏற்படும் மாறுதல் கருப்பட்டியின் தேவையைப் பாதிக்கலாம்.

4. கூட்டுத்தேவை:

   சில விருப்பங்களை நிறைவேற்ற ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்கள் தேவைப் பெறுகின்றன. இதனை கூட்டுத்தேவை என்கிறோம். புத்தகம் அச்சிடக் காகிதம், அச்சு எழுத்துக்கள், எந்திரம் போன்றவை தேவைப்படுவதைக் கூறலாம்.

5. நேர்முகத் தேவையும் பிறப்பிக்கப் பெற்ற தேவையும்:

   ஒரு பொருளுக்கு நேரடியாக எழுகின்ற தேவையை நேர்முகத்தேவை என்றும் அதன் மூலம் வேறு பொருட்களுக்கு ஏற்படும் தேவையைப் பிறப்பிக்கப்பட்ட தேவை என்றும் கூறுகின்றோம். புத்தகங்களை உருவாக்கத் தாள், அச்சிடும்ட மை, தைக்க நூல் போன்றவற்றிற்கு ஏற்படும் தேவை பிறப்பிக்கப்பெற்ற தேவையாகும்.

6. கலவைத் தேவை

பலவற்றிற்குப் பயன்படுத்த ஒரு பொருளுக்கு இருக்கும் தேவையைக் கலவைத் தேவை என்கின்றோம். சீனி, மின்சாரம் போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

## எடுகோள்கள்:

1. அங்காடியிலுள்ள நிலைகள் மாறாதென்பது முதல் எடுகோளாகும். இதன்படி நுகர்வோரின் வருவாய், சுவையுணர்வு, விருப்பு, வெறுப்புக்கள் ஆகியவற்றில் மாற்றமில்லை யென்று கருதுகின்றோம். நுகர்வோர் விரும்புகின்ற வேறுபொருட்களின் விலைகளிலம் மாற்றம் இருக்கக் கூடாது.
2. தேவை வளைகோடு தொடர்ச்சியாகச் செல்வதாகக்கருதப் பெறுகின்றது. இது, சிறிய வலை மாற்றமும் தேவையில் விளைவை ஏற்படுத்துமென்று கருதுகின்றது.
3. அங்காடி முழுமையானதாகவும், நிறைவுப் போட்டி நிலவுவதாகவும் இருக்க வேண்டுமென்பது அடுத்த எடுகோளாகும்.

## **நுகர்வோர் எச்சப்பாடு (Consumer's Surplus)**

நுகர்வோர் எச்சக்கருத்து – விளக்கமும் திறனாய்வும்

குறைந்துசெல் பயன்பாட்டுக் கருத்தை ஒட்டி ''நுகர்வோர் எச்சப்பாட்டுக் கோட்பாடு'' அல்லது ''நுகர்வோர் உபரிக் கோட்பாடு'' உருவாக்கப் பெற்றுள்ளது. இக்கோட்பாடு தற்காலப் பொருளியல் ஆய்வில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது. நுகர்வோர் எச்சக்கருத்தை முதன் முதலில் பிரெஞ்சுப் பொறியியல் - பொருளியலறிஞரான டியூபியுட் 1884ல் குறிப்பிட்டார். ஆல்பிரட் மார்ஷல் இக்கருத்துக்கு முழு வடிவம் கொடுத்தார்.

விளக்கம்:

குறைந்துசெல் பயன்பாட்டு விதி நாம் ஒரு பொருளுக்குக் கொடுக்கின்ற விலை, அதன் இறுதி நிலைப் பயன்பாட்டிற்குச் சமமென்று கூறுகின்றத. ஆனால் அந்தட் பொருளிலிருந்து கிடைக்கின்ற மொத்தப் பயன்பாடு மிகுதியாக இருக்கும். ஒரு லட்டிலிருந்து நாம் பெறும் பயன்பாடு ஒரு ரூபாய் வரை தரத்தயாராக இருப்போம். ஆனால் அதற்கு நாம் உண்மையில் கொடுப்பது 25 காசாக இருந்தால் நமக்கு அதிலிருந்து 75 காசு பெறுமான பயன்பாடு எச்சமாகக் கிடைக்கின்றது. இதுவே நுகர்வோர் எச்சம்

பேராசிரியர் மார்ஷல் ''ஒருவர் ஒரு பொருளில்லாமல் போவதைக் காட்டிலும் அதனை வாங்குதற்கு எவ்வளவு விலை மிகுதியாகத் தருவாரோ அதற்கும், அவர் உண்மையில் கொடுக்கும் விலைக்குமுள்ள வேறுபாடு எச்சமனநிறைவைக் காட்டுகின்றது. இதனை நுகர்வோர் எச்சம்.

நுகர்வோர் எச்சத்தை, ஒருபொருளை நுகர்வதிலிருந்து கிடைக்கின்ற மொத்தப் பயன்பாட்டிற்கும் அதற்காகச் செலத்துகின்ற விலைக்கும் உள்ள வேறுபாடு என்று கூறலாம். நுகர்வோர் எச்சம்-மொத்தப்பயன்பாடு-(விலை X வாங்கிய பொருட்களின் எண்ணிக்கை)

எடுகோள்கள்

1. பயன்பாட்டை அளக்கலாம்
2. பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடு மாறாதிருத்தல்
3. அளிப்பைச் சார்ந்த பயன்பாடு
4. பதிலீட்டுப் பொருள் இல்லை
5. வேறுபாடுகள் இன்மை
6. நிறைவுப் போட்டி

# உற்பத்தி (Production)

## உற்பத்தி உற்பத்திக் காரணிகளும்

நுகர்வில் மனித விருப்பங்கள் நிறைவு பெறுவதைப் பற்றி ஆராய்ந்தோம். அதற்கான சாதனங்களைப் பற்றி உற்பத்திப் பகுதியில் பயிலப்போகின்றோம். உலகத்திலுள்ள மக்களெள்லாம் ஏதாவது ஒரு பொருளை அல்லது பணியை ஆக்குவதில் ஈடுபட்டிருக்கின்றனர். இதனைப்பற்றிய தெளிவான ஆராய்ச்சி தேவைப்பெறுகின்றது.

### உற்பத்தி – விளக்கம்:

பொதுவாக ‘‘உற்பத்தி’’ என்ற சொல்லைப் ‘‘பொருட்களை ஆக்குதல்’’ என்னும் பொருளில் பேச்சு வழக்கில் பயன்படுத்துகின்றனர். ஆனால் எண்ணிப்பார்த்தால், நாம் பொருட்களைப் படைப்பதில்லை என்பதும், இயற்கையில் கிடைப்பதைத் தக்க வகைகளில் மாற்றிப் பயன்படுத்துகின்றோம் என்பதும் விளங்கும். ஆதலால் பொருளியலில் ‘‘உற்பத்தி’’ என்பது ‘‘பயன்பாட்டை உருவாக்குதலைக்’’ குறிக்கும். அதாவது பொருளிலோ, பணியிலோ பயன்பாட்டை ஆக்குதல் உற்பத்தியாகும்.

### தொழில் வகைகள்

1. வேளாண்மை, மீன்பிடித்தல், சுரங்கத்தொழில் போன்றவை எடுப்புத் தொழில்களாகும்.
2. மூலப்பொருட்களை நுகர்பொருட்களாக மாற்றும் ஆலைத்தொழில் போன்றவை தயாரிப்புத் தொழில்கள் எனப்பெறும்.
3. போக்குவரத்து, ஆயுள் காப்பீடு, வங்கிகள் போன்றவற்றை வணிகப்பணிகள் என்கின்றோம்.
4. ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பாடகர்கள் போன்றறோரின் பணிகளை நேர்முகப் பணிகள் என்கின்றோம்.

### உற்பத்திக் காரணிகள்:

ஒரு பொருளின் உற்பத்தி பலகாரணிகளின் கூட்டுமுயற்சியின் இணைப்பின் விளைவாக ஏற்படகின்றது. காலப்போக்கில் பொருளாதார வளர்ச்சி நிலைகளை ஒட்டி நிலம், உழைப்பு, முதல், அமைப்பு ஆகியவை உற்பத்திக்காரணிகளாக முக்கியத்துவம் பெற்றன. தற்காலத்தில் சில பொருளியலறிஞர்கள் தொழில் நுட்ப இயலையும், அறிவையும் உற்பத்திக் காரணியாகச்

சேர்த்துக் கொள்கின்றனர். பொதுவாகப் பொருளியலில் நிலம், உழைப்பு, முதல், அமைப்பு, ஆகிய நான்கையும் உற்பத்திக் காரணிகளாகக் கருதுகின்றோம்.

1. நிலம்

பொருளியலில் நிலம் என்றசொல் நிலப்பரப்பைமட்டும் குறிக்காமல் இயற்கை வளங்களை எல்லாம் குறிக்கின்றது. மனிதனால் உருவாக்க இயலாத இயற்கையின் கொடைகளெனக் கருதப்பெறுகினற காடுகள், மலைகள், ஆறுகள், கடல்கள், தட்பவெப்பநிலை, காற்று போன்ற எல்லாம் நிலம் என்ற சொல்லுக்குள் அடங்கும்.

2. உழைப்பு

உழைப்பு என்னும் சொல் தொழிலாளர்கள் தருகின்ற எல்லாவகையான பணிகளையும் தொழிலாளர்கள் தருகின்ற எல்லாவகையான பணிகளையும் குறிக்கின்றது. இது மூளை உழைப்பாகவும், உடல் உழைப்பாகவும் இருக்கலாம். இத்தகைய உழைப்புத் திறமையானதாகவும். திறமையற்றதாகவும் இருக்கலாம். ஆமைப்பாளர் பணியையும் உழைப்பில் சேர்த்துக் கொள்ளலாம்.

3. முதல்

உற்பத்தியில் பயன்படுத்துகின்ற எல்லா வகையான மனிதன் உருவாக்கிய கருவிகளையும் செல்வத்தையும் முதல் என்கின்றோம்.

4. அமைப்பு

உற்பத்திக் காரணிகளை இணைக்கின்ற பணியை அமைப்பு செய்கின்றது. அமைப்பாளர் தொழிலைத் தொடங்கி, நிர்வகித்து, உற்பத்தியான பொருட்களை விற்பனை செய்கின்றார்.

## விளைவு விதிகள் (Law of Returns)

பொருளியலின் தொடக்கம் முதல் விளைவுவிதிகள் பற்றிப் பேசப்பெறுகின்றது. தொன்மைப் பொருளியலறிஞர்கள் குறைந்துசெல், வளர்ந்துசெல், மாறாத விளைவு விதிகளாகிய மூன்றும் செயல்படுவதை விளக்கினார்கள். ஆனால் அவாகள் குறைந்துசெல் விளைவு விதக்கே மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தனர். அவர்கள் வளர்ந்துசெல் விளைவு விதியை வேலைப் பகுப்பின், சிறப்புத்தேர்ச்சியின் விளைவென்று கருதி விரிவாக ஆராயாமல் இருந்துவிட்டனர். குறைந்துசெல் விளைவுவிதி பொருளியலின் எல்லாத்துறைகளுக்கும் பொருந்துமென்று கருதினர். ரிக்கார்டோவின் வாரக்கோட்பாடும் மால்தசின் மக்கள் தொகைக்கோட்பாடும் குறைந்துசெல் விளைவு விதியின் அடிப்படையில் உருவாக்கப்பெற்றனவென்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் தொழிற்புரட்சிக்கு பின் சூழ்நிலை மாறியது. தொழில் நுணுக்க வளர்ச்சியின் காரணமாக, குறைந்து செல் விளைவுவிதி செயல்படுவதைக் காலந்தாழ்த்த முடியுமென்பதை அறிந்தனர். வளர்ந்துசெல் விளைவு விதியும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

மூன்று விதிகள்:

1. மற்றைய உற்பத்திக்காரணிகள் கூடியதைவிட அதிக விகிதத்தில் உற்பத்தி கூடுவது வளர்ந்துசெல் விளைவுவிதியாகும்.
2. மற்றைய உற்பத்திக்காரணிகள் கூடுகின்ற அதெ விகிதத்தில் உற்பத்தி கூடுவது மாறா விளைவுவிதியாகும்.
3. முற்றைய உற்பத்திக் காரணிகள் கூடுவதைவடக் குறைந்த வேகத்தில் உற்பத்தி கூடுவதை குறைந்துசெல் விளைவுவிதி என்று கூறுகின்றோம்.

## உழைப்பும், மக்கள்தொகைக் கோட்பாடுகளும்

### உழைப்பு

### உழைப்பு-சொல் விளக்கம்:

பேச்சு வழக்கில் எல்லா வகை மனித முயற்சிகளையும் உழைப்பு என்கின்றோம். ஆனால் பொருளியலில் உடலாலோ, மூளையாலோ பொருள் வருவாய் கருதிப் பணி செய்வதை உழைப்பு என்கின்றோம். மகிழ்வுக்காகவோ, அன்புக்காகவோ செய்வது உழைப்பு ஆகாது. பொழுது போக்காகத் திரைப்படம் பார்ப்பதை உழைப்பென்று கருதுவதில்லை. ஆனால் பத்திரிக்கையில் திறனாய்வு எழுதும் நோக்கத்தொடு திரைப்படம் பார்ப்பது அவருக்கு வருவாய் தருவதால் உழைப்பாகும். ஒரு தாய் தன் பிள்ளைக்கு அன்போடு பணிவிடை செய்வது உழைப்பாகாது. அதனையே பணிமகளாக வேறொரு பிள்ளைக்குச் செய்வது உழைப்பாகும்.

மார்ஷல், ‘‘பகுதியாக அல்லது முழுமையாக வேலையின் மூலம் இன்பம் தவிரச் சில பொருள் பெறும் நோக்கோடு மூளையையோ, உடலையோ முயற்சியில் ஈடுபடுத்துவது உழைப்பாகும.

வகைகள்:

1. உழைப்பை உடல் உழைப்பு மூளை உழைப்பு என்று பிரிக்கலாம். ஊடலின் உறுப்புகளை ஈடுபடுத்திச் செய்வது உடல் உழைப்பாகும். சிந்தனை வழியாகவோ நிர்வாகத்தின் மூலமாகவோ செய்வது மூளை உழைப்பாகும்.
2. இரண்டாவதாக, உழைப்பை ‘திறன் மிக்க உழைப்பு’ ‘திறனற்ற உழைப்பு’ ‘திறன்குறைந்த உழைப்பு’ என்றும் பிரிக்கலாம். மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள் போன்று நல்ல பயிற்சியும், தேர்ச்சியும் பெற்றோர் உழைப்பு, திறன்மிக்க உழைப்பாகும். சுமை தூக்குதல், சிற்றாள் வேலை செய்தல் போன்று பயிற்சியற்றோர் தரும் உழைப்பு திறனற்ற உழைப்பாகும்.
3. மூன்றாவதாக ஆக்கமுள்ள உழைப்பு ஆக்கமற்ற உழைப்பு என்று உழைப்பைப் பிரிக்கலாம். எதனையாவது ஒன்றை உற்பத்தி செய்து தருவது ஆக்கமுள்ள உழைப்பாகும். எழுத்தர் போன்றோரின் பணி ஆக்கமற்ற உழைப்பாகும்.

## முக்கியத்துவம்:

உழைப்பு மிகவும் முக்கியமான உற்பத்திக் காரணியாகும். ஏல்லா வகையான பொருளாதார அமைப்பிலும் உழைப்பு குறிப்பிடத்தக்க பணியாற்றுகின்றது. உழைப்பின்றி நிலமோ, முதலோ எதையும் உற்பத்தி செய்ய முடியவதில்லை. புழங்காலக் கிராமப் பொருளாதாரத்தில் உழைப்பு முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது. இன்றைய முதல் செறிவான முதலாளித்துவ உற்பத்தி முறையிலும் திறன்மிக்க உழைப்பிற்குத் தனியிடம் இருக்கின்றது. மூலதனமே உழைப்பால் உருவானதென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

உழைப்புத்திறன்:

1. இனப்பண்புகள்: உழைப்புத்திறன் தொழிலாளர்களின் இனத்தைச் சார்ந்து அமைகின்றது.
2. தனிமனித இயல்புகள்: தொழிலாளர்களின் தனி இயல்புகளை ஒட்டி உழைப்புத்திறன் உள்ளது. கடமை, நேர்மை உணர்வுகளைக் கொண்டவர்கள் நேர்மையாகப் பாடுபடுகின்றனர்.
3. தட்பவெப்ப நிலை: மிகுந்த வெப்பமோ, கடுங்குளிரோ இருக்குமிடத்திலுள்ள தொழிலாளர்களை விட, உடல் நலத்திற்கேற்ற தட்டவெப்ப நிலையுள்ள இடத்திலுள்ள தொழிலாளர்கள் திறமையாக உழைக்கின்றனர்.
4. கல்வி நிலை: கற்றவர்களிடம் உழைப்புத்திறன் சிறப்பாக அமைந்திருக்கும். கல்வியின் துணையால் செய்யும் பணியை நன்கு புரிந்து கொண்டு திறமையோடு பணியாற்ற முடியும்.
5. தொழில் நுணுக்க அளவு: செய்கின்ற தொழிலைப் பற்றிய நுணுக்கமான அறிவும், ஏற்ற பயிற்சியும் இருந்தால் உழைப்புதிறன் உயர்வானதாக இருக்கும்.
6. கூலி: குறைவான கூலிபெறுபவரின் உழைப்புத்திறன் குறைந்தும், உயர்கூலி பெறுபவரின் உழைப்புத்திறன் மிகுந்தும் இருக்கும்.
7. முன்னேற்ற வாய்ப்பு: வேலை உயர்வு கிடைத்து வாழ்க்கையில் முன்னேற வாய்ப்புள்ளவாகள் திறமையாகச் செயல்படுவார்கள்.
8. வாழ்கைத்தரம்: உயர்ந்தவாழ்க்கைத்தரமிருந்தால் உழைப்புத்திறன் உயர்நிலையில் இருக்கும்.
9. வேலைச் சூழ்நிலை: எத்தகைய இடத்தில், வேலை செய்கின்றாரென்பதை ஒட்டி உழைப்புத்திறன் இருக்கின்றது.
10. வேலைநேரம்: தக்க இடைவெளிதந்து. சரியான கால அளவில் வேலை செய்கின்ற பொழுது திறமை வளரும்.

## தொழிலை இடப்படுத்துதல் (Location of industry)

விளக்கம்: பலவிதக் காரணங்களினால் ஒரே இடத்தில் ஒரே வகையான தொழில்கள் செழித்து வளர்வதை ‘‘வட்டாரத் தொழில் பகுப்பு’’ அல்லது ‘‘தொழிலின் இடச்செறிவு’’ என்கின்றோம்.

இதனை ராபர்ட்சன் தொழில்களிடம் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் இணைகின்ற, பெருகுகின்ற, நெருங்கிச் செழிக்கின்ற இயல்பு இருக்கின்றதெனக் குறிப்பிடுகின்றார். நாடு முழுக்க எல்லாத் தொழில்களும் பரவலாக வளர்வதில்லை.

ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு சில தொழில்கள் குவிந்து வளர்கின்றன. நமது நாட்டின் தொழில் வளர்ச்சிப் போக்கிலிருந்து இதனைத் தெரிந்து கொள்ளலாம். துணித்தொழில் பம்பாயிலும், இரும்பு எ.ஃ.குத்தொழில் பீகாரிலும், சணல் தொழில் வங்காளத்திலும், சர்க்கரை தொழில் உத்திரப்பிரதெசத்திலம் வளர்ந்துள்ளன.

நமது மாநிலத்திலும் தொழில் இடப்படுத்தப்பெற்று, ஒவ்வொரு பகுதி ஒவ்வொரு பொருளுக்குப் பெயர் பெற்றிருப்பதைக் காணலாம். புட்டுக்கு காஞ்சிபுரமும், ஜமுக்காளத்திற்குப் பவானியும், தீப்பெட்டிக்கு சிவகாசியும், பாய்க்குப் பத்தமடையும் புகழ்பெற்றிருப்பதைக் குறிப்பிடலாம்.

## காரணங்கள்

தொழிலின் இடச்செறிவுக்குப் பல காரணங்கள் உள்ளன. ‘‘மாநிலங்கள் ஏன் பல்வேறு பொருட்களில் சிறப்பானத் தேர்ச்சி பெற்றுள்ளன வென்பதற்கு முக்கியமான காரணம் பூமியின் மீது உற்பத்திக் காரணிகள் ஏற்றத்தாழ்வான விகிதங்களில் பங்கிடப் பெற்றிருப்பதுதான்’’, என்று பென்ஹாம் கூறுகின்றார்.

## நன்மைகள்

1. தேர்ச்சியும் பயிற்சியும்
2. விற்பனை
3. போக்குவரத்து வளர்ச்சி
4. சிக்கலைத் தீர்த்தல்
5. நிதி நிறுவனங்களின் வளர்ச்சி
6. துணைத் தொழில்கள்
7. தொழில் சங்கம் அமைத்தல்
8. உற்பத்தித்திறன் கூடல்
9. வட்டாரச் செழிப்பு

## குறைகள்:

1. சார்ந்திருத்தல்
2. போர்க்கால ஆபத்து
3. சிலபகுதிகள் பின்தங்குதல்
4. குறைவான மாற்று வேலை வாய்ப்பு
5. வேறுவகைத் தொழிலாளர்கள்
6. சிக்கல்கள்

## பேரளவு, சிற்றளவு உற்பத்தி

## (Large scale production, small scale production)

தொழில் நிறுவனங்களின் உற்பத்தி அளவுகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒருநிறுவனம் பொருளை உற்பத்திசெய்யும் அளவிற்கும் அதன் அடக்கவிலைக்கும் தொடர்புண்டு. ஆதலால் ஒரு தொழில் நிறுவனத்தில் எந்த அளவில் உற்பத்தி நடைபெறுகின்ற தென்பதைக் கவனிப்பது தேவையாகின்றது. சிறிய அளவில் உற்பத்தி நடைபெறுவதும், பெரிய அளவில் உற்பத்தி நடைபெறுவதும் தொழில்களின் இயல்பை ஒட்டி அமைகின்றன. இருவகை உற்பத்தி அளவுகளின் இயல்பையும், நன்மை தீமைகளையும் தனித்தனியாக ஆராயலாம்.

### பேரளவு உற்பத்தி

விளக்கம்: தற்காலத்தில் மிகுந்த முதலீட்டைக் கொண்டு ஆயிரக்கணக்கானவர்கள் வேலை ஏராளமாக உற்பத்தி செய்கின்ற மிகப்பெரிய தொழிற்சாலைகளை அமைக்கும் போக்கு எங்கும் காணப்படுகின்றது. பொருளியலறிஞரான கேன்கிராஸ், ‘‘தொழில் வளர்ச்சி பெறுகின்ற உண்மை கேள்விக்கு அப்பாற்பட்டது. ஒரே மாதிரித் தொழில் நிறுவனத்தோடு தொடர்புடைய நிறுவனங்கள் எண்ணிக்யையில் தொடர்ந்து வளர்வதும் நிறுவன அமைப்பு விரிவடைவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பேரளவு உற்பத்தி விரிவடைந்து கொண்டிருக்கின்றது’’ என்று கூறுகின்றார்.

### சிக்கனங்கள்:

ஒரு தொழிலின், அதைச்சார்ந்த தொழில் நிறுவனத்தின் அளவு விரிவடைகின்ற பொழுது சில சிக்கனங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய சிக்கனங்களால் உற்பத்திச் செலவு குறைகின்றது. மார்ஷல், ‘‘இந்தச் சிக்கனங்களை அகச்சிக்கனங்கள் புறச்சிக்கனங்கள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்’’ என்கின்றார்.

### அகச் சிக்கனங்கள்

ஒரு தொழில் நிறுவனம் விரிவடைகின்ற பொழுது கிடைப்பவை அகச்சிக்கனங்களாகும். இவற்றை மார்ஷல், ’’ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ள வாணிபத்தனி நிலையங்களின் சாதனைகளையும் அவற்றின் அமைப்பையும், அவற்றின் நிர்வாகத் திறமையையும் சாாந்தவை’’, என்று விளக்குகினறார்.

### புறச்சிக்கனங்கள்

ஒரு தொழில் மேலும் மேலும் வளர்ச்சியடைகின்றபொழுது அதனைச் சேர்ந்த நிறுவனங்கள் பெறுவது புறச்சிக்கனங்களாகும். இவற்றை மார்ஷல், ‘‘தொழிலின் பொதுவான வளர்ச்சியைச் சார்ந்து அபைவை’’, என்று கூறுகின்றார். புறச்சிக்கனங்கள் அந்தத் தொழிலைச்சார்ந்த எல்லா நிறுவனங்களுக்கும் கிடைக்கின்றன. ஒரு தொழில் விரிவடைவதால் போக்குவரத்து வசதிகள் பெருகுவதும், அதனால் பொருட்களின் போக்குவரத்துச்செலவு குறைவதும் புறச்சிக்கனங்களுக்கு எடுத்துக்காட்டாகும்.

# UNIT II

## நிறைவுப் போட்டியில் விலை நிர்ணயம்

ஒரு பொருளின் விலையை தேவையும் அளிப்பும் நிர்ணயிக்கின்றன. தேவை பயன்பாட்டை ஒட்டி அமைகின்றது. பல தனி உற்பத்தியாளர்களாலோ, ஓர் உற்பத்தி நிறுவனத்தாலோ அங்காடிக்கு வருகின்ற பொருட்களின் தொகுதியே அளிப்பை நிர்ணயிக்கின்றது. பல நிறுவனங்கள் பொருளை விற்பதில் ஈடுபட்டிருப்பது ஒர நிலை இதன் எதிர் நிலையாக ஒரே நிறுவனம் விற்பதனைக் கூறுகின்றோம். முதல் நிலையை நிறைவுப் போட்டி என்றும், எதிர் நிலையை முற்றுரிமை என்றும் கூறுகின்றோம். தொன்மைப் பொருளியறிஞர்கள் நிறைவுப்போட்டி நிலவுவதாகக் கருதினர். ஆதலால் விலை நிர்ணயத்தைப் பற்றிய அவர்களது ஆய்வு அந்த அடிப்படையிலேயே அமைந்தது. இவை இரண்டும் இரு எல்லைக் கோடுகளாக அமைகின்றன. ஆனால் திருமதி ஜோன் ராபின்சன் சுட்டிக்காட்டுவதைப் போல உண்மையில் நடைமுறையில் இந்த இரு நிலைகளுக்கும் இடைப்பட்ட 'நிறை குறைப் போட்டி'யைத்தான் காண்கின்றோம்.

### நிறைவுப் போட்டியின் இயல்புகள்

1. எண்ணற்ற வாங்குவோரும் விற்பனையாளரும்: நிறைவுப் போட்டி நிலவும் அங்காடியில் எண்ணற்ற வாங்குவோரும் விற்பனையாளர்களும் இருப்பார்கள். வாங்குபவர்கள் ஒவ்வொருவரும் சிறிய அளவிலேயே வாங்குவார்கள். விற்பவர்களும் தனித் தனியாகச் சிறிய அளவிலேயே விற்பனை செய்வார்கள். இதனால் எந்தத் தனிப்பட்ட வாங்கபவரோ விற்பவரோ அங்காடி விலையை மாற்ற முடியாது.
2. ஒரே சீரான பொருள்: எல்லா விற்பனையாளர்களும் விற்பனை செய்கின்ற பொருள் ஒரே தரமாக. சீராக, ஒன்றுபோல் இருக்க வேண்டும். நுகர்வோர் அந்தப் பொருட்களை எல்லாம் சமமானவைகளாவும், ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை வாங்கக்கூடியனவாகவும் கருத வேண்டும். வாங்குவார்கள் எந்த விற்பனையாளர்களின் பொருளையும் மற்றவர்களின் பொருளைவிடச் சிறப்பானதாகக் கருதமாட்டார்கள்.
3. நிறுவனங்கள் நுழைய, வெளியேறத் தடையற்ற நிலை: தனி நிறுவனங்களுக்கு அந்தத் தொழிலில் நுழையவும் வெளியேறவும் முழுமையான சுதந்திரம் இருக்கும். ஏப்பொழுது வேண்டுமானாலும் புதிய நிறுவனங்கள் தோன்றலாம். இதனால் மொத்த உற்பத்தியில் சிறிய அளவில் உற்பத்தி செய்யக் கூடிய எண்ணற்ற சிறிய நிறுவனங்கள் இருக்கும்.
4. முழுமையான அளவு: வாங்குபவர்களும் விற்பனையாளர்களும் அங்காடியின் நிலவரங்களை எல்லாம் அறிந்திருக்க வேண்டும். வாங்குபவர்கள் எல்லோருக்கும் அங்காடியின் நிலவரங்கள் எல்லாம் தெரிவதால் விளம்பரம் போன்றவற்றிற்காகப் பணத்தைச் செலவிட வேண்டியதில்லை.

5. உற்பத்திச் சாதனங்களின் தடையற்ற இடப்பெயர்ச்சி: நிறைவுப்போட்டி செவ்வனே செயல்பட உற்பத்திக் காரணிகள் எங்கு அதிக ஊதியம் கிடைக்குமோ அங்கு இடம் பெயர்ந்து, செல்லத் தடைகள் இருக்கக் கூடாது. அதேபோல ஒரு தொழிலை விட்டு வெளியேறவும் அவற்றிற்குத் தடைகளற்ற நிலை இருக்க வேண்டும்.
6. போக்குவரத்துச் செலவின்மை: நிறைவுப் போட்டி நிலவ போக்குவரத்துச் செலவு இருக்கக் கூடாது. உற்பத்தி நிறுவனங்கள் நெருங்கிய சூழ்நிலையில் செயல்பட வேண்டும் போக்குவரத்துச் செலவு இருந்தால் அதனால் விலைவேறுபாடுகள் தோன்றும். அப்பொழுதுதான் விலை வேறுபாடு தோன்றாது.
7. சோம்பலற்ற நிலை: வாங்குவோர் எங்கு குறைந்த விலைக்குப் பொருட்கள் கிடைக்கின்றதோ அங்கு சென்று வாங்கத் தயங்கக் கூடாது. ஆப்பொழுதுதான் எல்லா இடங்களிலும் ஒரே விலை இருக்கும். சோம்பலுள்ள வாங்குவோர் இருந்தால் விலை வேறுபாடு தோன்றும்.
8. சலுகை இன்மை: விற்பனையாளர்கள் வாங்குகின்றவர்களின் யாருக்கும் எந்த விதமான சலுகையும் காட்ட மாட்டார்கள். எல்லோரையும் ஒன்றுபோலவே நடத்துவார்கள். இதனால் வாங்குவோர் எந்த ஒரு தனி விற்பனையாளரிடமு் வாங்க வேண்டு மென்ற விருப்பத்தோடு இருக்க மாட்டார்.
9. விருப்பு வெறுப்பில் மாற்றமின்மை: வாங்குவோரின் விருப்பு வெறுப்புக்கள் மாறாமல் இருக்க வாங்குவோரின் விருப்பு வெறுப்புக்கள் மாறாமல் இருக்க வேண்டும். விற்பனையாளர்களால் அவற்றை மாற்றி அங்காடியில் விலையைக் கட்டுப் படுத்த முடியாது.

## நிறைவுப்போட்டியில் விலை நிர்ணயம்

நிறைவுப் போட்டியில் ஒரு பொருளுக்கு ஒரே விலை நிலவுகின்றது. இதனை வாங்குபவர்களோ விற்பவர்களோ தங்களது செயலின் மூலம் மாற்ற முடியாது. ஆதலால் எப்படி நிறைவுப் போட்டியில் விலை நிர்ணயமாகின்ற தென்பதையும் எந்நிலையில் ஒரு நிறுவனம் சமநிலையில் இருக்குமென்பதையும் அறிந்து கொள்வது தேவையாகும்.

## நிறைவுப்போட்டியில் சமநிலை

இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும் சமமாக இருக்கின்ற பொழுது ஒரு நிறுவனம் சமநிலையில் இருக்கின்ற தென்பதை விளக்கினோம் இந்நிலையில் தொழிலும் முழுச்சமநிலையில் இருக்கின்ற தென்றும் கூற முடியாது நிலவுகின்ற விலை சராசரிச் செலவைவிட அதிமாக இருக்குமானால் சில நிறுவனங்கள் இயல்பு இலாபத்திற்கும் அதிகமாக இலாபம் பெற வழியுண்டு. ஆதலால் தொழில் சமநிலையில் இருக்கின்ற நீண்டகாலத்தில் சராசரி செலவும் விலையும் சமமாக இருக்கும்.

## நிறைவுப் போட்டியில் நிறுவனங்களின் உத்தம அளவு

நிறைவுப் போட்டியில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு நிறுவனமும் உச்ச நிலையில் இயல்பு இலாபத்தைப் பெற முயல்கின்றது. உச்ச நிலையில் இலாபம் பெறுகின்ற அளவுதான்

நிறுவனத்தின் உத்தம் அளவாக இருக்கும். இந்நிலையில் இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும் சமமாக இருக்கும். ஆதலால் நிறுவனத்தின் உத்தம அளவு சராசரிச் செலவு குறைந்த அளவில் இருக்கின்ற நிலையில் அமையும்.

## முற்றுரிமை (Monopoly)

விளக்கம்:

நிறைவுப் போட்டியின் நேர் எதிர் நிலை முற்றுரிமையாகும். முற்றுரிமை என்ற சொல் விற்பனையில் போட்டியற்ற நிலையைக் குறிக்கின்றது. அங்காடியில் ஒரு விற்பனையாளர் அளிப்பைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றிருந்து, அதன் மூலமாக விலையை மாற்ற முடியுமானால் அதனை முற்றுரிமை என்கின்றோம். முற்றுரிமை நிலையிலுள்ள நிறுவனம் அதனுடைய பொருட்களுக்கு வேறுபட்ட விலைகளை நிர்ணயிக்கலாம். முற்றுரிமை நிலவ வேண்டுமானால் அதனுடைய பொருளுக்கு நெருங்கிய பதிலிப் பொருள் இருக்கக் கூடாது.

### முற்றுரிமைக்கான காரணங்கள்

1. மூலப் பொருட்களின் கட்டுப்பாடு: ஒரு பொருளை உற்பத்தி செய்ய வேண்டிய முக்கியமான மூலப் பொருளை முழுமையாகவோ, பெரும் பகுதியையோ தனது கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்கின்ற நிறுவனம் அப்பொருள் விற்பனையில் முற்றுரிமை பெற்றுத் திகழும். மூலப்பொருள் கிடைக்காததால் வேறு நிறுவனங்கள் அந்தத் தொழிலில் ஈடுபட இயலாது
2. உற்பத்தி முறையின் ரகசியம்: ஒரு பொருளை உற்பத்தி செய்கின்ற முறை ரகசியமானதாக, ஒரு நிறுவனத்திற்கு மட்டும் தெரிந்ததாக இருக்குமானால் அந்த நிறுவனம் அப்பொருள் உற்பத்தியில் முற்றுரிமை பெற்றிருக்கும்.
3. பொது நலனுக்குரியவை: பொது மக்களின் நலனுக்கேற்ற தொழில் வாணிபத் துறைகளில் முற்றுரிமை தோன்றும். எடுத்துக் காட்டாக மின்சாரம், அஞ்சல், தந்தி, ரயில், போக்குவரத்து ஆகியவற்றைச் சுட்டிககாட்டலாம்.
4. நிதித்துறை முற்றுரிமை: தனியார் துறையிடம் விட முடியாத காரணத்தால் சிலவற்றை அரசே ஏற்று நடத்துவது தேவையாகின்றது. இதனால் முற்றுரிமை தோன்ற வழியுண்டு. எடுத்துக்காட்டாகப் பணம் வெளியிடுகின்ற முற்றுரிமை அரசின் கையில் இருப்பதனைக் குறிப்பிடலாம்.
5. கூட்டமைப்புகள்: போட்யிடுகின்ற நிறுவனங்கள் தங்களுக் கிடையிலிருக்கின்ற போட்டியைத் தவிர்க்க ஒன்றாக இணையலாம். இத்தகைய இணைப்புகளின் காரணமாக முற்றரிமை தோன்றும்.

### முற்றூாமையின் குறைகளும் சிறப்புகளும்

குறைகள்: முற்றுரிமையைப் பெற்ற பல நிறுவனங்கள் மிகுந்த இலாபம் பெறும் நோக்கில் பொது நலனுக்கு எதிராகச் செயல்படுவதால், முற்றுரிமையை மக்கள் பெரிதும் விரும்புவதில்லை. முற்றுரிமையிலுள்ள குறைகளைத் தொகுத்துக் கூறலாம்.

1. மிகுந்த விலை
2. முதலீட்டாளர்களின் செல்வாக்கு
3. தொழில் நுட்ப வளர்ச்சிக்குத் தடை
4. பொருளாதாரச் சக்திகளைத் தவறாகப் பயன்படுத்துதல்
5. தவறான வாணிப முறைகள்
6. பொருளாதாரத்தில் நிலையற்ற தன்மை
7. அரசியல், பொருளாதார லஞ்சங்கள்
8. திறமைக் குறைவு
9. ஏற்றத்தாழ்வு

சிறப்புகள்

1. மிகுதியாக நிதி
2. மந்த காலத்திலும் நிலைத்தல்
3. பொதுப்பயன் துறைகளில்
4. அயல் நாட்டுப் போட்டிக்கு ஈடுகொடுக்க
5. அங்காடியை விரிவுபடுத்துதல்

## முற்றுரிமையில் விலை நிர்ணயம்

எடுகோள்கள்

1.அங்காடியில் எண்ணற்ற வாங்குபவர்கள் இருப்பார் களென்று கரதுகின்றோம். வாங்குபவர்களுக்கிடையில் போட்டி நிலவும். எந்தத் தனி நுகர்வோராலும் விலையை மாற்ற முடியாது.

2.அங்காமடியில் முற்றுரிமையாளரின் பொருளுக்கு நெருங்கிய பதிலிப் பொருள் எதுவும் இல்லையெனக் கருதுகின்றோம்.

3.முற்றுரிமையாளரின் நோக்கம் மிகுதியாக ஆதாயம் பெறுவதெனக் கொள்கின்றோம். எப்பொழுது உச்சநிலை இலாபம் கிடைக்கின்றதோ அப்பொழுதுதான் அது சம நிலையில் இருக்கும். இந்நிலையில் அதனுடைய இறுதிநிலை வருவாயும் இறுதிநிலைச் செலவும் சமமாக இருக்கும்.

## நிறைவுப் போட்டியும், முற்றுரிமையும்

1. நிறைவுப்போட்டி முற்றுரிமையின் நேர் எதிரான நிறைலயாகும். எண்ணற்ற விற்பனையாளர்களையும் வாங்குபவர்களையும் கொண்ட நிறைவுப் போட்டியில் ஒரு பொருளின் தேவை அளிப்புச் சக்திகளின் அடிப்படையில் விலை நிாணயிக்கப் பெறும். இந்த விலையைப் போட்டியிடுகின்ற எந்தத் தனி நிறுவனமும் மாற்ற முடியாது. விற்பனையடுகின்ற எந்தத் தனி நிறுவனமும் மாற்ற முடியாது. விறபனையாகின்ற பொருள் ஒரியல்பானதாக இருப்பதால் நிலவுவதும் ஒரே விலையாக இருக்கும்.

2. சராசரி வருவாய்க்கோட்டின் உருவம் நிறைவுப் போட்டியிலும் வேறுபடுகின்றன. நிறைவுப் போடியில் சராசரி வருவாய்கோடு OX அச்சுக்கு இணை நோகோடாக இருக்கும். ஏனென்றால் நறைவுப் போட்டீயில் பொருளின் தெவை முற்றிலும் நெகிழ்ச்சியுடையதாக இருக்கும்.

3. நிறைவுப் போட்டியில் நிறுவனம் சமநிலையை அடையக் வுடிய உற்பத்தியளவுக்கருகில் இறுதிநிலைச் செலவுக்கோடு உயர வேண்டும். இறுதிநிலைச் செலவுக்கோடு உயர வேண்டும். இறுதிநிலை வருவாய்க் கோட்டை இறுதிநிலைச் செலவுக்கோடு கீழிருந்து மேலேறி வந்து வெட்ட வேண்டும்.

4. உற்பத்தி அளவிலமு் முற்றுரிமைக்கும் நிறைவுப் போட்டிக்கும் வேறுபாடு உண்டு. நிறைவுப் போட்டியில் ஒரு நிறுவனம் அதனுடைய விலை ஊற்பத்திச் சேலவுக்குச் சமமாகும் அளவில் பொருளை உற்பத்திச் செய்யும். ஆனால் முற்றுரிமையில் இறுதிநிலைச் செலவு விலைக்குக் குறைவாக இருக்கின்ற நிலையில் உற்பத்தியளவு அமைகின்றது.

5. இலபாத்திலும் நறைவுப் பொட்டிக்கும் முற்றுரிமைக்கும் இடையில் வேறுபாடு இருக்கின்றது. நீண்டகாலத்தில் நிறைவுப்போட்டியில் இயல்பு இலாபம் மட்டும்தான் கிடைக்கும். ஆனால் முற்றுரிமை நிறுவனம் குறுகிய காலத்தில் மட்டுமல்லாமல் நீண்ட காலத்திலும் மிகுதியாக இலாபம்

## Theories of Wages, Interest, rent and Profit

### கூலிக் கோட்பாடுகள்

ஊழைப்புக்குக் கிடைக்கின்ற கூலி எப்படி நிர்ணயிக்கப் பெறுகின்றதென்பதை விளக்க நீண்டகாலமாகவே பலவகையான கோட்பாடுகள் உருவாக்கப் பெற்றுள்ளன. ஆனால் அவற்றில் ஒன்று கூட முழுமையானதென்ற கொள்ளத்தக்க அளவில் இல்லை. தோன்மையான கோட்பாடுகளை அராய்ந்தறிவது கூலி பற்றிய இன்றைய கோட்பாட்டைப் புரிந்துகொள்ள உதவும்.

#### பராமரிப்புக் கூலிக்கோட்பாடு

பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த “இயற்கை வாதிகள்” அல்லது பிசியோகிராட்ஸ்’ என்னும் பிரெஞ்சுப் பொருளியலறிஞர்கள் முதல் முதலில் இந்தக் கோட்பாட்டை உருவாக்கினார்கள். பின்னால் லஸ்ஸேல் என்ற ஜெர்மானியப் பொருளியலறிஞர் மேலும் இக்கோட்பாட்டை வளப்படுத்தினார் அவர் இதனைக் “கூலி பற்றிய இரும்பு விதி அல்லது உறுதியான விதி” என்று குறிப்பிட்டார்.

பராமரிப்புக் கூலிக்கோட்பாட்டைப் பேராசிரியர் கேனன்,” “கூலி பற்றிய கரடு முரடான பராமரிப்புக் கோட்பாடு” என்று வர்ணிக்கின்றார். கூலனி மாறாமல் இருக்கின்ற ஓரளவு என இக்கோட் பாடு கூறுவதால் கேனன் இப்படிக் கூறுகின்றார். மக்கள் தொகை, உணவு

உற்பத்தியை விடக் கூடிய வேகத்தில் அதிகரிக்குமென்று கருதப் பெறுகினறது. இந்தக் கோட்பாடு உழைப்பை ஒரு பொருளாகக் கருதுகின்றது.

**திறனாய்வு**

1. **தவறான எடுக்கோள்**

   பராமரிப்புக் கூலி கோட்பாடு கூலி கூடினால் பிறப்பு விகிதமும் அதன் வழி மக்கள் தொகையும் கூடுமென்ற தவறான எடுகோளின் அடிப்படையில் உருவாக்கப் பெற்றிருக்கின்றது. இத மால்தசின் கோட்பாட்டை ஒட்டிய கருத்தாகும்.

2. தேவையைப்புறக்கணித்தல்:

   இக்கோட்பாடு கூலியை உழைப்பின் அளவு மட்டும் நிர்ணயிப்பதாகக் கருதுகின்றது. ஆனாலர் உண்மையில் எப்பொருளாக இருந்தாலும் அதனுடைய விலையைத் தேவையும், அளிப்பும் சேர்ந்து நிர்ணயிப்பதைப் பாக்கின்றோம்.

3. நம்பிக்கையற்ற கோட்பாடு:

   இது தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஒளிமயமான எதிர்காலம் இரக்குமென்ற நம்பிக்கைக்கே இடமற்றமாக இருக்கின்றது. தொழிலாளர்களின் அக்கத்திறன் உயர்வதாலோ, பொரளாதார முன்னேற்றத்தாலொ அவர்களின் வாழ்க்கையில் வளம் ஏற்படுமென்ற நம்பிக்கையைத் தோற்றுவிக்காததாக இக் கோட்பாடு இருக்கின்றது.

4. உழைப்பாற்றலைப் புறக்கணித்தல்:

   இக் கோட்பாடு தொழிலாளர்களின் ஆற்றலை முற்றிலும் புறக்கணிக்கின்றது. தோடர்ந்து பராமரிப்பு நியைிலேயே கூலி கிடைக்குமானால் உழைப்பாளர்களின் அற்றல் குறையும். உழைப்பாளர்களின் ஆற்றல் வளர்கின்றபொழுது ஆக்கத்திறன் கூட, கூலியும் உயரும்.

5. கூலியிலுள்ள ஏற்றத்தாழ்வை விளக்காமை:

   தொழிலாளர்கள் தங்களது வாழ்க்கைக்குத் தேவையானதை மட்டும் கூலியாகப் பெறுவதாயிருந்தால். எல்லோரும் ஒரே அளவுக் கூலி தான் பெற வேண்டும். ஆனால் நடைமுயையில் வேறுபடுகின்றது. இதனை இக்கோட்பாடு விளக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

6. தொழிலாளர் சங்கங்களின் செல்வாக்கைப் புறக்கணித்தல்:

   இந்தக் கோட்பாடு 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உரவாக்கப் பெற்றத. அப்பொழுது தொழிலாளா் சங்கங்களின் முற்றசிகளுக்கு முதலாளிகள் எதிராக இருந்தனா். தோழிலாளா் சங்கங்கள் அப்பொழுது செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை.

7. வரலாற்றின் அடிப்படையில் தவறு:

   இக்கோட்பாடு வரலாற்றின் அடிப்படையில் தவறானதாகும். உலகெங்கும் மக்கள் தொகை கூடிக்கொண்டே போகின்ற பொழுது கூலியும் உயர்ந்து வந்திருப்பதை வரலாறு காட்டுகின்றது.

## கூலி நிதிக் கோட்பாடு

கூலி நிதிக்கோட்பாட்டிற்கு ஜான் ஸ்டுவா்ட் மில் முழுவடிவம் கொடுத்தார். புராமரிப்புக் கூலிக் கோட்பாட்டை விட முன்னேற்றமான தென்று இதனைக் கருதலாம். ஏனென்றால். இது உழைப்பு தேவையையும் அளிப்பையும் கணக்கில் எடுத்துக் கொள்கின்றது. மில் ''கூலி தேவையையும் அளிப்பையும் சார்ந்திருக்கின்றது''. என்று குறிப்பிடுகின்றார்.

இக்கோட்பாடு மூலதனத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியைக் கூலிகொடுக்க ஒதுக்கி வைப்பார்களென்று கருதுகின்றது. இந்தப் பணம் தான் கூலி செலத்தப் பயன்படுகின்றது. இந்த கோட்பாட்டின் பழ இப்படி ஒதுக்கப் பெற்ற கூலி நிதி நலையாக இருக்கின்றது. இந்த நிதிதான் உழைப்புக்குத் தேவையாக உரவெடுக்கின்றது உழைப்பின் அளிப்பு கூலிக்காக வேலை செய்ய விரும்புகின்ற எல்லாத் தொழிலாளர்களையும் குறிக்கின்றது.

**திறனாய்வு**

1. கூலி நிதி நிலையான தல்ல: இக்கோட்பாடு கூலி நிதி நிலையானதாக இருக்கமென்று கருதுகின்றத. ஆனால் நடைமுறையில் கூலி நிதி நிலையானதாக இருப்பதில்லை. கூலி நிதி என்று தனியாக ஒதுக்கி வைப்பதில்லை. முாறிக் கொண்டிருக்கின்ற நாட்டின் மொத்த வருவாயிலிருந்து தான் கூலி கொடுக்கப்படுகின்றது. தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் திறமையையும் கணக்கி லெடுக்காமல் கூலி நிதி ஒதுக்கப்படுவதாகக் கரதவது உண்மைக்குப் புறம்பானதாகும்.
2. கூலி நிதியைத் தீா்மானித்தல்: கூலி நிதியை மொத்தத் தொழிலாளா்களின் எண்ணிக்கையால் வகுத்தால் கூலியின் அளவை அறியலாமென்று இக்கோட்பாடு கூறுகின்றது. ஆனால் கூலி நிதி எப்படித் தோன்றுகின்ற தென்றோ அதனை எப்படி மதிப்பிடுவ தென்றோ இக்கோட்பாடு கூற வில்லை.
3. உற்பத்தித் திறனைப் புறக்கணித்தல்: இக்கோட்பாடு உழைப்பிற்குத் தேவை நிலையானதாக இருக்கமென்று கருதுகின்றது. உழைப்பின் தேவை அதன் ஆக்கத்திறனை ஒட்டி அமைவதையும், ஆக்கத்திறன் மாறிக் கொண்டிருப்பததையும் இக்கோட்பாடு புறக்கணித்து விட்டது.
4. முரண்பாடு: இக்கோட்பாடு தா்க்க ரீதியில் முரண்பாடுடையதாக இருக்கின்றது. இதன்படி முதலில் கூலி நிதியும். பின் கூலியும், வேலை செய்கின்றவா்கள் எண்ணிக்கையும் தெரிந்தால் தான் கூலி நிதியைக் கணக்கிட இயலும்.
5. உண்மைக்குப் புறம்பானது: கூலி நிதிக்கோட்பாடு நடைமுறைக்குப் புறம்பானதாக இருக்கின்றது. கூலி நிா்ணயத்திலுள்ள பல இயல்புகளை விளக்கவில்லை. எடுத்துக்காட்டாகக் கூலி நிதி கூடாமலோ, மக்கள்தொகை குறையாமலோ இருக்கின்றபொழுது தொழில் முயல்வோர்களுக்கிடையில் இருக்கின்ற போட்டியின் காரணமாகக் கூலி உயா்த்தப் படுவதைக் காணலாம்ட பலவற்றை இக் கோட்பாடு விளக்க வில்லை.

6. கூலி வேறுபாட்டை விளக்காமை: கூலியில் வேறுபாடு இருப்பதற்கான காரணங்களை இந்தக்கோட்பாடு விளக்கவில்லை. தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உழைப்பின் அளவைக் கவனிக்கின்றதே தவிர, உழைப்பின் தன்மையை ஆராய வில்லை.
7. தவறான எடுகோள்கள்: இக்கோட்பாடு தவறான எடுகோள்களின் மீது உரவாக்கப் பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாகக் கூலி கூடனால் இலாபம் குறையுமென்று இக்கோட்பாடு கருதுகின்றது.
8. உழைப்பின் அளிப்பிற்கு அதிக முக்கியத்தவம்: இந்தக் கோட்பாடு உழைப்பின் அளிப்பிற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்றது. உழைப்பிற்குரிய தேவை மாறாமலிருக்கும் மென்று தவறாகக் கரதுகின்றது.

## மிச்ச உரிமையர் கோட்பாடு

இந்தக் கோட்பாட்டை அமெரிக்கப் பொருளியல் வல்லுநரான 'வாக்கர்' அளித்துள்ளார். தோழிலாளர்கள் நிலம், முதல், அமைப்பு ஆகியவற்றொடு சேர்ந்து பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள். உற்பத்தி செய்த பொருட்களை விலைக்கு விற்கின்றனர். விற்று வருகின்ற வருவாயில் நிலக்கிழாருக்கு வாரமும். முதல் அளித்தவருக்கு வட்டியும். ஆமைப்பாளருக்கு இலாபம் கொடுக்கப் பெறுகின்றன. வூக்கரின் கருத்துப்படி வாரம், வட்டி. இலாபம் ஆகியவை திட்டவட்டமான விதிகளால் நிர்ணயிக்கப் பெறுகின்றன.

இந்தக் கோட்பாட்டின்படி தொழிலாளர்கள் திறமையாக உழைத்து உற்பத்தியைக் கூட்டினால் கூலி அதிகமாக கிடைக்கும். இந்த வகையில் இந்தக் கோட்பாடு தொழிலாளர்களுக்குக் கூலியைக் கூட்ட முடியுமென்ற நம்பிக்கையை அளிக்கின்றது.

**திறனாய்வு**

1. மற்றைய காரணிகளுக்கு அளித்தத போக எஞ்சியிருப்பதை உழைப்புப் பெறுவதில்லை. தோழில் முயல்வோர்கள் தான் எச்ச வருவாயைப் பெறுகின்றனர். ஊற்பத்தியான பொருட்களை விற்பதற்கு முன்பே தொழிலாளர்களுக்குக் கூலி தரவேண்டியுள்ளது. வாரமும் வட்டியும் கொடுத்தது போக எஞ்சுவது இலாபமாக இருக்கின்றது.
2. இந்தக் கோட்பாடு தொழிலாளர் சங்கங்களால் எப்படிக் கூலியை உயர்த்த முடிகின்றதென்பதை விளக்க வில்லை.
3. இக்கோட்பாடு கூலி நிர்ணயத்தில் அளிப்பிற்குரிய பங்கைக் கணக்கிலெடுத்துக் கொண்டு ஆராயவில்லை.
4. தேவை அளிப்புக்கோட்பாடு, வாரம், வட்டி, இலாபம் ஆகியவற்றைத் தீர்மானக்கப் பயன்படுகின்றதென்றால் அந்தக் கோட்பாட்டையே பயன்படுத்திக் கூலியையும் தீர்மானிக்கலா மென்று கூறப் பெறுகின்றது.

## இறுதிநிலை ஆக்கத்திறன் கூலிக் கோட்பாடு

இறுதிநிலை ஆக்கத்திறன் கூலிக்கோட்பாடு உழைப்பின் இறுதிநிலை ஆக்கத்திறனுக்குச் சமமாக கூலி இருக்கு மென்று கூறுகின்றது. முதன் முதலில் இக்கோட்பாட்டினை வில்லியம் பெட்டி என்பவர் விளக்கினார். ஆவரைத் தொடர்ந்து ஜெவான்ஸ், லாங்பீல்டு ஆகியோரால் மேலும் வளப்படுத்தப் பெற்ற இக்கோட்பாடு அமெரிக்கப் பொருளியலறிஞரான கிளார்க், இங்கிலாந்துப் பொருளியலறிஞரான விக்ஸ்டீடு ஆகியோரால் முழுவடிவம் பெற்றுத் திகழ்கின்றது.

**எடுகோள்கள்:**

1. இறுதிநிலை ஆக்கத்திறன் கோட்பாடு சில எடுகோள்களின் அடிப்படையில் உருவாக்கப் பெற்றுள்ளத. முதலாவதாக, உற்பத்திக் காரணியான உழைப்பு அங்காடியில் நிறைவுப் போட்டி நிலவுகின்றத.
2. இரண்டாவதாக செய்த பொருட்களை விற்பனை செய்கின்ற அங்காடியில் நிறைவுப் போட்டி இருக்கின்றது.
3. மூன்றாவதாக, உற்பத்திக் காரணியான உழைப்பு முழுமையாக உற்பத்தியில் ஈடுபடுத்தப் பெறுகின்றத. வேலை நிறைவுள்ள நிலையில் எல்லாத் தொழிலாளர்களும் ஒரே அளவான கூலியைப் பெறுவார்கள்.
4. நான்காவதாக, ஒரே திறமையுடையவர்களாக உழைப்பவர்கள் இருக்கின்றனர்.
5. எல்லோரும் வேைல செய்கின்ற கால அளவு ஒன்றுபோல இருக்கும்.
6. உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட நிலைக்குப்பின் குறைந்த செல் விளைவுவிதி செயல் படுவதைக் காணலாம்.
7. உழைப்பு எந்த வகையான தடங்கலுமின்றி இடம் பெயர்கின்றது.
8. மற்றைய எல்லாக் காரணிகளும் மாறாமலிருக்கின்றன. உழைப்பு மட்டம் மாறுகின்றது.

## வட்டி (INTEREST)

பொருளியல் கோட்பாட்டில் வட்டி மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. நடைமுறையில் வட்டியின் முக்கியத்தவம் கூடி வருகின்றது. வாணிப. தொழில் நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்துவதற்கே வட்டி இருக்கின்றது. பண நிர்வாகத்தினர் வட்டியின் மூலமாக விலையையும், வாணிப நடவடிக்கையையும் நெறிப் படுத்தவதைக் காண்கின்றோம்.

**விளக்கம்**

பணத்தை பெற்றுப் பயன்படத்துவதற்காக வட்டி கொடுக்கின்றனர். இது முதலுக்குரிய ஊதியமாகும். இதனைப் பல்வெறு வகைகளில் பொருளியலறிஞர்கள் விளக்குகின்றனர். மார்ஷல், ‘‘கடனைப் பயன்படுத்துவதற்குக் கடனை வாங்கியவர் கொடுப்பதைக் கடனில் எந்த விகிதத்தில் அமைந்திருக்கின்ற தென்று கூறுவது வட்டியாகும். இந்தச் சொல்லை மிக விரிந்த பொருளில் பயன்பாடுத்தினால் முதலுக்குக் கிடைக்கின்ற மொத்த வருவாயின் பண மதிப்பை இது குறிக்கும்’’, என்று கூறுகின்றார்.

பேராசிரியா் விக்செல் ''வட்டியை முதலினுடைய ஆக்கத்திறனுக்காக அதற்குரியவரின் துய்ப்புத்தவிா்ப்புக்குப் பரிசாகக் கடன் வாங்கியவா் செலுத்துவது'' என்று கூறுகின்றாா். பேராசிரியா் மேயா்ஸ் ''கடன் நிதியைப் பயன்படுத்துவதற்காகக் கொடுக்கின்ற விலைதான் வட்டி'', என்கின்றாா். பேராசிரியா் கீன்ஸ் வட்டியை முழுமையாகப்பணத்தோடு தொடா்பு கொண்ட ஒன்றாகக் கருதுகின்றாா். ஆவா் சொத்தைப் பணமாகப் பதுக்கி வைக்காமல் வேறு வகையில் வைத்துக்கொள்ளும் படி மக்களைத் துண்டும் வகையில் ஊக்கத்தொகையாகக் கொடுப்பது என்று வட்டிக்கு விளக்கம் தருகின்றாா்.

## வட்டி வேறுபாடு

1. ஓரியல்பான அங்காடியின்மை: பண அங்காடி ஓரியல்பாக அமைவதில்லை. ஆதில் பலவகையான குழுக்கள் இருக்கின்றன. ஓவ்வொரு வகையான குழுவினரும் ஒவ்வொரு வகையான கடனில் ஈடுபாடு காட்டுகின்றனா். எடுத்துக்காட்டாக, வேளாண்மைக்குக கடன் கொடுப்பவா்கள், தொழில் கடன் கொடுப்பவா்கள், நகை ஈட்டின் பேரில் கடன் கொடுப்பவா்கள் என்று பலவகையினா் உள்ளனா். ஓவ்வொரு வகைக் கடனுக்குள்ள பணமும் மற்றவகைக் கடனுக்குச் செல்வதில்லை. இதனால் ஒவ்வொரு கடனிலும் ஒவ்வொரு வகை வட்டி வீதம் நிலவுகின்றது.
2. கடனின் காலம்: கடன் கொடுக்கின்ற காலத்தை ஒட்டி வட்டி வீதம் அமைகின்றது. நீண்டகாலத்திற்குக் கடன் கொடுக்கின்றவா்கள் அதிக வட்டி வாங்குவாா்கள். ஏனென்றால் அந்தப் பணம் நீண்டகாலத்திற்கு அவா்களுக்குக் கிடைக்காது.
3. கடனுக்குரிய ஈடு: வட்டி வீதம் கடனுக்குக் கொடக்கின்ற ஈட்டை ஒட்டியும் அமைகின்றது. உடனே பணமாக மாற்ற முடியாத நிலம் போன்றவற்றை ஈடாகக் கொடுத்தால் வட்டி அதிகமாக இருக்கும். ஏப்பொழுதும் பணமாக மாற்றக் கூடிய தங்கநகை, அரசுப் பத்திரம் போன்றவற்றை ஈடாகக் கொடுக்கின்ற பொழுது வட்டி குறைவாக இருக்கும்.
4. இடத்திற்கு இடம்: இடத்திற்கு இடம், நாட்டிற்கு நாடு வட்டி வீதம் வேறுபடுகின்றது. ஏனென்றால் கடனுக்குரிய தேவையும் அளிப்பும் நாட்டிற்கு நாடு, இடத்திற்கு இடம் வேறுபடுகின்றன. மேலும் ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு முதல் இடம் பெயா்ந்து செல்வதில் பல சிக்கல்கள் இருக்கின்றன.
5. அங்காடியின் நிலை: அங்காடியில் நிறைவப் போட்டி நிலவினால் வட்டி குறைவாக இருக்கும். நிறைகுறைப் போட்டி இருந்தால் வட்டி அதிகமாக இருக்கும்.
6. முதலின் ஆக்கத்திறன்: கடன் வாங்கி உற்பத்தியில் ஈடு படுத்துகிற முதலின் ஆக்கத்திறன் அதிகமாக இருந்தால் வட்டிவீதம் அதிகமாக இருக்கும். முதலின் ஆக்கத்திறன் குறைவாக இருந்தால் கடன் வாங்குவோா் குறைந்த வட்டிதான் கொடுக்க முன் வருவாா்கள்.

7. கடன் வாங்குவோர் சமுதாய மதிப்பு: சமுதாயத்தில் அரசியல், பொருளாதாரச் செல்வாக்குப் பெற்றவர்களால் குறைந்த வட்டிக்குக் கடன் பெற முடியும். மற்றவர்களால் அதிக வட்டி கொடுத்துதான் கடன் பெற முடியும்.
8. கடனைத் திரும்பப் பெறும் முறை: கடனை எப்படித் திரும்பச் செலுத்துவார்கள் என்பதை ஒட்டியும், வட்டி விகிதம் குறைவாக இருக்கும். கொடுக்கின்ற பணம் பொருளாகக் காலம் தாழத்திக் கிடைக்குமானால் வட்டி விகிதம் அதிகமாக இருக்கும்.

## வட்டி பற்றிய கோட்பாடுகள்

இருவகை: வட்டி பற்றிப் பலவகையான கோட்பாடுகள் உருவாக்கப் பெற்றுள்ளன. அவற்றை இருவகைகளாகப் பிரிக்கலாம்.

(அ) முதல் வகைக் கோட்பாடுகள் எதற்காக வட்டி கொடுக்கப் பெறுகின்றதென்பதையும்.

(ஆ) இரண்டாம் வகைக் கோட்பாடுகள் எப்படி வட்டி வீதம் நிர்ணயிக்கப் பெறுகின்ற தென்பதையும் விளக்குகின்றன.

(அ) 1.ஆக்கத்திறன் கோட்பாடு

2. துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு
3. காலக்கழிவுக் கோட்பாடு
4. கால விருப்பக் கோட்பாடு

5.நீர்மை விருப்பக் கோட்பாடு

1.ஆக்கத்திற்ன கோட்பாடு

ஆக்கத்திறன் கோட்பாட்டை முதலில் இயற்கைப பொருளியலறிஞர்களும் பின்பு லாடர்டேல் என்பவரும் விளக்கினார்கள். இந்தப் பழைய பொருளியலறிஞர்கள் நிலத்திலிருக்கின்ற ஆக்கத்திறனைப் போன்றே முதலிலும் ஆக்கத்திறன் இருப்பதாகக் கருதினர்.

2.துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு

மிகப்பழைய: வட்டிக்கோட்பாடுகளில் ஒன்று துய்ப்புத் தவிர்ப்பு வட்டிக்கோட்பாடாகும் இதனைப் பின்னால் ‘‘காத்திருத்தல் கோட்பாடு’’ என்று கூறினார்கள். ஆக்கத்திறன் கோட்பாடு வட்டியைத் தேவைப் பக்கமிருந்து விளக்குகின்றது. ஆனால் துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு அளிப்பு நோக்கில் வட்டியை விவரிக்கின்றது.

3.காலக்கழிவுக் கோட்பாடு

காலக் கழிவுக் கோட்பாட்டை உள இயல் கோட்பாடு என்றும் கூறுவார்கள். இதனை முதன் முதலாக 1883 இல் ஜான்ரி என்பவர் கூறினார். ஆனால் இதனை ஆஸ்திரியப் பொருளியலறிஞரான போம் பாவர்க் என்பவர் செம்மைப்படுத்தி வளப்படுத்தினார். பின்னால் அமெரிக்கப் பொருளியலறிஞர்களான பிஷர் போன்றவர்கள் இக்கோட்பாட்டில் சிலவற்றை இதனைச் செல்வாக்குப் பெறச் செய்தனர்.

4.கால விருப்பக் கோட்பாடு

போம்பாவர்க்கின் காலக் கழிவுக் கோட்பாட்டின்' அடிப்படையில் அக்கோட்பாட்டில் சில மாறுதல்களைச் செய்து பிஷர் தனது கால விருப்பக் கோட்பாட்டை உருவாக்கியுள்ளார்.

5.நீர்மை விருப்பக் கோட்பாடு

ஏதற்காக வட்டி கொடுக்கப் பெறுகின்றதென்பதைக் கீன்ஸ் அவரது நீர்மை விருப்பக்கோட்பாட்டின் மூலம் விளக்குகின்றார். அவருடைய கருத்துப்படி மக்கள் ரொக்க விருப்பத்தை வைத்துக்கொள்ள விரும்புகின்றார்கள். இந்த ரொக்க விருப்பத்தை அவர்கள் விட்டுக்கொடுக்க வட்டி கொடுக்க வேண்டியுள்ளது. இத்தகைய விருப்பம் அதிகமாக இருந்தால் வட்டி விகிதம் அதிகமாகவும் விருப்பம் குறைவாக இருந்தால் வட்டி விகிதம் குறைவாகவும் இருக்கும். இந்தக் கோட்பாட்டை எப்படி வட்டி நிர்ணயிக்கப் பெறுகின்றதென்ற பகுதியில் பின்னால் விரிவாக ஆராயலாம்.

## கடன் நிதிக் கோட்பாடு

கடன்நிதி வட்டிக் கோட்பாட்டைப் புதிய தொன்மைக் கோட்பாடு என்று கூறலாம். இதனை முதன் முதலில் ஸ்வீடன் நாட்டுப் பொருளியலறிஞரான நட்விக் செல் விளக்கினார். பின்னால் பெர்டில் ஓஹ்லின் எரிக் லிந்ததால் குன்னார் மிர்தால் ஆகியோர் இக்கோட்பாட்டை வளப்படுத்தினர். இங்கிலாந்தின் பொருளியலறிஞரான சர் டேன்னீஸ் ராபர்ட்சன் இக்கோட்பாடு மேலும் வளரத் துணை செய்தார்.

**கோட்பாடு**:

கடன் நிதிக் கோட்பாட்டின்படி வட்டி விகிதத்தைக் கடன் நிதிக்குரிய தேவையும் அளிப்பும் நிர்ணயிக்கின்றன. கடன் நிதி என்பது ஒரு குறிப்பிட்ட வட்டி விகிதத்தில் கடன் தரவும் கடன் பெறவும் விரும்புகின்ற பணத்தின் அளவாகும். இது தொன்மை வட்டிக் கோட்பாட்டிலிருந்து முன்னேற்றம் அடைந்த ஒன்று. தேவைக்கும் அளிப்பிற்கும் இங்கு விரிந்த பொருள் கொள்ளப் பெறுகின்றது.

**கடன் நிதித் தேவை**:

கடன் நிதித் தேவை மூன்று காரணங்களால் எழுகின்றது. முதலாவதாக, நுகர்வுக்குப் பணம் தேவை பெறுகின்றது. இரண்டாவதாக, பதுக்க அல்லது ரொக்கமாக வைத்திருக்க மக்கள் பணத்தை விரும்புகின்றனர். மூன்றாவதாக, முதலீடு செய்யப் பணம் தேவைப் பெறுகின்றது.

1. நுகர்வு: மக்கள் தங்களது நுகர்வுக்காகக் கடன் பெறுகின்றனர். நுகர்வோர்கள் தங்களிடமுள்ள பணத்தைக் கொண்டு தங்களது விருப்பங்களை நிறைவு செய்ய முடியாத நிலையில் கடன் பெறுகின்றனர். கடனுக்கான இத்தகைய விருப்பம் மிகவும் வலிமை வாய்ந்ததாக இருக்கும்.
2. பதுக்கல் அல்லது ரொக்கமாக வைத்திருத்தல்: மக்கள் தங்களிடம் ரொக்கமாக ஓரளவு பணம் வைத்திருக்க வேண்டுமென்று விரும்புகின்றார்கள். இந்தப் பணத்தை நல்ல வட்டி கிடைக்குமானால் அவர்கள் கடன் தர விரும்பலாம்.

3. முதலீடு: தொழில். வுாணிபம் ஆகியற்றில் முதலீடு செய்யக் கடன் வாங்குவார்கள். மிக இலாபம் தருகின்ற துறைகளில் முதலீடு செய்ய விரும்புகின்றவர்கள் கடன் வாங்குவார்கள். ஒரு நிறுவனத்தின் பங்கில் முதலீடு செய்வதோ, வங்கியில் வைப்பு நிதியாகப் போட்டு வைப்பதோ வட்டி பெற வேண்டுமென்ற நோக்கத்தில் நடை பெறுகின்றன.

## நீர்மை விருப்பக் கோட்பாடு

தொன்மைப் பொருளியலறிஞர்களின் 'உண்மைக் கோட்பாட்டிற்கு' மாறாகக் கீன்ஸ் தனது பணவியல் வட்டிக் கோட்பாட்டை உருவாக்கியுள்ளார். இக்கோட்பாட்டை 'நீர்மை விருப்பக் கோட்பாடு' என்று கூறுகின்றோம். இக் கோட்பாட்டை கீன்ஸ் அவரது புகழ்பெற்ற ஈடு இணையற்ற, "வேலை, வட்டி, பணம் ஆகியவற்றின் பொதுக் கோட்பாடு", என்னும் நூலில் விளக்குகின்றார்.

**கோட்பாடு:**

நீர்மை விருப்பக் கோட்பாடு ஒரு பணவியல் கோட்பாடாகும். ஏனென்றால் பணத்திற்காகப் பணத்தால் செலுத்தப் பெறுகின்ற வட்டி குறித்து அது ஆராய்கின்றது. கீன்ஸ் தனது கோட்பாட்டின் மூலம் வட்டி பற்றிய இரு கோட்பாடுகளுக்கு விடை தருகின்றார். முதலாவதாக, வட்டி எதற்காகக் கொடுக்கப் பெறுகின்ற தென்ற கேள்விக்கு, மக்களை அவர்களுடைய ரொக்கம் அல்லது நீர்மை விருப்பத்தை விட்டுக் கொடுக்கும் படி செய்ய என்றும்; வட்டி விகிதம் எப்படி நிர்ணயிக்கப் பெறுகின்ற தென்ற கேள்விக்கு, பண அளிப்பும் பணத் தேவையும் வட்டியை நிர்ணயிக்கின்றனவென்றும் கூறுகின்றார்.

**பணத்தேவை**:

பணத்தின் தேவைப் பக்கத்தைப் பொறுத்த வரை வட்டி விகிதத்தைச் சமுதாயத்தின் ரொக்க விருப்பம் நிர்ணயிக்கின்றது. ஒவ்வொருவருக்கும் ரொக்கப் பணம் தேவைப் பெறுகின்றது. ஏனென்றால் ரொக்கம் ஒரு முக்கியமான சொத்தாகும்.

கீன்ஸ் பணத்தேவைக்கு 1) பேரநோக்கு 2) முன்னெச்சரிக்கை நோக்கு 3) ஊக நோக்கு என்று மூன்று நோக்கங்களைக் கூறுகின்றார்.

1. பேர நோக்கு:

   தனிமனிதர்களிடம், நிறுவனங்களிடம் பேரநோக்கத்தோடு ரொக்கமாகப் பணத்தை வைத்திருக்கும் விருப்பம் இருக்கின்றது. இதனை பிஷரும் வலியுறுத்துகின்றார். ஒவ்வொரு நாளும் பல பேர வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியுள்ளது. ஒரு பொருளாதாரத்தில் பேர நோக்கில் வைத்திருக்கும் ரொக்கப் பணத்தின் அளவு, நாட்டு வருவாய், வேலைவாய்ப்பு, பொது விலை நிலை ஆகியற்றை ஒட்டி அமைகின்றது.

2. முன்னெச்சரிக்கை நோக்கு:

   ஏதிர்பார்க்கக் கூடிய நடைமுறைச் செலவுக்குக் கையில் ரொக்கமாகப் பணம் வைத்திருப்பதோடு கூட, எதிர்பாராத அவசரச் செலவுக்காக முன்னெச்சரிக்கையாக ஓரளவு ரொக்கப் பணம் வைத்திருப்பதும் தேவையாகின்றது. முன்னெச்சரிக்கை

நோக்கத்திற்காக வைத்திருக்கின்ற பணம் ஆளுக்கு ஆள், நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபடுகின்றது.

3. ஊக நோக்க:

மக்கள் சொத்துக்களின், பத்திரங்களின் விலை எதிர்காலத்தில் எப்படி இருக்கு மென்று ஊகிக்கின்றனர். எந்தப் பத்திரங்களின் விலை கூடுமென்று எதிர்பார்க்கின்றனர். எந்தப் பத்திரங்களின் விலை கூடுமென்று எதிர்பார்க்கின்றார்களோ அவற்றைப் பத்திரங்களாக வைத்திருப்பார்கள்.

## இலாபம்(Profit)

இலாபம் - விளக்கம்

தனித்தன்மைகள்: இலாபம் தொழில் முயல்வோருக்கு அல்லது அமைப்புக்குக் கிடைக்கின்ற ஊதியமாகும். இலாபத்தை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். நன்கு புரிந்து கொள்ளத் தொழில் முயல்வோரின் தனித் தன்மைகளை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக, தொழில் முயல்வோர் மற்றைய எல்லா உற்பத்திக் காரணிகளையும் இணைத்து அமைத்து, உற்பத்திக் காரணிகள் பயனற்றுப் போகலாம். இரண்டாவதாக, மற்றைய உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, முதல் ஆகியவற்றை வாரத்திற்கு. கூலிக்கு வட்டிக்குப் பெறலாம். தொழில் முயல்வோரை, அல்லது அமைப்புத் திறனை ஊதியத்திற்குப் பெற முடியாது. மூன்றாவதாக, மற்றைய உற்பத்திக் காரணிகளுக்குரிய ஊதியம் திட்டவட்டமாக, முன் கூட்டியே முடிவு செய்யப் பெற்று விடுகின்றது. ஆனால் அமைப்புக்குக் கிடைக்கும் ஊதியம் உறுதியற்றதாக இருக்கின்றது. மேலும் அமைப்பாளர் எதிர்மறை ஊதியமாக நடத்தையும் ஏற்க வேண்டியதிருக்கின்றது.

இலாபம் - சொல் விளக்கம்:

இலாபம் என்ற சொல்லை பல்வேறு பொருளில் பயன்படுத்துகின்றனர். இதனைப் பேராசிரியர் நைட், ''ஒரு வேளை பொருளாதார விவாதத்தில் இலாபம் என்ற சொல்லைப் போன்று வேறு எந்தச் சொல்லும் மிகவும் பயன்படுத்தப்பட்டிருக்காது'', என்று கூறுகின்றார்.

பொதுவாக இலாபம் என்ற சொல்லைத் தொழில், வாணிப நிறுவனங்களின் உரிமையாளர்கள் பெறுகின்ற ஊதியத்தைக் குறிக்கப் பயன்படுத்துகின்றோம். இலாபம் ஓர் எச்ச வருவாயாகும். முற்றைய உற்பத்திக் காரணிகளுக்குக் கொடுத்தது போக எஞ்சுவது இலாபமாகும். டூாசிக் இலாபம் கூட்டான அலைக் கழிக்கின்ற வருவாய் என்று கூறுகின்றார்.

## மொத்த இலாபமும் நிகர இலாபமும்

இலாபத்தைப் பற்றிய தெளிவான பொருளை அறிய இலாபத்தை மொத்த இலாபமென்றும், நிகர இலாபமென்றும் பிரித்துப் பார்ப்பது தேவையாகின்றது. ஒரு நிறுவனத்தின் மொத்த வருவாயிலிருந்து அதனுடைய மொத்தச் செலவைக் கழித்த பின் இருப்பது மொத்த இலாபமாகும். பொதுவாக நடைமுறையில் மொத்த இலாபத்தையே 'இலாபம்' என்ற செல்லால் குறிப்பிடுகின்றனர்.

**இலாப வகைகள்**

பொருளியலறிஞர்கள் இலாபத்தை அதனுடைய இயல்பை விளக்கும் நோக்கில் சில வகைகளாகப் பிரித்துக் கூறுகின்றனர். அவற்றைத் தனித்தனியாக விளக்கலாம்.

**தூய இலாபம்**: தொழில் முயல்வோருக்குக் கிடைக்கின்ற வருவாயில் அவரது தொழில் முயல்வோரின் பணிகளான இடர் பாடுகளைத் தாங்குதல். உறுதிப் பாடின்மையை ஏற்றுக்கொள்ளல், புதுமையைப் புகுத்தல், பொருட்களை வேறுபடுத்திக் காட்டுதல் போன்றவற்றிற்காகக் கிடைப்பதை மட்டும் தூய இலாபம் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றோம்.

**நிறைவுப் போட்டியில் இலாபம்:** நிறைவுப்போட்டி நிலவுகின்ற அங்காடியில் தூய இலாபம் கிடைக்காது. நிறைவுப்போட்டியில் எதிர்காலம் திட்டவட்டமாக இருப்பதால் இடர்ப்பாடுகளை ஏற்கவோ, உறுதியின்மையைத் தாங்கவோ, புதுமையைப் புகுத்தவோ தேவையில்லாமல் இருக்கின்றது.

**இயல்பு இலாபம்:** பேராசிரியர் மார்ஷல் வாணிபத் திறமை தக்க அளவில் கிடைக்க வேண்டுமானால் ஒரளவு இலாபம் கிடைக்க வேண்டுமென்கின்றார். அவரது கருத்துப்படி இலாபம் என்பது வாணிபத்திறமையின் அளிப்புக்குரிய விலையாகும். இயல்பு இலாபம் என்பது ஒரு தொழிலில் சம நிலையில் இருக்கின்ற பொழுது தொழில் முயல்வோருக்குக் கிடைக்கும் வருவாயாகும். இயல்பு இலாபம் இயல்பான உற்பத்திச் செலவில் அடங்கும்.

## இலாபத்தின் வாரக்கோட்பாடு (Rent Theory of Profit)

இந்தக்கோட்பாட்டிற்கான மூலக் கருத்தை நாசு சீனியரும் மில்லும் கூறுயள்ளனர். ஆனால் இதற்கு முதன் முதலில் முழு உருவம் கொடுத்தவல் அமெரிக்கப் பொருளியலறிஞரான பிராஞ்சிஸ் எல்.வாக்கர் என்பவராவார்.

**கோட்பாடு:** வாக்கர் இலாபத்தைத் திறமையின் வாரமாகக் கருதுகின்றார். அவரது கருத்துப்படி இலாபமும் வாரமும் மிகவும் ஒத்திருக்கின்றன. வாரம் நிலத்தில் வளத்தைப் பயன்படுத்துவதற்காகக் கொடுக்கப் பெறுகின்றது. இலாபம் தொழில் முயல்வோரின் திறனுக்காகக் கிடைக்கின்றது. நிலம் வளத்தால் வேறுபடுவது போல தொழில் முயல்வோர்கள் அவர்களது வாணிபத்திறனில் வேறுபடுகின்றனர். இறுதிநிலை நிலத்தின் ஆக்கத்திறனுக்கும் உயர்ந்த நிலை நிலத்தின் ஆக்கத்திறனுக்குமுள்ள வேறுபாடு உயர்ந்த நிலை நிலத்தின் வாரத்தை நிர்ணயிக்கின்றது. இதேபோல உயர்ந்த நிலைத் திறனுடைய தொழில் முயல்வோரின் இலாபம் அவரது திறமைக்கும் இறுதிநிலைத் தொழில் முயல்வோரின் திறமைக்கும் உள்ள வேறுபாட்டின் அடிப்படையில் நிர்ணயிக்கப் பெறுகின்றது.

**திறனாய்வு**

1. வாரத்திற்கும் இலாபத்திற்கும் இடையில் முழுமையான ஒற்றுமையில்லை என்பது சுட்டிக்காட்டப் பெறுகின்றது. வாரம் எப்பொழுதும் நேர்முகமானதாக இருக்கும்.
2. வாக்கர் எச்ச இலாபத்தை மட்டுந்தான் ஆராய்கின்றார்.
3. இலாபத்தை எப்பொழுதும் தொழில் முயல்வோரின் திறமைக்குக் கிடைக்கின்ற பரிசாகக் கருத முடியாது.

4. வாக்கர் இலாபத்தின் இயல்பைப் புரிந்து கொள்ள வில்லை யென்று திறனாய்வாளர்கள் கூறுகின்றனர்.
5. கூட்டுப் பங்கு நிறுவனங்களின் பங்குதாரர்கள் எப்படி எந்த வகையான வாணிபத் திறமையையும காட்டாமல் இலாபம் பெறுகின்றனரென்பதை இந்தக் கோட்பாடு விளக்கவில்லை

## இலாபத்தின் கூலிக்கோட்பாடு(Wage Theory of Profit)

அமெரிக்கப் பொருளியலறிஞரான பேராசிரியர் டாசிக் இந்தக் கோட்பாட்டை அளித்துள்ளார். இந்தக் கோட்பாட்டை மற்றொரு அமெரிக்கப் பொருளியல் அறிஞரான பேராசிரியர் தேவன் போர்ட் ஆதரித்துள்ளார்.

**கோட்பாடு**:

இலாபத்தின் வாரக்கோட்பாடு இலாபத்தைத் தொழில் முயல்வோரின் பணிகளுக்காகக் கொடுக்கப்பெறுகின்ற கூலியாகக் கருதுகின்றது. இதனை டாசிக், ‘‘இலாபம் தொழில் முயல்வோருக்குரிய கூலியாகும். இது அவருடைய தனித் திறமைக்காகக் கிடைக்கின்றது’’, என்று கூறுகின்றார்.

**திறனாய்வு**

1. திறனாய்வாளர்களின் கருத்துப்படி பேராசிரியர் டாசிக் உழைப்பிற்கும் தொழில அமைப்பிற்கும் உள்ளஅடிப்படை வேறுபாடுகளைப் புறக்கணித்து விட்டார்.
2. கூட்டுப் பங்கு நிறுவனத்தில் பங்குதரார்கள் எந்த வகையான உழைப்பும் தராமல் இலாபம் பெறுகின்றனர். இதனை இக்கோட்பாடு விளக்கவில்லை.

### இலாபத்தின் இடர்தாங்குக் கோட்பாடு(Risk Theory of Profit)

இலாபத்தின் இடர்தாங்குக் கோட்பாட்டின் படி தொழில் முயல்வோர் இடர்பாட்டைத் தாங்குவதற்காக இலாபம் கிடைக்கின்றது. உற்பத்தியாளர் விற்கும் நோக்கில் பொருட்களை உற்பத்தி செய்கின்றார். பொருட்கள் விற்பனையாகவில்லை என்றால் இழப்பு ஏற்படும். இத்தோடு தொடர்புடைய ஆதாயம் கிடைக்கவில்லை என்றால் தொழில் முயல்வோர் இடர்ப்பாட்டை ஏற்க மாட்டார். இடர்ப்பாடுகளை ஏற்பதற்காகவே இலாபம் கிடைக்கின்றது.

**திறனாய்வு**

1. பேராசிரியர் கார்வர் தொழில் முயல்வோருக்கு இலாபம் அவர் இடர்பாட்டை ஏற்பதற்காக அல்ல, தனது திறமைகளால், இடர்பாட்டை விலக்குவதற்காகக் கிடைக்கின்ற தென்று குறிப்பிடுகின்றார்.
2. இந்தக் கோட்பாட்டின் படி, இலாபம் இடர்ப்பாட்டை ஏற்பதற்குரி பரிசாகும்.
3. சிலர் மாத ஊதியம் பெறுகின்ற தொழிலை விடச் சுதந்திர மாகத் தொழிலோ, வாணிபமோ செய்ய விரும்பலாம்.
4. பேராசிரியர் நைட், எல்லா வகையான இடர்ப்பாடுகளாலும் இலாபம் கிடைப்பதில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

**இலாபத்தின் உறுதிப்பாடின்மை ஏற்புக் கோட்பாடு**

இந்தக் கோட்பாட்டை அமெரிக்கப் பொருளியலறிஞரான பேராசிரியர் நைட் உருவாக்கியுள்ளார். இதன் படி இலாபம் உறுதிப் பாடின்மையைத் தாங்குவதற்குரிய பரிசாகும். வாணிபத்திலுள்ள உறுதிப்பாடின்மையை ஏற்பதாலேயே இலாபம் கிடைப்பதாக இக்கோட்பாடு கருதுகின்றது.

**திறனாய்வு:**

1. இக்கோட்பாட்டின்படி உறுதிப்பாடின்மையை ஏற்பதற்கு இலாபம் கிடைக்கின்றது. திறனாய்வாளர்கள் சில வேளைகளில் உறுதிப்பாடின்மையை ஏற்றுக் கொண்ட போதிலும் இலாபம் கிடைக்காமலிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர்.
2. இலாபம் கிடைப்பதற்கு உறுதிப்பாடின்மை ஒன்று மட்டும் காரணமல்ல. இணைப்பது, தொடங்குவது, பேரம் பேசுவது, போன்ற தொழில் முயல்வோரின் பணிகளுக்காகவும் சேர்த்துத்தான் இலாபம் கிடைக்கின்றது.
3. உறுதிப்பாடின்மையைத் தாங்குவதென்பது துய்ப்புத் தவிர்ப்பு போன்று ஓர் உளஇயல் கருத்தாகும். இதனை உற்பத்தியின் உண்மைச் செலவுகளில் ஒன்றாகக் கருதலாம்.

**இலாபத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் கோட்பாடு**

இலாபத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் கோட்பாட்டின்படி மற்றைய உற்பத்திக் காரணிகளின் வருவாயைப் போன்றே இலாபம் அமைப்பின் ஓரலகின் இறுதிநிலை நிகர ஆக்கத்தினால் நிர்ணயிக்கப் பெறுகின்றது. மார்ஷல், தொழில் முயல்வோரின் இறுதி நிலை ஆக்கத்திறனை, அவருடைய உதவியின்றிச் சமுதாயத்தில் எவ்வளவு உற்பத்தி செய்ய முடியுமோ அதற்குமேல் அவருடைய உதவியோடு சமுதாயம் உற்பத்தி செய்த அளவு என்று விளக்குகின்றார்.

**விளக்கம்**

ஒரு தனி நிறுவனத்தின் தொழில் முயல்வோரின் இறுதிநிலை ஆக்கத்திறனைக் கணக்கிட இயலாது. ஆனால் ஒரு தொழிலிலுள்ள தொழில் முயல்வோரின் இறுதிநிலை ஆக்கத் திறனைக் கணிக்காலம். ஒரு தொழிலிலுள்ள தொழில் முயல்வோர்களின் எண்ணிக்கையை மாற்றுவதன் மூலம் இறுதிநிலை ஆக்கத் திறனைக் கணிக்க இயலாது. ஒரு தொழிலிலுள்ள தொழில் முயல்வோர்கள் எல்லாம் ஓரியல்பானவர்களாக இருப்பதாகவும், அவர்களது இறுதிநிலை ஆக்கத்திறனை அளக்க முடியுமென்றும் கருதுகின்றோம்.

## இலாபத்தின் புத்தாக்கக் கோட்பாடு

பேராசிரியர், ஜோசப் ஏ. சும்பீட்டர் இலாபத்தின் புத்தாக்க கோட்பாட்டை வழங்கியுள்ளார். இது பல வழிகளில் கிளார்க்கின் கோட்பாட்டைப் போன்றே இயக்கநிலை மாற்றங்களினால் இலாபம் கிடைக்கின்றதென்று கூறுகின்றது. ஆனால் கிளார்க் கூறும் ஐந்து பொதுவான மாற்றங்களுக்குப் பதிலாக உற்பத்தி முறையில் ஏற்படுகின்ற புத்தாக்கங்கள் என்பதனைக் கூறுகின்றார்.

புத்தாக்கங்களைக் கொண்டு வருவதற்குக் காரணம் இலாபமாகும். இலாபம் தான் புத்தாக்கததிற்குக் காரணமாகவும் விளைவாகவும் இருக்கின்றது. புத்தாக்க இலாபம் குறுகிய காலத்தில் கிடைப்பதென்பதையும் தற்காலிகமான தென்பதையும் சுட்டிக்காட்டுகின்றார்.

**திறனாய்வு**

1. இது ஒரு முழுமையான கோட்பாடல்லவென்று கூறப் பெறுகின்றது. இலாபம் கிடைப்பதற்கான பலவித காரணிகளில் புத்தாக்கமும் ஒன்றே தவிரப் புத்தாக்கத்திற்காக மட்டும் இலாபமென்று கூறுவதை ஏற்க முடியாதென்று கூறுகின்றனர்.
2. இந்தக் கோட்பாடும் கிளார்க்கின் கோட்பாடு போன்று தொழில் முயல்வோர் இடர்பாட்டை ஏற்க வேண்டியதிருப்பதைப் புறக்கணிக்கின்றது. முதலுக்குரியவர்தான் இடர்ப்பாட்டை ஏற்பாரென்று தவறாகக் கருதுகின்றது.
3. இக்கோட்பாடு தொழில் முயல்வோரின் பணிகளைப் பற்றிக் குறைவான மதிப்பிடுகின்றது. தொழில் முயல்வோர்கள் புத்தாக்கங்களைப் புகுத்துவதோடு வேறு பல பணிகளையும் செய்ய வேண்டியுள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றனர்

UNIT- III

## பணத்தின் பணிகள்(FUNCTION OF MONEY)

பண்டமாற்று முறையிலிருந்த பல்வேறு குறைகளைப் போக்கப் பணம் கண்டுபிடிக்கப் பெற்றது. வாணிபத் துறையில் சிறப்பாகவும், பொருளாதாரத் துறையில் பொதுவாகவும் பணம் செய்கின்ற பணிகள் பலவாகும். மனிதனின் கண்டுபிடிப்புக்களில் பணம் தான் மிகவும் அடிப்படையானது. “ஒவ்வொரு அறிவியல் துறைக்கும் அடிப்படையான கண்டுபிடிப்பொன்று உண்டு. பொறியியல் துறையில் சக்கரமும், விஞ்ஞானத்தில் நெருப்பும், அரசியலில் வாக்குச் சீட்டும் அடிப்படையான கண்டுபிடிப்புகள். சமூக வாழ்வில் வாணிபத்துறை முழுமையிலும் பணம் ஓர் இன்றியமையாத கண்டுபிடிப்பாகும். இதன் அடிப்படையிலேயே ஏனையயாவும் அமைந்திருக்கின்றன.” என்று கிரௌதர் கூறுகின்றார்.

பணத்தின் இன்றியமையாத் தன்மையை அது புரிகின்ற பணிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். முன்பு பணம் செய்யவேண்டிய பணிகள் நான்கென்று கருதினர். இந்நான்கு பணிகளோடு பணம் காலப்போக்கில் மேற்கொண்டுள்ள வேறு பணிகளையும் பொருளியலறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

1. மாற்று மையம்: தேவையை ஒட்டி முதல்முதலாக பணம் மாற்றுமையமாக பயன்படுத்தப் பெற்றது. புண்டமாற்றத்தில் மையமாக ஒரு பொருள் இல்லாத தால் பல இடர்பாடுகள் ஏற்பட்டன. பணம் அத்தகைய இடர் பாடுகளைக் களைந்து விட்டது. வாணிபம் எளிதாக நடைபெறப் பணம் துணை நிற்கின்றது. ஓவ்வொருவரும் தன்னிடமுள்ள பொருளையோ உழைப்பையோ பணத்திற்கு விற்கலாம். புணத்தை எல்லொரும் ஏற்றுக்கொள்வதால் பணத்தின் மூலமமாகப் பொருட்கள் கைமாறுவது எளிதாகின்றது. ஏதிர்காலத்தில் உற்பத்தியாகும் பொருளைக் கூடப்பணத்தின் மூலம் இன்று வாங்கி விற்க முடிகின்றது. பணம் கைமாறுவது இப்பணியைச செய்வதாலே எனலாம்.
2. மதிப்பளவு: பணம் எல்லாப் பொருட்களின் மதிப்பையும் அளக்கும் கருவியாகப் பயன்படுத்துகின்றது. நீளத்தை அளக்க மீட்டர்கோல் இருப்பதைப்போல பொருளின் மதிப்பை அளந்து கூறப்பணம் இருக்கின்றது. பண்ட மாற்றில் மதிப்பை நிர்ணயிப்பது சிக்கலான செயலாக இருந்தது. பணம் இப்பணியை எளிதாகச் செய்கின்றது. பணம் மதிப்பளவு இருப்பதால் கணக்கலகாகவும் பயன்படுத்தப் பெறுகின்றது அதனைப் பொதுமதிப்பளவாகவும் கருதுகின்றோம். இதனால் வாணிபம் தங்குதடையின்றி நடைபெறுகின்றது.
3. மதிப்பு நிலைக்களன்: செல்வத்தைச் சேர்த்து வைக்கப் பணம் உதவுகின்றது. இது ஒரு சேமிப்புக் களஞ்சியம். பொருட்களாக சேமிப்பைச் சேர்த்து வைப்பதில் தொல்லைகள் உள்ளன. அழியும் பொருட்களை வைத்திருக்கமுடியாது. உடனே அழியாத நெல் போன்ற பொருட்கள் கூடக் காலப்போக்கில் தரம் கெட்டுவிடும். னுபை வெள்ளிஇ தங்க நாணயங்களாக வைத்ததன் நோக்கம் உள்மதிப்புள்ள

பணத்தின் மூலம் அழியாத வகையில் சேமிக்கலாம் என்பதாகும். இப்பொழுது காகிதப்பணத்தின் மூலமாகச் சேமித்து, அதனை வங்கியில் வைப்பு நிதியாக வைக்க முடிவதால் சேமிப்பு அழியாமலிருக்கின்றது.

4. கடன் பொறுப்பளவு: கடன் கொடுத்து வைக்கப்பணம் ஏற்ற கருவியாக இருக்கின்றது. கடனின் அளவைப் பணத்தால் கணக்கு வைத்துக் கொள்ளமுடிகின்றது. பணம் இந்தப் பணியைச் செய்வதாலேயே இன்றைய உற்பத்திப் பொருட்களை எதிர்காலப் பொருட்களுக்கு மாற்றிக்கொள்ள முடிகின்றது. வங்கிக் கடன்முறை, பணம் கடன் பொறுப்பளவாக இருப்பதனை ஒட்டி எழுந்ததாகும்.

## பணத்தின் வகைகள்(KINDS OF MONEY)

பணம் பலவகையான உருவங்களில் அமைந்திருக்கின்றது. இவற்றிடையே சில நுணுக்கமான வேறுபாடுகள் உள்ளன. ஆதலால் பலவகையான பணங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல் தேவையாகும்.

1.சட்ட முறைப்பணம்: சட்டப்படி கடன் கொடுக்கல் வாங்கலில் கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வேண்டிய பணத்தைச் சட்டமுறைப் பணம் என்கின்றொம். இந்தியாவில் ருபாய் சட்டமுறைப்பணம். சட்டமுறைப்பணத்தை வரையறையற்ற சட்டமுறைப் பணம் என்றும்; வரையறையுள்ள சட்டமுறைப் பணம் என்றும் பிரிக்கலாம். எந்த அளவுக் கடனையும் தீர்க்கப் பயன்படுவது வரையறையற்ற சட்டமுறைப் பணமாகும்.

2. விருப்பப்பணம்: சட்டமுறைப்பணத்திலிருந்து மாறுபட்டது விருப்பப் பணமாகும். இதனை ஏற்றுக்கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் கடன் கொடுத்தவரின் விருப்பத்தைப் பொறுத்தது. காசோலையை வாங்கும் படி யாரையும் கட்டாயப்படுத்த முடியாது.

3. கணக்குப் பணம்: ஒரு நாட்டின் கணக்குகள் எந்தப் பணத்தின் அளவில் வைத்துக் கொள்ள பெறுகின்றதோ அதனைக் கணக்குப் பணம் என்கின்றோம். கடன் கொடுக்கல், வாங்கல், விலை நிர்ணயம் ஆகியவை இந்தப் பணத்திலேயே நடைபெறும்.

4.பொதுப்பணம்: பொதுவாக எங்கும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பெறும் பணம் பொதுப் பணமாகும். பெரும்பாலம் சட்டமுறைப் பணமெல்லாம் பொதுப் பணமாக இருக்கும்.

5.வங்கிப்பணம்: கடன், முதலீடு மூலமாக வங்கி உருவாக்கும் பணம் இத்தகையதாகும். வங்கி, கேட்கும் பொழுது பணம் தருவதாக வாக்குறுதியளித்துக் கடன் தருகின்றது. காசோலை மூலம் வங்கிப் பணம் நடைமுறைக்கு வருகின்றது.

6.பண்டப் பணம்: ஏதாவது ஒரு பண்டம் பணமாகப் பயன்பட்டால் அதனைப் பண்டப் பணம் என்கின்றோம். தங்கம் இதற்கோர் எடுத்துக்காட்டு.

7. அடையாளப் பணம்: உள்ளடக்க மதிப்பு இல்லாமல் அச்சிடப் பெற்றுப்பயன்படுத்தப் பெறுகின்ற நாணயங்களும் ருபாய்களும் அடையாளப் பணமாகும். பெரும் பாலும் சட்டமுறைப்பணம் இத்தகையதே.

8. கட்டளைப் பணம்: அரசினது கட்டளையைத் தாங்கியிருப்பதால் பணமாக ஏற்றுக்கொள்ளப் பெறுகின்ற பணத்தையே கட்டளைப் பணம் என்கின்றோம்.

9. சார்புப் பணம்: வேண்டிய பொழுது தங்கமாக மாற்றிக் கொள்ளக் கூடிய அடையாளப் பணத்தைச் சார்புப் பணம் என்கின்றோம்.

10. உலோகப் பணம்: ஏதாவது ஓர் உலோகத் தாலானது இவ்வகைப் பணமாகும்.

11. காகிதப் பணம்: இதனைத் தங்மாகவோ, வெள்ளியாகவோ மாற்றக்கூடியது மாற்ற முடியாதது என்று பிரிக்கலாம்.

## பண அளவுக் கோட்பாடு(THE QUANTITY THEORY FO MONEY)

பணத்தின் வாங்கும் சத்தியையே பணத்தின் மதிப்பு என்கின்றோம். புணத்தின் வாங்கும் சத்தி பொருட்களின் விலையைச் சார்ந்திருக்கின்றது. விலைகள் கூடுகின்றபொழுது பணத்தின் மதிப்புக் குறைகின்றது. விலைகள் மாறுகின்றபொழுது பணத்தின் மதிப்பும் மாறுகின்றது. பண மதிப்பில் ஏற்படுகின்ற மாறுதல்கள் பொருளாதாரத்தைப் பல வழிகளில் பாதிக்கின்றன. ஆதலால் பண மதிப்பையும் அதில் ஏற்படும் மாறுதல்களையும் தெரிந்து கொள்ளுதல் தேவையாகின்றது.

**பண அளவு:** பணத்தின் மதிப்பைப் பற்றி விளக்கிக் கூறப் பலவகையான கொட்பாடுகள்தோன்றியுள்ளன. அவற்றின் மிகவும் பழமையானது ஒரு நாட்டிலுள்ள பணத்தின் அளவிற்கும் பணத்தின் மதிப்பிற்குமுள்ள தொடர்பைச் சுட்டிக்காட்டும் பண அளவுக் கோட்பாடு ஆகும்.

பண அளவுக் கோட்பாடுகளில் குறிப்பிடத்தக்க இரண்டு கோட்பாடுகள் உள்ளன. ஒன்று ஜே.எஸ்.மில் இ.டபிள்யூ.கெம்மரா் பேராசரியா் இா்விங் பிஷா் ஆகியவா்களால் உருவாக்கப் பெற்ற ''பேரவகைப் பண அளவுக் கோட்பாடு'' . மற்றொன்று கேம்பிரிட்ஜ் பள்ளியைச் உசா்ந்த ஆல்பிரட் மாா்ஷல் பேராசிரியா்பிகு இராபா்ட்சன் ஆகியோா் அளித்த பண ரொக்க இருப்புக் கோட்பாடு.

**பண மதிப்பு:** பொதுவாக ஒரு பொருளின் மதிப்பை அதனுடைய அளிப்பும் தேவையும் நிா்ணயிப்பதைப் போலவே பணத்தின் மதிப்பையும் அதனுடைய அளிப்பும் அதற்கான தேவையும் நிா்ணயிக்கின்றன. புணத்திற்கும் மற்றையப் பொருட்களுக்கும் ஒரு வேறுபாடு உணடு. பணத்தை அது வாங்கும் பொருட்களுக்காகவே விரும்புகின்றோம். பணத்தின் மதிப்பை ஒரு விலை மட்டும் காட்டுவதில்லை. பணத்தேவை நிலைத்திருக்க பண அளிப்பு கூடினால் பணமதிப்பு குறையும். புண அளிப்பு நிலைத்திருக்க அதன் தேவை கூடினால் அதனுடைய மதிப்புக் கூடும்.

ஒரு நாட்டில் புழக்கத்திலுள்ள சட்டமுறைப் பணமும் வங்கிவைப்பு நிதிகளும் சேர்த்து பணத்தின் அளிப்பாகின்றன. மொத்த பண ஒளிப்பைக் கணக்கிட, பணத்தின் அளவை அது ஒரு குறிப்பிட்ட காலத்தில் கைமாறிய சராசரிப் புழக்க வேகத்தால் பெருக்க வேண்டும். இது வங்கி வைப்பு நிதிக்கும் பொருந்தும்.

அரிசி, துணி, உழைப்பு என்று பலவற்றிற்குக் கொடுக்க எவ்வளவு பணம் தேவைப்படுகின்றதென்பதை நாட்டில் குறிப்பிட்ட காலத்தில் நடைபெறும் வாணிபத்தின் அளவிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

பணத்தின் மதிப்பு மாறுவது பணத்தின் தெவை அல்லது அளிப்பு ஆகியவற்றில் ஏற்படுகின்ற மாறுதல்களை ஒட்டி ஏற்படும். எப்படி பண அளிப்பில் ஏற்படும் மாறுதல் பணத்தின் மதிப்பை மாற்றுகின்றதென்பதைப் பண அளவுக் கோட்பாடு விளக்குகின்றது.

### பொன் திட்டம் (THE GOLD STANDARD)

நாணய வரலாற்றில் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு காலத்திலர் பலவகையான நாணயத்திட்டங்களில் ஒன்று நடை முறையிலிருக்கின்றது. 1914 வரை பெரும்பாலான நாடுகளில் பொன்திட்டம் நடைமுறையிலிருந்தது. மதிப்பினால் எங்கும் தங்கம் உயர்ந்த உலோகமாகக் கருதப்பெறுவதால் அது நாணயத்திற்கு ஏற்றதாகவும் கொள்ளப்பெற்றது. பொன்திட்டத்தின் மூலமாக மாற்று வீதங்களில் நிலையான தன்மையை ஏற்படுத்த இயலுமென்று எண்ணியதால் இதனைப் பல நாடுகள் பின்பற்றின.

பொன்திட்டத்தை ஒரு நாட்டுச் செலாவணியின் உள்நாட்டு மதிப்பை நிலைநிறுத்தும் நோக்கத்துடனும், புறமதிப்பை நிலைப்படுத்தும் நோக்கத்துடனும் செயல்படுத்துகின்றனர். முதலாவதை உள்நாட்டுப் பொன்திட்டம் எனவும் இரண்டாவதை பன்னாட்டுப் பொன்திட்டம் எனவும் பாகுபடுத்திப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

## காகிதப் பணமுறை (PAPER MONEY)

1861க்கு முன்னால் வங்காளம், பம்பாய், சென்னையைச் சேர்ந்த மூன்று மாநில வங்கிகளும் காகிதப் பணத்தை வெளியிட்டன. 1861ல் நிறைவேற்றப் பட்ட காகிதப் பணச்சட்டப்படி அரசு 10 20 50 100 500 1,000 10,000 ரூபாய் மதிப்புள்ள நோட்டுகளை வெளியிடும் உரிமைபெற்றது. 1903ல் 5ரூ நோட்டையும், 1911ல் 10,50ரூபாய் நோட்டுக்களையும், 1911ல் 100ரூபாய் நோட்டுக்களையும் நாடெங்கும் ஏற்றுக்கொள்ளும் பணமாக மாற்றினர்.

1861இல் சட்டம் வரையறை செய்த நம்பிக்கை திட்டப்படி காகிதப் பணம் வெளியிட வழிவகுத்தது. 4கோடி ரூபாய் வரை அரசாங்கப் பத்திரங்களை ஈடாக வைத்துக்கொண்டு பணத்தை வெளியிடலாம். அதற்கு மேல் பணத்தை வெளியிட நூறு விழுக்காடு ரூபாய் நாணயம், தங்கக் கட்டி அல்லது இந்திய அரசின் ரூபாய் பத்திரங்கள் ஆகியவற்றை காப்பீடாக வைத்திருக்க வேண்டும். இந்த வரையறை செய்த நம்பிக்கை அளவு படிப்படியாக 1919ல் ரூ.20கோடியாக உயர்த்தப் பெற்றது.

1931இல் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்ட விகித அளவுக் காப்புமுறையைக் கொண்டுவந்தது: இதன்ப்படி பண வெளியீட்டில் முற்றுரிமை பெற்ற ரிசர்வ் வங்கி தனது வெளியீட்டுத் துறையின் மூலம் மொத்தம் வெளியீட்டுள்ள காகிதப்பணத்தில் 40 சதவீதம் தங்கக் காசுகளாகவும் கட்டிகளாகவும், ஸ்டெர்லிங் பத்திரங்களாகவும் வைத்திருக்க வேண்டும்.

இரண்டாம் ஐந்தாண்டுத்திட்டத்தைச் செயல்படுத்த மிகவும் பணம் தேவைப்பட்டதால் பணவெளியீட்டில் மேலும் நெகிழ்வுத் தன்மையைக் கொண்டுவர 1956இல் இந்திய ரிசர்வ்

வங்கிச் சட்டத்தை திருத்தினர். ஆதன் படி வீத அளவுக் காப்புமுறையை மாற்றி குறைந்த அளவுக் காப்புமுறையைக் கொண்டுவந்தனர். 400 ரூபாய் கோடி மதிப்புள்ள அயல்நாட்டுப் பத்திரங்களும், 115 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கமும் காப்பீடாக இருக்க வேண்டும். 1957 ஏப்ரலில் நாணயத்தில் தசாம்ச முறையைப் புகுத்தியது குறிப்பிட்டத்தக்கதாகும்.

## மைய வங்கியின் அமைப்பும் பணிகளும்

### தோற்றமும் அமைப்பும்

தோற்றம்: மைய வங்கி ஒரு நாட்டின் தலைமை வங்கியாகத் திகழ்கின்றது. வங்கித் தொழில் வளர்ந்த பொழுது தேவையை ஒட்டி வங்கிகளின் பணிகளைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தவும் அரசுக்காகப் பண நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மைய வங்கி ஒவ்வொரு நாட்டிலும் தோற்றுவிக்கப்பெற்றுள்ளது. வில்ரோஜர்ஸ் ''ஆதிகாலம் முதல் மூன்று பெரிய கண்டுபிடிப்புகள் தோன்றியுள்ளன. ஆவை தீ, சக்கரம், மையவங்கி முறை'', என்று கூறுகின்றார்.

தனித்தன்மை: மற்றைய வங்கிகளிலிருந்து மையவங்கி வேறுபடுகின்றது. ''மையவங்கி அரசின் ஓர் அங்கமாகும்'', என்று சேயர்ஸ் கூறுகின்றார். டீகாக், ''இலாபத்தை முதன்மை நோக்கமாகக் கருதாமல் நாட்டின் மொத்த நலனுக்காகவும் பொதுமக்களின் வசதிக்காவும் பணியாற்ற வேண்டுமென்பதே மைய வங்கியின் வழிகாட்டும் கொள்கை'', என்கின்றார்.

மைய வங்கியின் பணிகள் தனித்தன்மை வாய்ந்தவை. ஆவை வணிக வங்கியின் பணிகளிலிருந்து பெரிதும் மாறுபடுகின்றன. இந்த வேறுபாடுகளை, ''முதலாவதாக, மையவங்கி அரசின் வெறு அங்காடிகளோடு பெருமளவில் அன்றிச் சிறு அளவில் தொடர்புடைவர்களால் நிறுவகிக்கப்படுகின்றது. இரண்டாவதாக இயன்ற அளவு அதிகமாக இலாபம் சம்பாதிப்பதெ வாணிப வங்கியின் நோக்கமாகும். ஆனால் மையவங்கிக்கு இலாபம் தேடவேண்டும் என்ற நோக்கமே கிடையாது என்று கூறலாம். மூன்றாவதாக மையவங்கிக்கும் வாணிப வங்கிகட்கும் இடையே ஒரு சிறப்பான உறவு நிலவுகின்றது'', என்று சேயர்ஸ் குறிப்பிடுகின்றார்.

அமைப்பு: மையவங்கிகள் முன்பு தனியார் வங்கிகளாக நிறுவப்பெற்றன. தோடக்ககாலத்தில் ஸ்வீடன், இங்கிலாந்து வங்கிகள் அரசுக்குக்கடன் கொடுப்பதற்காகத் தோற்றுவிக்கப்பெற்றன. அரசின தலையீடின்றி மையவங்கி செயல்பட வேண்மென்று கருதியாதால் அதனைத் தனியார் நடத்துவதே சிறந்ததென்று எண்ணினர். முன்னால் ஒன்பது மையவங்கிகளே அரசுடைமையாக இருந்தன. உலகப்பெருமந்தம் ஏற்பட்ட பிறகு பல அரசுகளின் கருத்து மாறியது. பொன்திட்டத்தின் வீழ்ச்சிக்குப்பின் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி நிர்வாகத்தில் மையவங்கி முழுக்க ஈடுபடுவது தேவையாயிற்று. மையவ்'கியின் முக்கியத்தை உணர்ந்து. அதனை நாட்டுடை மையாக்க வேண்டுமென்ற கருத்து மேலோங்கியது. ஆதலால் பழைய மையவங்கிகள் பலவற்றை அரசு மேற்கொண்டது. புதிய மையவங்கிகளைச் சில நாடுகளில் அரசே நிறுவின.

நிர்வாகம்: மையவங்கி நிர்வாக அமைப்புமுறை நாட்டிற்கு நாடு சிறிய வேறுபாடுகளோடு அமைந்துள்ளது. துனியார் நடத்துகின்ற மையவங்கிகளின் நிர்வாகத்திலும் உயர்மட்ட நிர்வாகிகளைப் பல வகைகளில் நியமிக்கின்றனர். சில நாடுகளில் ஜனாதிபதி

நிர்வாகக் குழுத்தலைவரை நியமிக்கிறார். வேறு சில நாடுகளில் இந்த அதிகாரம் அமைச்சரவையின் கையில் உள்ளது. பொதுவாக மையவங்கியின் நிர்வாகம் ஆளுநர்களின் கையிலிருக்கின்றது. இந்தியாவில் இயக்குநர் குழுவின் கருத்துக்களின்படி ரிசர்வ் வங்கியின் ஆளுநர் நிர்வாகத்தைக் கவனிக்கின்றார்

## மைய வங்கியின் பணிகள்

ஒவ்வொரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலைக்கேற்ப அந்தந்த நாட்டு மையவங்கி பலபணிகளை மேற்கொள்கின்றது. மைய வங்கிகள் பின்பற்றுகின்ற கொள்கைகளும் நடைமுறைகளும் அவை இருக்கும் நாடுகளில் அரசின் பணக்கொள்கையை ஒட்டி அமைகின்றன. ஆதலால் அவற்றின் வேறுபாடுகள் காணப் பெறுகின்றன. ஆனால், நாட்டின் தலைமை வங்கி என்ற முறையில் பொதுநலன் கருதி மேற்கொள்ளப் பெறும் வங்கியின் பணிகளில் ஒற்றுமை இருக்கின்றது. மைய வங்கியின் பொதுவான பணிகளை வகைப்படுத்திக் கூறலாம்.

1.பண வெளியீடு: இப்பொழுது பணவெளியீட்டின் முற்றுரிமை வங்கியிடம் இருக்கின்றது. பணத்தின் உள் நாட்டு, வெளிநாட்டு மதிப்பை நிலைபெறச் செய்ய இந்த உரிமை வங்கியிடம் இருப்பது தேவையாகிறது. பணவெளியீட்டு உரிமை தனது கையிலிருப்பதாலேயே மைய வங்கியால் வணிக வங்கிகளின் கடன் உற்பத்தி சக்தியைக் கட்டுப்படுத்த முடிகின்றது. பொன் திட்டத்தில் பண வெளியீடு சிக்கலான பணியாக இருக்கவில்லை. தங்கத்தின் அளவுக்கேற்ப பணத்தின் அளவை கூட்டவோ, குறைக்கவோ செய்யவேண்டும். நிர்வகக்கும் பணத்திட்ட முறையில் பண வெளியீடு மிகவும் பொறுப்பான பணியாகும்.

2.அரசின் வங்கி: ''மைய வங்கி அரசின் ஓர் அங்கமாகும்'', என்று சேயர்ஸ் கூறுவதை மையவங்கி பல வகைகளிலும் அரசின் வங்கியாகப் பணியாற்றுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஒரு வாடிக்கையாளருக்கு வணிக வங்கி செய்யக் கூடிய பணிகளை எல்லாம் மையவங்கி அரசுக்குச் செய்கின்றது. மைய வங்கிக்கும் அரசின் கருவூலத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. அரசு எத்தகைய பணக்கொள்கையைப் பின் பற்ற வேண்டுமென்பதற்கு ஏற்ற ஆலோசனைகளை மையவங்கி வழங்குகின்றது. பணநிதிக் கொள்கைகளை அரசு வகுத்தப் போதிலும், அவற்றைச் செயல்படுத்துவது மைய வங்கியாகும். அரசுக்குத் தேவையான பொழுது மைய வங்கி குறுகிய காலக்கடன் தருகின்றது. இத்தகைய கடன்களை ''வழிவகை முன் பணங்கள்'' என்று கூறுகின்றனர். இப்படி மைய வங்கி அரசின் வங்கியாகவும் பதிலாளாகவும், ஆலோசகராகவும் பணியாற்றுகின்றது.

3.வங்கிகளின் வங்கி: மையவங்கி நாட்டிலுள்ள எல்லா வங்கிகளுக்கும் தலைமை வங்கியாக விளங்குகின்றது. வணிக வங்கிகளின் வழி காட்டியாகவும் தோன்றாத் துணையாகவும் மைய வங்கி திகழ்வதால், அவை அதனை தங்களது தலைமையாக ஏற்றுக் கொள்கின்றன். மைய வங்கி வணிக வங்கிகளொடு போட்டியிடுவதில்லை. வுணிக வங்கிகளைக் கட்டுப்படுத்துவதோடு நின்று விடாமல், அவற்றிற்கு இக்கட்ட எற்படும்பொழுது மையவங்கி கைகொடுத்து உதவுகின்றது. நாட்டின் பணக்கொள்கையை வணிக வங்கிகளின்

ஒத்துழைப்போடு தான் மையவங்கியால் செயல்படுத்த முடியும். மையவங்கி, வங்கியாய் கீழ்க்கண்ட வகையில் பணிபுரிகின்றது.

## பண அங்காடி

விளக்கம்: ‘‘பண அஙகாடி’’ என்னும் சொற்றொடர் பணத்தில் வாணிபம் நடக்கும் எந்தக் குறிப்பிட்ட இடத்தையும் சுட்டிக்காட்டுவதில்லை. பொதுப் பொருளியலில் கூறுவதைப் போலவே இங்கும் ‘‘அஙகாடி’’ என்ற சொல் தொடர்பு கொள்கின்ற எல்லா வாங்குபவர்களையும், விற்பவர்களையும் உள்ளடக்கியிருக்கும் வட்டாரத்தைக் குறிக்கின்றது. பண அங்காடி  வாணிபம் சட்டமுறைப் பணத்தை வாங்கி விற்பதாக அமைவதில்லை. பணத்தோடு நெருங்கி வருகின்ற மிகுந்த ரொக்கத் தன்மையுடைய வாணிப உண்டியல்கள், வாக்குறுதிப் பத்திரங்கள். அரசாங்கப்பத்திரங்கள் ஆகியவற்றைக் கொண்டு வாணிபம் நடத்தப் பெறுகின்றது. குறுகியகாலத்தில் பணமாகக் கூடிய பத்திரங்களை நெருங்கிய பணம் என்கின்றனர்.

இருவகை: பண அங்காடியை ‘‘குறுகிய காலப்பண அங்காடி’’ என்றும் ‘‘நீண்டகாலப் பண அங்காடி’’ என்றும் பிரிக்கலாம். குறுகிய காலப் பண அங்காடியைத்தான் பண அங்காடி என்ற சொல் குறிக்கின்றது. வாணிபத்திற்கும், தொழில் நடத்துவதற்கும் வேண்டிய குறுகிய காலத்துடன் கொடுத்து வாங்கப் பெறுகின்றது. இதனை ‘‘உள் அங்காடி’’ என்றும் கூறுவது உண்டு. நீண்டகாலப் பண அங்காடியில் மூலதனத்திற்கு வேண்டிய நீண்டகாலக்கடன் கொடுத்து வாங்கப் பெறுகின்றது. ஆதலால் இதனை மூலதனஅங்காடி எனறும் கூறுவது உண்டு.

### பண அங்காடியும் மூலதன அங்காடியும்

பண அங்காடிக்கும் மூலதன அங்காடிக்கும் இடையில் சில குறிப்படத் தக்க வேறுபாடுகள் உள்ளன. அவற்றைத் தொகுத்துக் கூறலாம்.

1. பண அங்காடிக்கும் குறுகியகால நிதியை வழங்குகின்றது. எடுத்துக்காட்டாக, வணிகவங்கிகள் வழங்கும் கடனைக் குறிப்பிடலாம். மூலதன அங்காடி நீண்டகால நிதியை அளிக்கின்றது. நிலவள வங்கி, தொழிற் கழகங்கள் போன்றவை கொடுக்கும் கடனைக் கூறலாம். இந்த அங்காடியில் முன்பேயுள்ள பங்குகளை வாங்கி விற்பதும், புதிய பங்குகளை வாங்குவதும் நடைபெறும்.
2. பண அங்காடியில் வட்டிவீதம் மாறிக்கொண்டிருக்கும். மூலதன அங்காடியில் வட்டிவீதம் ஓரளவு நிலையாக இருக்கும்.
3. பண அஙகாடியில் கடன் நிதியின் நெகிழ்வுத் தன்மை வங்கிகளின் கடன் உற்பத்தி ஆற்றலை சார்ந்து அமைகின்றது. மூலதன அங்காடியில் கடன் நிதியின் நெகிழ்வுத் தன்மை சேமிப்பின் அளவை ஒட்டி அமைகின்றது.
4. பண அங்காடி தொழில் நிறுவனங்களுக்கு நடைமுறை பணி செய்முதலை வழங்குகின்றது. மூலதன அங்காடி புற அங்காடி போலச் செயல்படுகின்றது.

5. பண அங்காடி ஓர் அக அங்காடி, மூலதன அங்காடி புற அங்காடி போலச் செயல்படுகின்றது.
6. பண அங்காடி வணிக வங்கிகளோடு தொடர்புடையது. மூலதனஅங்காடி தொழில் முதலீட்டு நிறுவனங்களோடு தொடர்புடையது.
7. பண அங்காடியில் மாற்று உண்டியல்களையும் கருவூல உண்டியல்களையும் பயன்படுத்துகின்றனர். மூலதன அங்காடியில் பங்குப்பத்திரங்களையும், அரசின் கடன் பத்திரங்களையும் பயன்படுத்துகின்றனர்.

பண அங்காடியின் துணை அங்காடிகள்

பண அங்காடியில் பல வகையான குறுகிய காலக் கடன் நடவடிக்கைகள் இருக்கின்றன. பண அங்காடி எனபது ஒரு தனி அங்காடியல்ல. பலவகையான துணை அங்காடிகளின் தொகுப்பாக்ப பண அங்காடி இருக்கின்றது. ஒவ்வொரு துணைப் பண அங்காடியும் ஒரு வகையான நிதி வழங்கலில் ஈடுபட்டுள்ளது. இத்தகைய துணை அஙகாடிகள் நாட்டிற்கு நாடு வேறுப்டட முறையில அமைந்துள்ளன. அவற்றில் முக்கியமானவைகளைத் தொகுத்துக் கூறலாம்.

1. அழைப்புப் பண அங்காடி: பண அங்காடியில் இது ஒரு முக்கியமான பகுதியாகும். இது மிகவும் குறுகிய காலக் கடன்களையே அளிக்கின்றது. இந்த அங்காடியில் ஓர நாள், ஓர் இரவு அல்லது மிகுதியாக ஏழுநாட்களுக்குக் கடன் தருகின்றனர். தரகர்கள், பங்கு அங்காடியில் ஈடுபட்டிருப்போர் போன்றவர்கள் இக்கடனைப் பெறுகின்றன. பத்திரங்களின் ஈடு இல்லாமல் வணிக வங்கிகள் இத்தகைய கடன்களை அளிக்கின்றன.
2. ஈட்டுக்கடன் அங்காடி: பண அங்காடியில் இது ஒரு தனிவகைப் பிரிவாகும். புத்திரங்கள், பங்குகள், தங்கம், வெள்ளி ஆகியவற்றை ஈடாக வைத்துக் கொண்டு கொடுக்கின்ற கடனையே இந்த அங்காடியில் அளிக்கின்றனர். கடனைத் திருப்பியளிக்கின்றபொழுது ஈட்டினைக் கொடுத்து விடுகின்றனர். கடனைத் திருப்பிக் கொடுக்கத்தவறினால் ஈட்டுப் பத்திரம் கடன் கொடுத்தவரின் சொத்தாகி விடும். ஈட்டுக் கடன் சில மாதங்களுக்கான குறுகியகாலக்கடனாக இருககும். தரகர்களும, பங்கு வணிகர்களும் இக்கடனைப் பெறுகின்றனர். பெரும்பாலும் வணிக வங்கிகள் தனியாருக்கு இக்கடனைத் தருகின்றன.
3. உண்டியல் அங்காடி அல்லது கழிவு அங்காடி: வணிகப் பத்திரங்களோடு தொடர்புடைய உண்டியல் அங்காடி ஒரு தனி வகை அங்காடியாகும். பல்வேறு வகையான வணிக உண்டியல்களை வாங்கி விற்பதில் இது சிறப்பாக ஈடுபட்டுள்ளது.
4. ஏற்பு அங்காடி: ஒருவர் பொருட்களை கடனுக்கு விற்கின்றபொழுது, கடனுக்கு வாங்கியவர் மீது மாற்று உண்டியல் எழுதப் பெருகின்றது. இதற்கு உரிய காலத்தில் பணம் தருவதாக கடன்பட்டவர் ‘ஒப்புதல்’ தரவேண்டும். தனிப்பட்ட ஆளின்கடன் மதிப்பு

மிகவும் குறைவாகும். தனிப்பட்ட ஆட்களின் ஒப்புதல் அளித்த உண்டியல்களை எல்லோரும் ஏற்றுக் கொள்வதில்லை. ஆதலால், உண்டியல்களுக்கு வங்கிகள் ஏற்புகளை அளிக்கின்றன.

5. குறுகியகால அரசு பத்திர அங்காடி: உண்டியலங்காடி வளர்ச்சி பெறாத நாடுகளில் குறுகியகால அரசுப் பத்திரங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அவற்றில் ரொக்கத் தன்மையும், நெகிழ்வுத் தன்மையுமிருப்பதால் வணிக வங்கிகள் அவற்றில் பெருமளவில் முதலீடு செய்கின்றன. இந்தியாவில் வங்கிகள் இவற்றை ரிசர்வ் வங்கியிடம் ஈடாகக் கொடுத்துப்பணம் பெறுகின்றன.

# UNIT IV

## வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் பன்னாட்டு வாணிபத்தின் முக்கியத்துவம்

சுதந்திரம் அடைவதற்கு முன்பு இந்தியா ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. ஆக்காலகட்டத்தில், இந்தியாவில் அயல்நாட்டு வாணிபம் பெரிதும் இங்கிராந்து நாட்டைச் சார்ந்தெ இருந்தது. இந்தியா குறிப்பாக மூலப் பொருள்கள், உணவுப் பொருட்கள் போன்றவற்றை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்தும் இங்கிலாதந்தில் தயாரிக்கப்படும் பொருட்களை அங்கிருந்து இற்ககுமதி செய்தும் வந்தது. இதனால் நமது நாட்டில் தொழில்மயமாக்கல் என்ற சொல்லுக்கே இடமில்லாமல் போயிற்று. மேலும் ஆங்கிலெயத் தயாரிப்பாளர்களின் போட்டியின் காரணமாக உள்நாட்டுக் கைவினைப் பொருட்களின் நிலையும் நசிவுற்றது.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, இந்தியாவின் அயல்நாட்டு வாணிபம் மாற்றமடைந்தது. அதன் அயல்நாட்டு வாணிபத்தை வளர்ந்து வரும் நாட்டுக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்துக் கொண்டது. மேலும் அதன் உற்பத்தித் திறனை அதிவேகமாக வளர்ச்சியுறச் செய்ய முயற்சித்தது. இதற்கென தொடக்கத்தில் ம்மால் தயாரிக்கப்பட இயலாத கருவிகளும் இயந்திரங்களும் இறக்குமதி செய்யப்பட்டன. ஆவ்வித இறக்குமதிகள் சில உற்பத்தி வரிசைகளில் புதிய திறனை உருவாக்கவோ அல்லது ஏனைய உற்பத்தி வரிசைகளின் திறனை அதிகரிக்கவோ உதவி புரியும். இவ்வித இறக்குமதிகள் ‘‘மேம்பாடுசார்ந்த இற்ககுமதிகள்’’ என அழைக்கப் படுகின்றன. நாட்டைத் தொழில்மயமாக்கும் நடைமுறையில் மூலப்பொருட்கள் மற்றும் உடனடிப் பொருட்களை இறக்குமதி செய்வதானது நாட்டில் உருவாக்கப்பட்ட திறனின் முறையான பயன்பாட்டிற்கு மிகவும் இன்றியயையாததாகக் கருதப்பட்டது. இவ்வித இறக்குமதிகள் ‘‘நிர்வாக இறக்குமதிகள்’’ என அழைக்கப் படுகின்றன. இவ்வகையான இறக்குமதிகளுடன கூட, வளர்ந்தவரும் நாடுகள், நுகர்வோர் பொருட்களையும் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. ஏனெனில், தொழில்மயமாக்கல் காலத்தில் இவற்றின் அளிப்பும் நாட்டில் குறைந்தளவினதாகவே இருக்கும். இவ்வித இறக்குமதிகள் பணவீக்கத்திற்கு எதிரானவைகள் ஆகும். ஏனெனில் இவை நுகர்வோர் பொருட்களின் பற்றாக்குறையைக் குறைத்து விடும். ஆதனால் நாட்டில் அப்பொருட்களுக்கான விலை குறையும்.

வளர்ச்சியுற்ற நாடுகள் வளர்ந்து வரும் நாடுகளின் வளர்ச்சிக்குத் தம்முடைய வாணிபத் தடைகளைக் குறைத்தும் வளர்ந்து வரம் நாடுகளின் நுகர்வொர் பொருள்கள் மற்றும் பகுதி தயாரிக்கப்பட்ட பொருட்களை ஏற்றுக் கொண்டும் உதவி புரியலாம். ஆந்நிய உதவியானது வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு இன்றியமையாததாயினும், வாணிபம் மிக அத்தியவாசியமானது ஆகும். ஆகவே ‘‘வாணிபமும் உதவியும்’’ என்பதெ வளர்ச்சி குன்றிய நாடுகளின் புதிய ஒரு கோஷமாகும்.

## பன்னாட்டு வாணிபம்(FOREIGN TRADE)

### உள்நாட்டு வாணிபமும் பன்னாட்டு வாணிபமும்

பொதுப்படையான வழக்கில், வாணிபம் என்ற சொல்லானது மக்களிடையே மெற்கொள்ளப்படும் பொருட்கள், சரக்குகள், விற்பனைப் பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தைக் குறிக்கிறது. புரந்த ஒரு நோக்கில் பார்த்தால், இசசொல்லானது பொருட்கள் மற்றும் சேவைகளின் அனைத்து வகையான பரிமாற்றங்களையும் உள்ளடக்குகிறது எனலாம்.

வாணிபம் இரண்டு வகைப்படும் 1. உள்நாட்டு வாணிபம், மற்றும் 2. பன்னாட்டு வாணிபம் ஆகியனவாகும். உள்நாட்டு வாணிபம் ஒரே நாட்டின் அரசியல் எல்லைகளுக்குள் வாங்குவா் மற்றும் செவைகளின் பரிமாற்றத்தைக் குறிக்கிறது. புன்னாட்டு வாணிபமாகவோ மேற்கொள்ளப்படலாம் வாணிபம் ஆகும் இது வாணிபத்தில் ஈடுபடும் நாடுகளின் அரசியல் எலலைகளுக்கு வெளியேயும் வியாபிக்கிறது எனலாம். அதாவது, இது இரு நாடுகளுக்பு இடையிலலான வாணிபமாகும். ஆகவே, இது அயல்நாட்டு வாணிபம் எனவும் அழைக்கப்படுகிறது.

## பன்னாட்டு வாணிபத்தின் தேவை

பல்வேறு நாடுகளிலும் பொருளாதார ஆதாரங்கள் மாறுபட்ட வகையினவாக இருப்பதே பனனாட்டு வாணிபத்தின் தெவையை வலியுறுத்துகிறது எனலாம். பேராசிரியா் லெர்னா் கூறியுள்ளது போல, காரணிகளின் மாறுபட்ட பற்றாக்குறைகளே பன்னாட்டு வாணிபத்தின் பின்னால் உள்ள உந்து விசையாகும். இயற்கையில் அனைத்து நாடுகளிலும் ஒரே வகையான உற்பத்தி வசதிகள் அமைந்திருப்பதில்லை. சில பொருட்கள் உலகின் சில பகுதிகளில் மட்டுமெ காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக எண்ணெய், அலுமினியம்ம போன்றவற்றைக் கூறலாம். சில பொருடகள் உலகின் சில பகுதிகளில் மட்டுமே காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக எண்ணெய், அலுமினியம் போன்றவற்றைக் கூறலாம். சில பொருட்கள் குறிப்பிட்ட தட்பவெப்ப நிலைகளிலேயே வளர்கின்றன. இதற்கு உதாரணமாக தேயிலை, அரிசி, ஆரஞ்சுப்பழம், கோகோ போன்றவற்றைச் கூறலாம். இவ்வாகையான மாறுபாடுகளினாலேயே, ஒவ்வொரு நாடும் குறிப்பிட்ட சில பொருட்களின் உற்பத்தியில் தன்னை ஈடு படுத்திக் கொள்வது தமக்குப் பயனள்ளதாக இருக்கும் எனக் கருதுகிறது.

### பன்னாட்டு வாணிபத்தின் இயல்புகள்

பன்னாட்டு வாணிபத்தின் பல்வேறு இயல்புகள் பின்வருமாறு:

1. வள ஆதாரங்களின் இடம்பெயரும் ஆற்றலற்ற தன்மை
2. பல்வேறான முரண்பாடுகளையுடைய சந்தைகள்
3. பலவேறு நாடுகளிடையிலான வாணபம்
4. மாறுபட்ட அரசியல் அலகுகளுக்கு இடையிலான வாணிபம்
5. மாறுபட்ட நாணயங்கள்
6. புவியியல்சார்ந்த மற்றும் தட்பவெப்ப நிலைசாந்த மாறுபாடுகள்

7. செலுத்தல் நிலைப் பிரச்சனை

8. மாறுப்பட்ட போக்குவரத்துச் செலவுகள்

9. மாறுப்பட்ட பொருளாதாரச் சுற்றுச்சூழல்

உள்நாட்டு வாணிபத்திற்கும் பன்னாட்டு வாணிபத்திற்கும் இடையிலான ஒற்றுமை

1. நுகர்வோர் மனநிறைவு: உள்நாட்டு வாணிபம் மற்றும் பன்னாட்டு வாணிபம் இரண்டிலுமே, அழப்படையில் வெற்றி யானது நுகர்வோரது அடிப்படைத் தெவைகளைப் பூர்த்தி செய்வதையே நம்பி உள்ளது. இது வாங்குவோர் எதை விரும்புகின்றனர் எனபதைக் கண்டுணர்வதையும் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதையுமே தன்னுள் கொண்டுள்ளது.

2. நற்பெயர் உருவாக்கம்: உள்நாட்டு வாணிபம் பன்னாட்டு வாணிபம் இரண்ழற்குமெ நற்பெயர் உருவாக்கம் இன்றியமையாத நற்பெயரைப் பெறமுடியும் எனில் அதன் பணி எளிதாகி விடும். தமது வாழக்கையாளர்களிடம் நற்பெயரை உருவாக்கிக் கொளள இயலாத நிறுவனங்களுக்கு அதன் பணி கடினமானதாவே இருக்கும்

3. சந்தை ஆய்வின் தேவை: கவனமான சந்தை ஆய்வு மற்றும் சுற்றாய்வுக்குப்பின் சந்தை நிகழ்ச்சிநிரல் வடிவமைக்கப்படுதல் வேண்டும். இது இரண்டு வாணிப நிலைகளிலுமே பினபற்றப்படுதல் வேண்டும். குறியிலக்கு சந்தை மதிப்பிடப்படுதல் வேண்டும் அதனைமதிப்பிடத் தவறுதல் நிச்சயமாக சந்தையிடுகைப் பணிக்குத் தோல்வியையே தோற்றுவிக்கும் எனபதிர எள்ளளவும் ஐயமில்லை.

4. பொருள் திட்டமிடுதலும் மேம்பாடும்: பொருள் அபிவிருத்தி ஆய்வும் மேம்பாடும் அவசியம். இது உள்நாட்டு வாணிபம் மற்றும் பன்னாட்டு வாணிபம் இரண்டிற்குமே இன்றியமையாதாகும். குறிப்பாக சந்தையாளர் சந்தை நிலையையும்,நுகர்வோரின் விருப்பம், முன்னுரிமை போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் தொடர்ந்து நிலையாக கூர்ந்து கவனித்து வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தமது பொருளை மாற்றி அமைத்தல் வேண்டும்.

## டேவிட் ரிக்கார்டோவின் ஒப்பீட்டு அடக்கக் கோட்பாடு

டேவிட் ரிகார்டோ தமது "அரசியல் பொருளாதாரம் மற்றும் வரிவிதிப்புத் தத்துவங்கள்" என்ற நூலை 1817 ஆம் ஆண்டு பிரசுரித்தார். இதில் இவர் ஒப்பீட்டு நன்மை விதியை முன் வைத்தார். இது பொருளியலின் மிக முக்கியமான விதிகளும் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது இன்றளவும் யாராலும் ஆட்சேபிக்கப் படவில்லை எனறே நாம் சொல்லலாம். இதற்குப் பல நடைமுறைப் பயன்பாடுகளும் உள்ளன.

டேவிட் ரிக்கார்டோ தமது உழைப்பு மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாக்க கொண்டே ஒப்பிடும தன்மையுள்ள அடக்கக் கோட்பாட்டை உருவாக்கியுள்ளார். உழைப்பு மதிப்புக் கோட்பாட்டின்படி, எந்தவொரு பொருளின் மதிப்பும் அதன் உழைப்பு அடைககத்தினாலேயே நிாணயிக்கப்படுகின்றது. பொருட்கள் அவற்றில் சேர்ந்து உள்ள தொடாபுடைய உழைப்புத் தொகையின்படியே ஒன்று மற்றொன்றுடன் பரிமாறிக்

கொள்ளப்படுகின்றன என்று இக்கோட்பாடு கூறுகின்றது. மேலும் இது பொருட்களின் விலைக்ள அவற்றின் உழைப்பிற்குச் சமமானவை என்றும் அவை நாடு முழுவதும் அனைத்துப் பகுதிகள் மற்றும் ஊற்பத்திகளிலும் உள்ள உழைப்பின் மீள்வருகையை சமப்படுத்தலாம் என்றும் கூறுகிறது.

டேவிட் ரிக்கார்டோ உற்பத்திக் காரணிகள் முழுமையாக நகரக் கூடியவை எனக் கருதினார். ஆகவே, இவர் உழைப்பு மதிப்புக் கோட்பாடு முற்றிலும் உள்நாட்டு வாணிபத்தற்கே பொரத்தமானது எனவும் அயல்நாட்டு வாணிபத்திற்கு இது அவவாறு பொருந்தாது எனவும் கருதினார். ஏனெனில் உலகளாவியவிதத்தில் உற்பத்திக் காரணிகள் இடம் பெயரக்கூடியன அல்ல என இவர் கருதினார். இவா பனனாட்டு வாணிபதிதல் பரிமாற்ற நடவடிக்கைகளின் மதப்பை உழைப்பு அடக்கத் தத்துவம் ஒழுங்குபடுததுவதில்லை எனக் கருதனார். இம்முன்னுரையுடன், இப்பொழுது நாம் பினவரம் பக்கங்கிளல் ஒ்ப்பீட்டு அடக்கக் கோட்பாடு பற்றி விளக்கலாம்.

## கோட்பாட்டின் ஊகங்கள்

டேவிட் ரிக்கார்டோவின் ஒப்பீட்டு அடக்கக் கோட்பாட்டின் ஊகங்கள் பினவருமாறு:

1. இரண்டு நாடுகள் மட்டுமே உள்ளன, உதாரணமாக A மற்றும் B.
2. இவை ஒரே இரண்டு பொருட்களையே தயாரிக்கின்றன. உதாரணமாக x மற்றும் **y.**
3. இரண்டு நாடுகளிலுமே ஒத்த விருப்பங்களே உள்ளன.
4. ஊழைப்பு ஒன்று ம்டடுமே உற்பத்திக் காரணியாக உள்ளது.
5. ஊழைப்பின் அளிப்பு நிலையாக இருக்கிறது.
6. ஊழைப்பின் அனைத்து அலகுகளும் ஓரினத்தன்மையுடையனவாக இருக்கின்றன.
7. இரண்டு பொருட்கிளன் விலைகளும் உழைப்புக்காகும் செலவை மட்டும் கருத்தில் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன.
8. பொருட்கள் ‘‘நிலையான அடக்கச் செலவுச் செலவுகள் விதி’’ கீழ் உற்பத்தி செய்யப்படுகின்றன.
9. தொழில்நுட்ப அறிவு நிலையாக இருக்கிறது.
10. இரு நாடுகிடையில் வாணிபமானது பண்டமாற்ற முறையில் மேறகொள்ளப்படுகிறது.
11. ஓவ்வொரு நாட்டிற்குள்ளும் உற்பத்திக் காரணிக்ள முழுநிறைவாக நகர்கின்றன. ஆனால் அவை நாடுகளிடையில் முற்றிலும் அசையாமல் இருக்கின்றன.
12. நாடுகளிடையில் வாணிபம் தடைகளற்று இருக்கிறது.
13. நாடுகளிடையில் வாணிபத்தை மேறகொள்ள போக்குவரத்துச் செலவு ஏதும் ஏற்படுவதில்லை.
14. இருநாடுகளிலுமே அனைத்து உற்பத்திக் காரணிகளும் முபுமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.
15. பன்னாட்டுச் சந்தை முழுநிறைவானதாகும். ஆகவே இரு பொட்களின் பரிமாற்ற வீதமும் ஒன்றாகவே இருக்கிறது.

## ஓப்பீட்டு நன்மை விதி

இரு பொருட்களின் உற்பத்தியில் ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் ஒப்பிடும் பொழுது குறைவான திறமையுடையதாக இருப்பின்,அந்த இரண்டு நாடுகிளடையேயும் பரஸ்பரம் பயன்சார்ந்த வாணிபத்திற்கு ஒரு அடிப்படை உள்ளது என ஒப்பீட்டு நன்மை விதி கூறுகிறது. முதலில் கூறப்பட்ட நாடு, அதன் முழுமையான நன்மை குறைவாக உள்ள பொருளின் உற்பத்தியில் தன்னை ஈடுபடுத்தி அதைஏற்றுமதியும் முழுமையான பாதகம் அதிகமாக உள்ள பொருளை இற்ககுமதியும் செய்யலாம். இதை நாம் அட்டவணை முலம் விளக்கலாம்.

| பொருள் | ஒரு மனித மணியின் உற்பத்தி அலகுகளில | |
|---|---|---|
| | இந்தியா | இலங்கை |
| X | 12 | 2 |
| Y | 8 | 4 |

இலங்கை X மற்றும் Y ஆகிய இரண்டு பொருட்களின்˙ உற்பத்தியலும் இந்தியாவோடு ஒப்பிடும் பொழுது முழுமையான பாதகத்தைக் கொண்டுள்ளது. என்பது மேற்கண்ட அட்டவணையில் இருந்து நமக்குத் தெரிகிறது.

## டேவிட் ரிக்கார்டோவின் ஒப்பீட்டு

டேவிட் ரிக்கார்டோவின் ஒப்பீட்டு அடக்கக் கோட்பாடு முற்றிலும் குறைபாடுகள் அற்றதல்ல. இதுவும் சில குறைபாடுகளினால் அவதியுறுகிறது அவை பின்வருமாறு:

1. உழைப்புச் செலவுகளை மட்டுமே பயன்படுத்துகிறது.
2. உழைப்பை ஓரினத் தன்மையுடையதாகக் கருதுகிறது.
3. ஓத்த தன்மையுடைய ரசனைகள் இரு நாடுகளிலும் உள்ளனவாகக் கருதுகின்றது.
4. உழைப்பின் பயன்பாடு நிலையான வீதங்களில் உள்ளதாகக் கருதுகிறது.
5. செலவுகளை நிலையானதாகக் கருதுகிறது.
6. போக்குவரத்துச் செலவுகளைக் கருத்தில் கொள்ளத் தவறி விட்டது
7. நாட்டிற்குள் உற்பத்திக் காரணிகளின் தடைகாளற்ற இடப்பெயர்ச்சியை ஊகிக்கிறது.
8. இரு நாடுகள் மற்றும் இரு பொருட்களுக்கு இடையிலான வாணிபத்தைக் கருதுகிறது.
9. துடைகளற்ற வாணிப ஊகம்.
10. முழுப்பயன்பாட்டை ஊகிக்கிறது.
11. நிலையான தொழில்நுட்ப அறிவை ஊகிக்கிறது.
12. அயல்நாட்டு வாணிபத்தின் தேவைப் பக்கத்தைத் தவிர்க்கிறது.
13. வாணிபத்திலிருந்து பெறும் ஆதாயத்தின் பகிர்ந்தளிப்பபை விவரிக்கத் தவறிவிட்டது.
14. பேராசிரியர் பெர்டில் ஓலினின் குறைபாடுகள்.

## தடையற்ற வாணிபம்

## தடையற்ற வாணிபத்தின் பொருளும் இலக்கணமும்

நாடுகளிடையில் பொருட்களின் ஓட்டத்தைத் தடைப்படுத்தும் சுங்க வரிகள் அளவுசார்ந்த கட்டுப்பாடுகள் மற்றும் ஏனைய கருவிகள் ஏதேனும் எங்கு விதிக்கப்படவில்லையோ அக்கொள்கையே தயைற்ற வாணிபக் கொள்கை எனப்படுகிறது. அதாவது தடையற்ற வாணிபம் என்பதற்கு பன்னாட்டு வாணிபத்தில் சுதந்திரம் என்று பொருள்.

ஆடம் ஸ்மித்தின் கருத்துப்படி, ''உள்நாட்டு மற்றும் அயல்நாட்டுப் பொருள்களிடையே எந்த வேறுபாட்டையும் வரையாத ஒரு வணிகக் கொள்கை முறையையே ஒரு தடையற்ற வாணிபக் கொள்கை குறிக்கிறது. ஆகவே, இது அயல்நாட்டுப் பொருட்கள் மீது எந்தவிதமான கூடுதல் சுமைகளையும் சுமத்த வழங்குதில்லை''.

பேராசிரியர் லிப்சி என்பவரின் கருத்துப்படி, ''ஏற்றுமதி செய்தல் மற்றும் இறக்குமதி செய்தல் மீது எந்த வகையான தடையையும் சுங்க வரியையும் விதக்காத ஒன்றே தடையற்ற வாணிபமாக இருக்க முடியும். அவ்வித உலகின் ஒரு நாடு உள்நாட்டில் தயாரிக்க ஆகும் செலவை விடக் குறைந்த வழங்கல் விலையில் வெளிநாட்டிலிருந்து வாங்கக்கூடிய அனைத்துப் பொருட்களையும் இறக்குமதி செய்யும்''.

ஹேபர்லர் தடையற்ற வாணிபத்தைப் பின்வருமாறு வரையறுக்கிறார். ''பொருளாதார விசைகளின் தடையற்ற இயக்கத்துடன் அரசின் ஒவ்வொரு குறுக்கீட்டையும் எதிர்க்கும் தாராளமயமான வெளிப்புற வாணிப முறையே தடையற்ற வாணிபம் ஆகும்''.

1840 முதல் 1870 வரையிலான காலகட்டம் உலகின் வணிகம்சார்ந்த வரலாற்றில் ''தடையற்ற வாணிபக் காலம்'' எனக் கருதப்படுகிறது. தொழிற்புரட்சி பேரளவு உற்பத்தியை சாத்தியமாக்கிறது. இங்கிலாந்து 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் கால் நூற்றாண்டில் தடையற்ற வாணிபத்தைப் பின்பற்றியது. 1850ல் கார்ன் சட்டங்களும் கடற்பயணச் சட்டங்களும் முழுமையாக ஒழிக்கப்பட்டு இற்ககுமதி வரிகள் கணிசமான அளவில் குறைக்கப்பட்டன.

## தடையற்ற வாணிபத்தின் நன்மைகள்

பொருளாதார வல்லுநர்களால் பின்வரும் வாதங்கள் தடையற்ற வாணிபத்திற்கு ஆதரவாக முன் வைக்கப்படுகின்றன.

1. வெளியிடுகையினை அதிகபட்சமாக்குதல்: தடையற்ற வாணிபக் கொள்கையின் கீழ், ஒவ்வொரு நாடும் சுங்கவரிகள் மற்றும் ஏனைய கட்டுப்பாடுகளிலிருந் விடுவிக்கப்படுகின்றன. இது உலகெங்கிலும் உள்ள நாடுகளை, தாம் அதிக அளவு நன்மைகளைக் கொண்டு உள்ள பொருளின் உற்பத்தியில் தனித்தேர்ச்சி பெற்று, அதை அதிக அளவில் தயாரித்து, ஏற்றுமதி செய்யவும் மற்றும் வை மாலிவாக இற்ககுமதி செய்யக்கூடிய பொருட்களை இறக்குமதி செய்யவும் ஊக்குவிக்கிறது. இது பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபடும் அனைத்து நாடுகளின் வெளியடுகையின் அளவையும் உயர்த்துகிறது. ஆகவே, தடையற்ற வாணிபம்

என்பது வெளியடுகையினை அதிகபட்சமாக்குவதோடு மட்டுமல்லாமல், வருமானம், வேலை வாய்ப்பு ஆகிய அனைத்தையுமே அதிகபட்சமாக்குகிறது.

2. உற்பத்திசார்ந்த வள ஆதாரங்களின் உத்தம அளவுப் பயன்பாடு: தடையற்ற வாணிபக்கொள்கையின் கீழ், நாடுகள் தான் உயர்ந்தபட்ச ஒப்பீட்டுமு நன்மைகளைக் கொண்ட பொருளை மட்டுமே உற்பத்தி செய்கின்றன. இது உற்பத்திசார்ந்த வள ஆதாரங்களை உத்தம அளவில் பயன்படுத்துவதற்கு நாடுகளுக்கு உதவுகின்றது.

3. நுகர்வை மலிவான விலைகளில் செய்வதை எளிதாக்குகிறது: தடையற்ற வாணபக் கொள்கையின் கீழ், அனைத்து நாடுகளும் தான் உயர்ந்தபட்ச ஒப்பீட்டு நன்மையைப் பொருட்களை மட்டுமே தயாரிக்கின்றன மற்றும் அவற்றை ஏற்றுமதி செய்கின்றன. மற்ற பொருட்களை மலிவான விலையில் தயாரிக்கும் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றன. ஆகவே, தடையற்ற வாணிபம் பொருட்களின் பல்வேறு ரகங்களையும் மலிவான விலைகளில் வாங்க மக்களுக்கு உதவுகிறது.

4. குாரணி அலகுகள் உயர்ந்த அளவு வீதங்களைப் பெறுகின்றன: தடையற்ற வாணிபக் கொள்கையின் கீழ், வருமானத்தைப் பெறுகினறன. இது ஏனெனில், உற்பத்திக் காரணிகள் தங்களது சேவைகளுக்கு என உயர்ந்த ஊதியத்தைப் பெற நாடுவிட்டு நாடும், நாடுகளுக்கு உள்ளேயும் எளிதில் நகர முடியும். ஆகவே, அவை உயர்ந்த கூலி, வட்டி, வாடகை மற்றும் இலாபத்தைப் பெறுகின்றன.

5. உற்பத்தித் தன்மையில் அதிகரிப்பை ஊக்குவிக்கிறது: தடையற்ற வாணிபக் கொள்கையின் கீழ், போட்டியானது பன்னாடுசார்ந்ததாக இருக்கின்றது. இது உள்நாட்டு உற்பத்தியாளர்களை உற்பத்தித் தன்மையை அதிகரிக்கும்படி ஊக்குவிக்கிறது. இது உற்பத்தியாளர்களை புதிய உற்பத்தி முறைகளைக் கண்டுபிடிக்கவும் அமைப்பை மேம்படுத்தவும் ஊக்குவிக்கிறது.

6. ஊலகளாவிய தேவையை உருவாக்குகிறது: தடையற்ற வாணிபக் கொள்கையின் கீழ், ஒட்டுமொத்த உலகமும் அமைத்துப் பொருட்களுக்கும் சந்தையாக இருப்பதால், உலகளாவி தேவை உருவாக்கப்படுகிறது. பொருட்களுக்கான உலகளாவிய போட்டியின் காரணமாக, பொருட்கள் மலிவான விலையில் தரமானதாகவும் தயாரிக்கப்படுகின்றன.

7. ஏகாதிபத்தியங்களின் உருவாக்கததைத் தவிர்க்கிறது: தடையற்ற வாணிபக் கொள்கையின் கீழ், ஒவ்வொரு நாடும் ஒரு சில பொருட்களின் உற்பத்தியல் தனிச்தெர்ச்சி பெறுகிறது. நிறுவனங்கள் உத்தம அளவில் இருக்கின்றன. ஆகவே. பொருளின் உற்பத்தி செலவு குறைவாக இருக்கிறது.

8. புதிய நுட்பங்கள் போன்றவற்றைக் கண்டுபிடிக்க உற்பத்தியாளர்களைத் தூண்டுகின்றது: தடையற்ற வாணிபத்தின் கீழ், வாணிபம், போட்டி ஆகிய

இரண்டுமே தடையற்றவையாவும் கட்டுப்பாடுகள் ஏதுமின்றியும் இருக்கின்றன. இது தரமான பொருட்களை மலிவான வீதங்களில் தயாரிக்க நாடுகளை ஊக்குவிக்கறது.

9. போக்குவரத்து மற்றும் தகவல்தொடர்பின் மேம்பாட்டினை ஊக்குவிக்கிறது: தடையற்ற வாணிபத்தின் கீழ், நாடுகளுக்கிடையிலும் நாடுகளுக்குள்ளும் பல்வேறு போக்குவரத்து மற்றும் தகவல்தொடர்பு வழி வகைகளும் ஊக்குவிக்கப்படுகின்றன. தடையற்ற மற்றும் மேம்பட்ட போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் எங்கு உள்ளனவோ அங்கு மட்டுமே உலகளாவிய வாணிபம் சாத்தியமாகும்.

10. நாடுகளிடையே பன்னாட்டு ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது: தடையற்ற வாணிபம் இருதரப்பான மற்றும் பல தரப்பான வாணிபப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு என நாடுகளிடையே ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது. துடையற்ற வாணிபத்தின் கீழ், பலவேறு நாடுகளும் ஒன்று மற்றொன்றுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு, பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்கின்றன.

11. பொருளாதார மேம்பாட்டிற்கான சிறந்த கொள்கை:
    1. மூலதனப் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களின் இறக்குமதிக்கு வாய்பபை அளிக்கிறது.
    2. நாட்டை மேம்படுத்தும் நோக்கில் புதிய கருத்துக்களைப் புகுத்துகிறது. தொழில்நுட்ப அறிவு, ஆற்றல்கள் போன்றவற்றைக் கொண்டு வரகிறது.
    3. ஆயல்நாட்டு மூலதனத்தின் இடப்பெயர்ச்சிக்கு வசதியை ஏற்படுக்திக் தருகிறது.

## தடையற்ற வாணிபத்தின் தீமைகள்

தடையற்ற வாணிபத்திற்கு எதிராக எண்ணிக்கையிலடங்காதக் கோட்பாடு சார்ந்த மற்றும் நடைமுறை சார்ந்த மறுப்புகள் எழுப்பப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவை கீழே தரப்பட்டுள்ள:

1. தடையற்ற வாணிபம் மற்றும் முழுநிறைவான போட்டியின்மை: தடையற்ற வாணிபமு: முழுநிறைவான போட்டியும் தடையற்ற வாணிபக் கொள்கையின் இன்றியமையாத முன் நிபந்தனைகளாகும்.
2. சமநியைற்ற மேம்பாடு: தடையற்ற வாணிபக் கொள்கையின் கீழ் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ள தொழில்கள் மட்டுமே மேம்பாடு அடைகின்றன. ஏனையை தொழில்கள் மெம்படுவது இலலை. அதாவது, ஒரே ஒரு வகையான தொழில் மட்டுமெ மேம்பாடு அடைகிறது.
3. தரக்குறைவான பொருள்களின் வாணிபத்திற்கான சாத்தியம்: தடையற்ற வாணிபக் கொள்கையின் கீழ், பொருட்களின் ஒட்டம் சுதந்திரமாக அனுமதிக்கப்படுகின்றது. மற்றும் கட்டுப்பாடுகள் எதுவும் விதிக்கப்படுவதில்லை.

ஆகவே, தரக்குறைவான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வாணிபமும் செய்யப்பட சாத்தியம் உண்டு. இத சமூகத்தின் நலத்தை பாதிக்கச் செய்து விடும்.

4. பலத்த போட்டி: தடையற்ற வாணிபக் கொள்கையின் கீழ், குறிப்பிட்ட பொருடகளில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்ட நாடுகள், மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது அப்பொருட்களை மலிவான விலைகளில் தயாரிக்கின்றன.
5. பன்னாடுசார்ந்த கழகங்கள் மற்றும் ஏகாதிபத்தியங்களின் உருவாக்கம்: தடையற்ற வாணிபமும் பலத்த போட்டியும் பல வணிக நிறுவனங்களைத் தவிர்த்து விடுகின்றன. இது ஏகாதிபத்தியத்தின் உருவாக்கத்திற்கு வழிவகுத்துவிடுகின்றது. ஏகாதிபத்தியத்தின் உருவாக்கம் உள்நாட்டுத் தொழில்களுக்கும் ஏனைய நாடுகளுக்கும் தீங்கு விளைவிக்கும் தன்மையுடையது ஆகும்.
6. வாணிப நெகிழ்வுகளின் பகிர்மானம்: தடையற்ற வாணிபமானது அழுத்தம், வீக்கம் போன்ற வாணிப நெகிழ்வுகளை நாடுகளிடையே பகிர்கிறது. இது இறுதியில் ஒட்டுமொத்த உலகத்திற்கே பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது. வாணிபத் தடைகளால் இவ்விதப் பகிர்மானத்தை ஆற்றலோடு தவிர்க்க முடியும்.
7. அயல்நாடுகளின் மீது அதிகபட்ச சார்பு: தடையற்ற வாணிபக் கொள்கையின் கீழ், ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ள பொருடகளையே நாடுகள் உற்பத்தி செய்கின்றன.
8. வளர்ச்சி குன்றிய நாடுகளைச் சுரண்டுதல்: தடையற்ற வாணிபமானது வளர்ச்சி குன்றிய நாடுகளின் மேம்பாட்டு நடைமுறையை ஊக்குவிக்கிறது என்ற ஹேபர்லரின் கருத்தை பொருளாதார வலலுநர்கள் மறுக்கின்றனர். இது ஏனெனில் 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில், தடையற்ற வாணிபமானது வளர்ச்சி குன்றிய நாடுகளைச் சுரண்டிய காட்சி கண்கூடாகக் காணப்பட்ட ஒன்றே ஆகும்.

## பாதுகாப்பு

இன்று நடைமுறையில் தடையற்ற வாணிபம் என்பது அதன் உண்மையான பொருளில் முற்றிலும் காணப்படவில்லை என்பதே உண்மை. பெரும்பாலும் அனைத்து நாடுகளும் ஏதேனும் ஒரு வகையில் கட்டுப்படுகளை விதிக்கும் பொள்கையையே பின்பற்றி வருகின்றன.

பாதுகாப்பு என்பதும் ஒரு வகையான வாணிபக் கொள்கையே ஆகும் இதன் கீழ், அயல்நாட்டுப் போட்டியில் இருந்து உள்நாட்டுத் தொழில்கள் பாதுகாக்கப்படுகின்றன. இது பின்வரும் ஏதேனும் முறைகளை பின்பற்றப்படுவதன் மூலம் அடையப்படலாம்:

1. விலை மலிவான பொருட்களின் இறக்குமதி மீது தடைகளை விதிப்பதன் மூலம் உள்நாட்டுப் பொருட்களுக்கான தேவை ஊக்குவிக்கப் படலாம்.
2. ஊள்நாட்டுப் பொருட்களுக்குச் சமமாக வெளிநாட்டுப் பொருட்களின் விலையை அதிகரிக்கும் நோக்கில் இறக்குமதி வரிகளைச் சுமத்துதல்.

3. இறக்குமதிப் பங்கை நிர்ணயித்தல் அல்லது ஏனைய வரிகளற்ற கட்டுப்பாடுகளான உரிமம் போன்றவற்றை விதித்தலின் மூலம் மலிவான அயல்நாட்டுப் பொருட்களின் இறக்குமதியை சாத்தியமில்லாததாகவே அல்லது கடினமாகவோ ஆக்குதல்.

## பாதுகாப்பிற்குச் சாதகமான விவாதங்கள்

பாதுகாப்பிற்கு ஆதரவாக வைக்கப்பட்ட பல்வேறு விவாதங்கள் பின்வருமாறு:

1. வாணிபத்தின் கூறுகளை மேம்படுத்துகிறது.
2. வாணிப பேச்சு வார்த்தைகளில் பேரம் பேசுதலை எளிதாக்குதல்.
3. குவிக்கப்படுதலைக் களைகிறது.
4. உள்நாட்டுத் தொழில்கள் பரவலாக்கப்படுதலை ஏதுவாக்குகிறது.
5. தொழில்களின் தொடக்கப் பருவத்தில் பாதுகாப்பை ஏது வாக்குதல்.
6. போட்டித்தன்மையை மறுபடியும் பெறவும் தன்னை மறுபடியும் உருவாக்கிக்கொள்ளவும் வசதிவாய்ப்புகளை அளித்தல்.
7. முக்கியமான தொழில்களின் பாதுகாப்பிற்கு உதவுதல்.
8. வேலையின்மையை சரி செய்கிறது.
9. செலுத்தல் சமநிலைப் பற்றாக்குறையைக் குறைக்கிறது
10. அரசிற்கு ஆதாயத்தை உருவாக்குகிறது.
11. வளர்ச்சியுற்ற நாடுகளில் உயர் தொழில் நுட்பத் தொழில்களைப் பாதுகாக்கிறது
12. இயற்கை வளங்களைச் சேமிக்கிறது.
13. உயர்ந்த கூலி வீதங்களை அளிக்கிறது.
14. உள்நாட்டுச் சந்தையைப் பரவலாக்குகிறது.
15. உள்நாட்டில் பணத்தைத் தக்க வைக்கிறது
16. போர்க்காலங்களிலை நாடுகளைக் காக்கிறது.
17. தன்னிறைவு பெறுதல்.
18. பயன்படுத்தாமல் இருக்கும் வள ஆதாரங்களின் பயன்பாடு.

## பாதுகாப்பிற்கு எதிரான வாதங்கள்

பாதுகாப்பிற்கு எதிராக முன் வைக்கப்பட்ட வாதங்கள் கீழே தொகுத்து வரையப்பட்டுள்ளன:

1. உள்நாட்டுத் தயாரிப்பாளர்கள் தொழிலை வளர்ப்பதில் ஆர்வமும் உற்சாகமும் இன்றிக் காணப்படுகின்றனர். இவர்கள் பாதுகாப்பை ஒரு உரிமையெனக் கோருகின்றனர். ஆகவே, இவர்கள் தங்களின் நடவடிக்கைகளை கருத்தோடும், கவனமாகவும், தீவிராமாகவும் முயற்சித்து மேற்கொள்வதில்லை.
2. பாதுகாப்பின் கீழ், நுகர்வோர் நலன்கள் கருத்தில் கொள்ளப்படுவதே இல்லை. ஏனெனில், இவர்கள் பாதுகாக்கப்படும் தொழில்களினால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு அதிக விலைகளை அளிக்கின்றனர்.

3. நாளடைவில் ஏனைய நாடுகளும் அவற்றின் பாதுகாப்புக் கொள்கையை பழிவாங்கும் நோக்கில் மாற்றியமைத்து விடலாம். அது இறுதியில் உள்நாட்டுத் தொழில்களைப் பாதித்து விடலாம்.
4. பாதுகாப்பின் கீழ், காரணி அலகுகள் கட்டாயத்தின் பேரில் உயர்ந்த அளவு மீள் வருகையைப் பெறுகின்றன. இது தன்னிச்சையாகக் கிடைப்பதில்லை.

இவை தவிர தடையற்ற வாணிபத்தின் அனைத்து நன்மைகளும் இதன் குறைபாடுகளாக எடுத்துக் கொள்ளப்படலாம்.

## செலுத்தல் நிலையின் அங்கங்கள்

செலுத்தல் நிலையின் நான்கு இனங்கள் உள்ளன.

1. நடப்புக் கணக்கு
2. மூலதனக் கணக்கு
3. ஒரு பக்கமான செலுத்தல்கள் கணக்கு
4. அலுவல்சார்ந்த தீர்வுக் கணக்கு

## 1.நடப்புக் கணக்கு

செலுத்தல் நிலையின் நடப்புக் கணக்கில் இரண்டு இனங்கள் அடங்கியுள்ளன.

1. ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளோடு தொடர்புடைய கண்ணுக்குப் புலனாகக் கூடிய வாணிபம்.
2. குப்பற்துறை, வங்கியியல், காப்பீடு, பயணம் போன்ற சேவைகளுக்கான வருவாய்கள் மற்றும் அளித்தல்கள் போன்ற கண்ணுக்குப் புலனாகாத இனங்கள்.

| வரவினங்கள் | பற்றினங்கள் |
|---|---|
| 1. பொருட்களின் ஏற்றுமதிகள் | 1. பொருட்களின் இறக்குமதிகள். |
| 2. கண்ணுக்குப் புலனாகாத ஏற்றுமதிகள்: | 2. குண்ணுக்குப் புலனாகாத இறக்குமதிகள்: |
| 1) அயல்நாட்டில் செய்யப்பட்ட போக்குவரத்து சேவைகள். | 1) அயல்நாட்டிலிருந்து பெறப்பட்ட போக்குவரத்துச் சேவைகள். |
| 2) அயல்நாட்டில் செய்யப்பட்ட வங்கியியல் சேவைகள். | 2) அயலநாட்டிலிருந்து பெறப்பட்ட காப்பீட்டுச் சேவைகள் |
| 3) அயல்நாட்டில் செய்யப்பட்ட காப்பீட்டுச் சேவைகள். | 3) அயல்நாட்டிலிருந்து பெறப்பட்ட வங்கியியல் சேவைகள். |
| 4) வெளிநாட்டில் செய்யப்பட்ட முதலீடுகள் மற்றும் கடன்களின் மீது பெறப்பட்ட வருமானங்கள். | 4) அயல்நாட்டில் சுற்றுலாப் பயணிகள் சேவைகள். |
| 5) அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் உள்நாட்டில் செய்யப்பட்ட செலவுகள். | 5) அயல்நாட்டிலிருந்து பெறப்பட்ட ஏனைய சேவைகள் |
| | 6) உள்நாட்டில் செய்யப்பட்ட முதலீடுகள் மற்றும் கடனுக்கு அளிக்கப்பட்ட வருமானம். |

2.மூலதனக் கணக்கு: மூலதனக் கணக்கு மீதான செலுத்தல் நிலை நாட்டின் பன்னாடுசார்ந்த நிதிநிலைக்கான நடப்பு நடவடிக்கைகளின் சம்பந்தங்களைக் காண்பிக்கின்றது. மூலதனக் கணக்கில் மூன்று இனங்கள் உள்ளன.

1. தனியார் மூலதனம்
2. வங்கி மூலதனம்
3. அலுவல்சார்ந்த மூலதனம்

1. தனியார் மூலதனம்: தனியார் மூலதனமாக மறுபடியும் நீண்டகாலத் தனியார் மூலதனம் மற்றும் குறுகிய காலத் தனியார் மூலதனம் என இரண்டு வகைகளாகப் பகுக்கப்படுகின்றன. ஓராண்டிற்கு மேற்ப்பட்ட முதிர்வுக் காலத்தை உடையய தனியார் மூலதனம் நீண்டக்காலத் தனியார் மூலதனம் எனவும், ஒரு ஆண்டு அல்லது அதற்குக் குறைவான ஒரு மிர்வுக் காலத்தை உடைய தனியார் மூலதனம் குறுகிய காலத் தனியார் மூலதனம் எனவும் அழைக்கப்படுகின்றன. நீண்டகாலத் தனியார் மூலதனத்தில், அயல்நாட்டு மதலீடுகள், நீண்டக்காலக் கடன்கள், அயல நாட்டுப் பணம் போன்றவைகள் அடங்குகின்றன.

2. வங்கி மூலதனம்: அந்நியச் செலாவணியைக் கையாள அதிகாரம் கொண்ட வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகளின் வெளிப்புற நிதிசார்ந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் அளவு, வங்கி மூலதனத்தில் அடங்குகிறது.

3. அலுவல்சார்ந்த மூலதனம்: அலுவல்சார்ந்த மூலதனத்தில் அயல்நாட்டு நாணயம், அரசிடம் உள்ள சிறப்பு எடுப்பு உரிமைகள் போன்ற வகைகளில் உள்ள ரிசர்வ் வங்கியின் சொத்துக்கள் போன்றன அடங்குகின்றன.

### 3.ஒரு பக்கமான செலுத்தல்கள் கணக்கு:

ஒரு பக்கமான செலத்தல்கள் நன்கொடைகள், கொடைகள் போன்றவற்றைக் குறிக்கின்றன. இதில் அரசு மானியங்கள் அளித்தல், இழப்பீடு செய்தல், தனியார் மாற்றங்கள் அளித்தல், இழப்பீடு செய்தல், தனியார் மாற்றங்கள், இயற்கைச் சீரழிவு நிவாரணங்கள் போன்றன அடங்கின்றன. உள்நாட்டினால் அயல்நாட்டுக்கு அளிக்கப்படும் ஒருபக்கமான செலத்தல்கள் பற்றுகளாகவும் அயல்நாட்டிலிருந்து பெறப்படுவை வரவுகளாகவும் கருதப்படுகின்றன.

4.அலுவலசார்ந்த தீர்வுக் கணக்கு: அலுவல்சார்ந்த தீர்வுகளானது, அந்நிய நாணயம் மற்றும் ஏனைய காப்புகளை அயல் நாட்டிற்கு அலுவல்சார்ந்த முறையில் விற்றல் மற்றும் அந்நிய நாணயம் அல்லது ஏனைய காப்புகளை அயல்நாட்டிலிருந்து வாங்குதல் ஆகியவறறைக் குறிக்கின்றன.

## செலுத்தல் நிலையின் சமனற்ற நிலை

செலுத்தல் நிலையின் சமனற்ற நிலை ஒரு மிகையாகவோ அல்லது பற்றாக் குறையாகவோ இருக்கலாம். ஒரு நாட்டின் செலுத்தல் நிலையின் மிகை அல்லது பற்றாக்குறை அதன் சுதந்திரமான வருவாய்கள், சுதந்திரமான செலுத்தல்களுக்குச் சமமாக இல்லாத பொழுதுதான் ஏற்படுகின்றன. நடப்பு மற்றும் மூலதனக் கணக்குகளில் உள்ள

அனைத்து நடவடிக்கைகளும் சுதந்திரமான இனங்கள் எனப்படுகின்றன. ஏனெனில், இவை வணிக அல்லது இலாப நோக்கங்களுக்கு என மேற்கொள்ளப்படுகின்றன.

## சமனற்ற நிலையின் காரணங்கள்

ஒரு நாட்டின் செலுத்தல் நிலையின் சமனற்ற நிலைக்குப் பலவேறு பொருளாதார, அரசியல் மற்றும் சமூகவியல் காரணிகள் உள்ளன.

1. குறுகிய கால இன்னல்கள்.
2. வாணிபச் சுழற்சி.
3. பொருளாதாரத்தில் உலகம் சார்ந்த போக்குகள்.
4. பொருளாதாரத்தில் கட்டமைப்புசார்ந்த மாற்றங்கள்
5. அரசியல் நிலைமைகள்
6. சமூகக் காரணிகள்

## செலுத்தல் நிலையின் சமனற்ற நிலையைச் சரிப்படுத்தல்

ஒரு நாட்டின் செலுத்தல் நிலையில் நிலையில், பற்றாக்குறை அல்லது மிகை என ஏதேனும் சமனற்றநிலை நீண்ட ஒரு காலத்திற்கு நீடித்திருந்தால் அது விரும்பத்தக்கதல்ல. இது நாட்டின் பொருளாதாரத்தின் மீது பயங்கரமான பாதிப்புகளை ஏற்படுத்தி விடும். ஆகவே, ஒரு நாட்டின் செலுத்தல் நிலையின் மிகை மற்றும் பற்றாக்குறை ஆகிய இரண்டுமே அபாயகரமானதாக இருப்பினும், செலுத்தல் நிலையின் பாதகமான இருப்பின் பாதிப்புக்ள ஒரு நாட்டின் பொருளாதாரவளர்ச்சிக்கு இடையூகளை ஏற்படுத்தக் கூடியது ஆகும. இந்நடவடிககைகள் இரு பெரும் பிரிவுகளாகப் பிாக்கப்படுகின்றன். அவை(1) தானாகவே சரியாகுதல் மற்றும் (2) திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள்

## 1.தானாகவே சரியாகுதல்

நெகிழ்வான மாற்று வீதங்களின் கீழ், அந்நியச் செலாவணிக்கான தேவை மற்றும் அளிப்பு விசைகளினால், செலுத்தல் நிலையின் சமனற்ற நிலை தானாவே சரியாகின்றன. உதாரணமாக ஒரு நாட்டின் செலுத்தல் நிலையில் பற்றாக்குறை உள்ளதாகக் கொள்வோம். இது அந்நியச் செலாவணிக்கான நாட்டின்தேவையானது அதன் அளிப்பை வி அதிகமாக உள்ள நிலையைக் குறிக்கிறது. ஆதன் விளைவு, அந்நிய நாணயத்தின் கூறுகளில் உளநாட்டு நாணயத்திற்கு மதிப்பு குறைப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே. நாடு அதன் ஏற்றுமதிகளை அதிகரிக்கிறது; இறக்குமதிகளைக் குறைக்கிறது. இதனால் அந்நியச் செலவாணிக் காப்புகள் அதிகரிக்கின்றன. சமநிலை தகககவைக்கப்படுகிறது. இறக்குமதி விலைகள் ஐக்கிய நாடுகளில் அதிகமாக ஈரக்கும்பெழுது, அமெரிக்கர்கள் ஆங்கிலேயர்களிடம இருந்து குறைவான பொருட்களையே வாங்குகின்றனர். மாறாக ஐக்கிய நாடுகளில் ஏற்றுமதிகளின் குறைவான விலைகள், ஏற்றுமதிகளை அதிகரித்து இறக்குமதிகளை குறைத்து செலுத்தல் நிலையில் சமநிலையைக் கொண்டு வரும்.

## 2.திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள்

செலுத்தல் நிலையின் பறறாக்குறைய கட்டுப்படுத்தும் நோக்கில் அரசால் முன்னெச்சிாக்கையுடன் எடுக்கப்படும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் ஆகும். அவ்வித நடவடிக்கைகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எனவும் அழைக்கப்பகின்றன. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மீண்டும் இரு பிரிவுகளாகப் பகுக்கப்படலாம்.

1. பணம்சார்ந்த நடவடிக்கைகள்
2. பணம் சாராத நடவடிக்கைகள்

## 1.பணம்சார்ந்த நடவடிக்கைகள்

1. பணவாட்டம்
2. பணமதிப்புக் குறைப்பு
3. செலாவணிக் கட்டுப்பாடு
4. செலாவணித் தேய்மானம்

## 2.பணம் சாராத நடவடிக்கைகள்

1. இறக்குமதி வரிகள்
2. இறக்குமதிக் கோட்டாக்கள்
3. ஏற்றுமதிப் பெருக்கக் கொள்கை
4. இறக்குமதி பதில் வைப்பு

## மாற்று வீதம்

## அந்நியச் செலாவணி

அயல்நாட்டு வாணிப நடவழக்கையில், மற்ற வாணிப நடவடிக்கைகளில் உள்ளது போலவே, ஏற்றுமதியாளர் பொருட்களை அளிக்கிறார், இறக்குமதியாளர் பெறப்பட்ட பொருட்களுக்கான தொகையை அளிக்கிறார். இறக்குமதியாளர் அவரது சொந்த நாணயத்தில் தொகையை அளிப்பார். ஆயினும் ஏற்றுமதியாளர் அவரது சொந்த நாணயத்தில் தொகையைக் பெற விரும்புவார். ஆகவே, இது நாணயங்களின் மாற்றத்தையும் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செய்யப்படும் நிதி மாற்றத்தையும் உட்கொண்டுள்ளது எனலாம். ஆகவே அந்நியச் செலாவணி என்பது அயல்நாட்டு வாணிபத்துடன் ஒருங்கே இணைந்தது என்று நாம் கூறலாம்.

## **அந்நியச் செலாவணியின் பொருளும் இலக்கணமும்**

பரந்த நோக்கில் அந்நியச் செலாவணி என்ற சொற்றொடரானது பன்னாட்டு சார்ந்த கடமைகளைத் தீர்க்கும் ஒரு ஒட்டுமொத்த முறை என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. சுருங்கக் கூறின், பல நாணயங்களும் பரிமாற்றம் செய்யப்படும் ஒரு இயக்க முறையே அந்நியச் செலாவணி எனலாம். இச்சொற்றொடர் அந்நிய நாணயம் ஒன்றைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, அந்நியச் செலாவணி ஏன்ற கூற்றிற்கு பல மாறுபட்ட பொருள் விளக்கங்கள் உள்ளன. சில முக்கியமான இலக்கணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

பால ஈன்ஸிக் தரும் இலக்கணம்: ‘‘பணத்தை ஒரு நாட்டிலிருந்து மறறொரு நாட்டிற்கு மாற்றித் தரும் மற்றும் தேசிய நாணயத்தை மற்றொரு நாணயமாக மாற்றும் நடைமுறை அல்லது முறையே அந்நியச் செலாவணி ஆகும்’’ என அந்நியச் செலாவணி என்ற சொற்றொடருக்கு பால் ஈன்ஸிக் இலக்கணம் வரைகிறார்.

## அந்நியச் செலாவணியின் பரப்பு

அந்நியச் செலாவணி என்ற அம்சத்தின் பரப்பு மிகவும் பரந்து பட்டதாக உள்ளது. இது ஏன் இம்மாற்றங்கள் நிகழ்கின்றன, எப்படி மற்றொரு நாணயத்தின் கூறுகளில் ஒரு நாணயத்தின் மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது மற்றும் அம்மதிப்புகளில் என்னென்ன காரணிகள் ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்துகின்றன. எனபனவற்றைப் பற்றியெல்லாம் விளக்குகிறது. இது எவ்வாறு தெசிய மற்றும் பன்னாடு சார்ந்த பொருளாதார மேம்பாடுகளானது பரிமாற்றங்களைப் பாதிக் கின்றன என்பதையும் விளக்குகிறது. ஆனால் உண்மை நடைமுறையின்பழ பார்த்தால், இது அந்நியக் கடன்களின் தீர்வு வழிகளின் ஒரு ஆய்வு ஆகும். இது இதற்கென பயன்படுத்தப்படும் செலுத்தல் வகைகளின் ஆய்வு மற்றும் அச்செலுத்தல்களில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள் ஆகியவற்றை தன்னுள் கொண்டுள்ளது.

## அந்நிய செலுத்தல் முறைகள்

ஏற்றுமதி ஒப்பந்த செலுத்தல் கூறுகள் ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களின் குறிப்பிட்ட சூழ்நிலையின் அடிப்படையில் நிர்ணயிக்கப் படுகின்றன. எந்த ஏற்றுமதி நடவடிக்கையிலும் செலுத்தல் முறைகளைப் பற்றிய பொதுப்படையான ஒரு முடிவுக்கு வருவது சாத்தியமில்லை. ஆயினும், பின்வரும் முறைகள் பொதுவாக பின்பற்றப்படக் கூடியவை ஆகும்.

1. ஆணையுடன் ரொக்கம்: எந்த ஒர ஏற்றுமதியாளருக்கும் இது ஒரு சிறந்த செலுத்தல் முறையாகவே இருக்கும். ஏனெனில், இங்கு ஆணையுடன் சேர்த்து ரொக்கும்ம அனுப்பப்படுகினறது. செலுத்தல் ஆனது பணவிடையாகவோ அல்லது தந்தி முறை மாற்றம் மூலமோ மேற்கொள்ளப்படலாம்.
2. வங்கிப் பணவிடை: இம்முறையின் கீழ், செலுத்தலானது வங்கிப் பணவிடை வடிவில் செய்யப்படுகின்றது. இறக்குமதியாளர் உள்நாட்டின் செலாவணி வங்கியில் உள்நாட்டு நாணயத்தை வைப்பில் இட்டு, அத்தொகைக்கு ஏற்றுமதியாளர் சார்பில் ஒரு பணவிடையைப் பெற்று, அதை அவருக்கு அனுப்பி வைப்பார். அவ்வாறு பெறப்பட்ட பணவிடை ஏற்றுமதியாளருடை நாட்டின் நாணயத்தில் இருக்கும்.
3. தந்திமுறை மாற்றம்: தந்திமுறை மாற்றம் என்பது ஒர வங்கி அயல்நாட்டிலுள்ள அதன் தொடர்பு வங்கிக்கு அதன் வைப்பிலிருந்து கணக்கு மீது குறிப்பிட்ட ஒரு நபருக்கு குறிப்பிட்ட ஒரு தொகையை அளிக்க அளிக்கும் ஒரு தந்திமுறை மாற்றம் ஆகும்

## அந்நியச் செலாவணிச் சந்தை

அந்நியச் செலாவணியின் பிறப்பிடம் அந்நிய வாணிபமே ஆகும் என நாம் முன்பே பார்த்தோம். ஒரே நாட்டிலுள்ள மக்களிடையேயான நடவடிக்கைகளுக்கான தீர்வு அதே நாட்டின் நாணயத்திலேயே அளிக்கப்பட்டு பெறப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. ஆனால் தொகையை அளிக்கும் நபர்களும், பெறும் நபர்களும் வெவ்வேறு நாடுகளில் இருப்பின், சிக்கல் எழுகின்றது. ஏனெனில் இரு நாடுகளிலும் முற்றிலும் மாறுபட்ட நாணயமே உள்ளது. ஏற்றுமதியாளர்கள் வாணிப நடவடிக்கைகளின் தீர்வாக அந்நியக் கொள்முதலாளர்களிடம் இருந்து அந்நிய நாணயத்தைப் பெறுகின்றனர். அது போலவே. இறக்குமதியாளர்கள் அவர்களது அந்நிய அளிப்பாளர்களுக்கு அந்நிய நாணயத்தில் செலுத்த வேண்டும். மேலும் நகர்வோர் விரும்பும் வகையில் நாணயங்களின் பரிமாற்றத்தறிகு ஏற்பாடு செய்யும் வணிகத்தில் ஈடுபடும் வங்கிகள் போன்ற முகவர்களும் இருக்கின்றனர். வங்கிகள் அந்நிய நாணயத்தை உள்நாட்டு நாணயமாக மாற்ற விரும்பும் தமது வாடிக்கையாளர்களிடம், அதாவது ஏற்றுமதியாளர்களிடம் இருந்து அந்நிய நாணயத்தை வாங்குகின்றன. தீர்வகத்தின் மூலமே அந்நியநாணயங்களின் கொள்முதல்களும் விற்பனைகளும் ஒன்று மற்றொன்றுடன் சரிசெய்கிறது.

## அந்நியச் செலாவணிச் சந்தையின் அங்கங்கள்

அந்நியச் செலாவணி வணிக நடவடிக்கைகளை ஐந்து முக்கிய நிலைகளாகப் பாகுபடுத்தலாம். அவை பின்வருமாறு:

1. ஒரே சந்தையில் வங்கிகளுக்கிடையில் அந்நியச் செலாவணியில் நடைபெறும் நடவடிக்கைகள்.
2. வங்கிகள் மற்றும் வங்கியல்லாத வாடிக்கையாளர்களுக்கு இடையிலான நடவடிக்கைகள்.
3. மாறுபட்ட மையங்களில் அந்நியச் செலாவணியில் வங்கிகளுக்கு இடையில் நடைபெறும் நடவடிக்கைகள்.
4. புல்வேறு நாடுகளின் மைய வங்கிகளுக்கு இடையில் அந்நியச் செலாவணியில் நடைபெறும் நடவடிக்கைகள்.
5. ஒரே நாட்டில் மைய வங்கிக்கும் அந்நியச் செலாவணி வணிகத்தில் ஈடுபடும் வங்கிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்.

## அந்நிய செலாவணிச் சந்தையின் பணிகள்

ஒவ்வொரு நாட்டிலும் அந்நியச் செலாவணிச் சந்தைகள் பல்வேறு பணிகளை ஆற்றுகின்றன. அவை பின்வருமாறு:

1. மாற்றப் பணிகள்: அந்நியச் செலாவணிச் சந்தையின் முதன்மைப் பணி நிதிகளை மாற்றுவதாகும். இது அந்நிய உண்டியல்கள், வங்கி பணவிடைகள், தந்திமுறை மாற்றங்கள் போன்ற பல்வேறு கருவிகளின் மூரும் நிறைவேற்றப்படுகிறது.

2. கடன் பணிகள்: கடன் பணிகள் அந்நியச் செலாவணிச் சந்தையின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான ஒரு பங்கினை ஆற்றுகின்றன. உள்நாட்டு வாணிபத்தைப் போலவே, பன்னாட்டு வாணிபமும் கடன் வசதிகளையே பேரளவில் நம்பியுள்ளது எனலாம், வாங்குபவர்களும் விற்பவர்களும் அதாவது இறக்குமதியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் ஒருவர் மற்றொரவருடன் சொந்தத் தொடர்பில் இல்லாமலும், ஒருவர் மற்றவருக்கு பரிட்சயம் இல்லாதவருமாக இருப்பதால், வங்கியர் அவர்களுக்கு இடையில் ஒரு இடைநிலையராக செயல்பட்டு அவர்களுக்கு கடன அளித்து வாணிப நடவடிக்கைகளின் நிறைவேற்றத்தை எளிதாக்குகின்றனர்.

3. இழப்புக் காப்பீட்டுப் பணிகளைச் செய்தல்: அந்நியச் செலாவணிச் சந்தையில் அளிக்கப்படும் மூன்றாவது ஒரு பணி ஏற்றமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் செலாவணி அபாயங்களுக்கு எதிராக ஒரு பாதுகாப்பை அளிப்பதற்கான முன்னோக்கிய செலாவணி வசதிகளாகும். முன்னோக்கிய செலாவணி அல்லது இழப்பீட்டுக் காப்பீட்டுப் பணி என்ற சொற்றொடர் ஏற்றுமதி அபாயங்களுக்கு அளிக்கப்படும காப்பீட்டைக் குறிக்கிறது. ஆதைப்போலவே, எதிர்காலத்தில் குறிப்பிட்ட ஒரு நாளில் தான் செய்த ஏற்றுதமதிகளுக்கு உரிய அந்நிய நாணயத்தைப் பெற உள்ள ஏற்றுமதியாளர்கள், கெ்ளவிக்குரிய அந்நிய நாணயம் கொடுபட வேண்டிய நாளன்று மாற்று வீத நெகிழ்வுகளை எதிர்பார்க்கும் நிலையில், அவர்களது முன்னோக்கிய நாணயத்தை தங்களது வங்கிகளுக்கு விற்கலாம்.

**வாங்கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாடு**

அந்நியச் செலாவணி வீத நிர்ணயத்தில் மூன்று கோட்பாடுகள் உள்ளன. அவை: 1. நாணயச் சாலை சமன்பாட்டுக் கோட்பாடு 2.வாங்கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாடு 3. செலுத்தல் நிலை கோட்பாடு. இவற்றுள் நமது பாடத்திட்டத்தில் வாங்கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாடு குறிப்பிட்டுக் கேட்கப்பட்டுள்ளதால் அக்கோட்பாட்டை மட்டும் நாம் விரிவாகக் கீழ்க்கண்டவாறு காணலாம்.

மாற்றத்தக்கதல்லாத காகிதப் பணத்தின் மீது நாடுகளுக்கு இடையில் மாற்று வீதத்தை நிர்ணயிப்பதற்கென குஸ்டவ் கேசல் என்ற ஸ்வீடன் நாட்டு விஞ்ஞானி 1920 ஆம் ஆண்டில் வாங்கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாட்டை உருவாக்கினார். இக்கோட்பாட்டின்படி, இரு நாடுகளுக்கான மாற்று வீதம் அவர்களது தொடர்புடைய விலை நிலைகளில் நிர்ணயிக்கப்படுகிறது.

வாங்கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாட்டிற்கு இரு கூற்றுகள் உள்ளன.

1. முழுமையான கூற்று
2. தொடர்புடைய கூற்று

1.முழுமையான கூற்று

முழுமையான கூற்றின்படி, இரண்டு நாடுகளுக்கு இடையிலான மாற்று வீதமானது அந்த இரண்டு நாடுகளிலுள்ள விலைக் குறிப்பீடுகளின் வீதத்திற்குச் சரிசமமானதாக இருக்க வேண்டும். அதற்குரிய சூத்திரம் பின்வருமாறு:

$$R_{AB}=Pa/Pb$$

இங்கு

$R_{AB}$ = இரு நாடுகளுக்கு இடையிலான மாற்று வீதம்

A,B&P = விலைக் குறிப்பீடு.

முழுமையான கூற்று, போக்குவரத்துச் செலவுகள், வாணிபத்திற்குத் தடங்கல் ஏற்படுத்தும் ஏனைய காரணிகள், வாணிபம் செய்யப்படாத பொருட்கள், மூலதன ஓட்டங்கள் மற்றும் உண்மையான வாங்கும் திறன் போன்றவற்றைத் தவிர்த்து விடுகிறது. ஆகவே, இக்கூற்று பொருளாதார வல்லுநர்களால் பயன்படுத்தப்படவில்லை.

2.தொடர்புடைய கூற்று

தோடர்புடைய கூற்று, இரு நாணயங்களுக்கு இடையிலான சமநிலை மாற்று வீதத்தில் உள்ள மாற்றங்களை விளக்குகிறது. இது சமநிலை மாற்று வீதத்தில் உள்ள மாற்றங்களை நாணயங்களின் வாங்கும் திறன் சமன்பாட்டில் உள்ள தொடர்பு படுத்துகிறது. பொருளியல் வல்லுநர்க்ள மாற்று வீதத்தை நிர்ணயிக்க் தொடாபுடைய கூற்றையே பயன்படுத்தகின்றனா். இதை நாம் இப்பொழுது ஒரு உதாரணத்தின் உதவியுடன் விளக்கலாம்.

$$R = \frac{\text{அந்நிய நாணயம் ஒன்றின் உள்நாட்டு விலை} \times \text{உள்நாட்டு விலைக் குறிப்பீடு}}{\text{அயல்நாட்டு விலைக்குறிப்பீடு}}$$

இங்கு,

O = அடிப்படைக் காலம்

I = காலம் 1

A&B = நாடுகள்

P = விலைக் குறிப்பீடு

$R_0$ = அடிப்படைக் காலத்தின் மாற்று வீதம்

இப்பொழுது நாம் நமது மாற்று வீதத்தின் உதவியால் மேலே தரப்பட்டுள்ள சூத்திரத்தைப் பயன்படுத்தி மாற்று வீதத்தைக் கணக்கிடலாம்

பொதுச்செலவின் கோட்பாடுகள்

(1)உச்சநிலை சமுதாய நன்மைக்கொள்கை: பேராசிரியர் டால்டன் வழங்கிய ‘உச்சநிலைசமுதாய நன்மைக் கொள்கை’யும் பேராசிரியர் பிகு அளித்த ‘உச்சநிலை மொத்த நன்மைக்கொள்கை’யும் பொதுச்செலவுகள் எப்படி இருக்க வேண்டுமென்று கூறுகின்றன. அரசு மக்களின் கூட்டு நலனைக் கட்டிக் காக்க இருக்கின்றது. ஆதலால் அது செலவிடுகின்ற

பணத்தால் மக்களுக்கு உச்சநிலையில் நன்மை கிடைக்க வேண்டும். தனிமனித நலனைவிடச் சமுதாயத்தின் மொத்த நலனிலேயே அரசு கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். அரசு செலவிடுகின்ற எல்லாத் துறைகளிலும் கிடைக்கின்ற இறுதிநிலை நலன் சமமாக இருந்தால் மொத்த நலன் உச்சநிலையில் இருக்கும்.

(2)பேராசிரியர் அடர்கார்கருத்து: பொதுச்செலவின் நோக்கம் மக்களுக்கு மிகுதியாக நன்மை வழங்குவதுதான் என்ற கருத்தை பேராசிரியர் அடர்கார் ஏற்றுக்கொள்கின்றார். ஆனால் பொதுச்செலவுக்கும் பொது நிதிக்கும் வழிகாட்டும் கொள்கைகள் தனித்தனியாக இருக்குமென்ற கருத்தை ஏற்கவில்லை. ஆவர் பொதுச் செலவையும் பொதுவருவாயையும் இணைத்தே பார்க்க வேண்டுமென்று கூறுகின்றார். இரண்டும் ஒன்றோடொன்று பிணைந்திருக்கின்றன. ஒன்றை விட்டுவிட்டு மற்றொன்றை எண்ணிப் பார்க்க இயலாது.

(3)புச்லரின் வழிகாட்டும் கருத்துக்கள்: பேராசிரியர் ஆல்பிரட் ஜி. புச்லர் நடைமுறையில் பொதுச் செலவை மேற்கொள்கின்ற பொதுநிர்வாகத்தினர் கடைப்பிடிக்க வேண்டிய கருத்துக்களை ஓரளவு வரையறுத்துக் கொடுத்திருக்கின்றார். ‘‘வரி விதிப்புக் கோட்பாட்டைப் போல பொதுச்செலவுக் கோட்பாடு இன்னும் உயர்ந்த முறையில் வளர்ச்சி பெறவில்லை. ஆனால் மிகவும் சரியான அளவுகோல்களைக் கண்டுபிடிக்கும் வரை, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் வழிகாட்டும் வகையில் சில தெளிவான, ஆனால் அடிப்படையான, கோட்பாடுகள் உள்ளன’’. என்று கூறி அவர் சிலவற்றைக் கூறுகின்றார். அவற்றைத் தொகுத்துக் கூறலாம்.

பொதுச் செலவின் விதிகள்

பொதுச் செலவிற்கு வழிகாட்டுகின்ற வகையில் சிலபொருளியலறிஞாகள் பொதுச் செலவில் பின்பற்ற வேண்டிய சிலவிதிமுறைகளை உருவாக்கியுள்ளார். தற்கால அரசின் செலவுகள் மிகவும் சிக்கலான முறையில் நடைபெறுகின்றன. அவற்றிற்கு சில எளிய விதிகள் சரியான வழிகாட்டிகளாக இருக்குமென்று கூறமுடியாது. இருந்தாலும் இந்த விதிகள் பொதுச் செலவில் ஏற்படக்கூடிய சில குறைகளைச்சுட்டிக்காட்டி அவற்றை நீக்கும் வழிமுறைகளையும் கூறுவனவாக உள்ளன்.

ஆடம்ஸ்மித்தின் வரிவிதிப்புகளைப் போல பேராசிரியர் ∴பின்ட்லே ஷிர்ராஸ் 1) நன்மை விதி 2) சிக்கன விதி 3) அனுமதி விதி 4) எச்ச விதி நான்கு பொதுச் செலவின் விதிகளை உருவாக்கி வழங்கியுள்ளார்.

1.நன்மை விதி

1. நாடு முழுவதிலும் மொத்த உற்பத்தி கூட வேண்டும்.
2. புறத்தாக்குதலிலிருந்தும் உள்நாட்டுக் குழப்பங்களிலிருந்தும் சமுதாயததைக் காக்கப் போதுமான அளவு படைகளும் காவலர்களும் இருக்க வேண்டும்.
3. நாட்டு மக்களுக்கிடையிலுள்ள வருவாய் ஏற்றத்தாழ்வைக் குறைக்க வேண்டும்.
4. மோத்தச் சமுதாய நன்மையை உச்சநிலைக்கு உயர்த்த வேண்டும். அதாவது சமுதாயத்தில் பெரும்பாலானவர்களுக்கு மிகுதியாக நன்மை கிடைக்க வேண்டும்

2.சிக்கன விதி

ஷிர்ராஸ் இரண்டாவதாகக் சிக்கன விதியைக் கூறுகின்றார். இந்தவிதி அரசு பொதுப்பணத்தை மிகவும் கவனமாகவும் சிக்கனமாகவும் செலவிட வேண்டுமென்று கூறுகின்றது.

பொதுச்செலவில் சிக்கனமாக இருக்கக் கீழ்க்கண்டவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். முதலாவதாக, அரசு ஒவ்வொரு செலவினத்திலும் தேவைக்கு மேல் மிகுதியாகச் செலவிடக் கூடாது. இரண்டாவதாக, சமுதாயத்தின் உற்பத்தியாற்றலைப் பெருக்கக் கூடிய வகையில் பொதுச் செலவு அமைய வேண்டும். மூன்றாவதாக, எந்த வகையிலும் பொதுநிதியை வீணடிக்கக் கூடாது.

‘‘சிக்கனம் என்றால் செலவில் சிக்கனத்தை ஏற்படுத்தி வரி செலுத்துபவரின் நலனைக் காப்பதுமட்டுமல்ல, வருவாயைப் பெருக்குவதுமாகும்’’, என்று கூறுகின்றார்.

3.அனுமதி விதி

ஷிர்ராசின் மூன்றாவது பொதுச் செலவு விதி சரியான முறையில் அனுமதி பெற்று ஒவ்வொரு பொதுச்செலவையும் செய்ய வேண்டுமென்று கூறுகின்றது.

இந்த விதி கீழ்காண்டவற்றைக் குறிக்கின்றது. முதலாவதாக, ஒவ்வொரு நிர்வாகமும் தங்களுடைய அதிகாரத்திற்குட்பட்ட வகையில் செலவை அனுமதிக்க வேண்டும். தக்க அதிகார அனுமதியோடு குறிப்பிட்ட அளவில் செலவிடுகின்ற பொழுது, எதற்காகக் கடன் பெற்றார்களோ அதற்கே செலவிட வேண்டும். மேலும் கடனைத் திரும்பச்செலுத்தவும் ஏற்பாடுசெய்து கொள்ள வேண்டும். மூன்றாவதாக, செலவிட்ட பணத்திற்கு சரியான முறையில் கணக்கு வைத்துத் தணிக்கை செய்ய வேண்டும்.

அனுமதி விதியின் நோக்கம் பொதுச் செலவில் சிக்கனத்தை ஏற்படுத்துவது தான். ஆதலால் இதனைச் சிக்கன விதியின் துணை விதியாகக்கூடக் கருதலாம்.

4.எச்சவிதி

பேராசிரியர் ஷிர்ராசின் நான்காவது விதி. பொதுச் செலவில் பற்றாக்குறை இருக்கக் கூடாதென்பதை வலியுறுத்துகின்றது. இதனை ஷிர்ராஸ், ‘‘பொதுச் செலவில் பற்றாக் குறையைத் தவிர்க்க வேண்டுமென்பதே எச்ச விதியாகும்.

‘‘தனியார் செலவைப்போல சமநிலை வரவு செலவுத் திட்டங்கள் தான் இக்காலத்திற்கு ஏற்றது’’ என்று விளக்குகின்றார். கடன்பெற்றால் வட்டி செலுத்தவும், கடனைத் திரும்பக் கொடுக்கவும் போதிய அளவு வருவாய் கிடைக்கின்றதாவென்பதைக் கவனிக்க வேண்டும்.

## UNIT V

**பொதுச்செலவின் விளைவுகள்**

பொதுச்செலவு நியாயமானதா, இல்லையா என்பதை பொதுச்செலவின் விளைவுகளைக் கொண்டுதான் தீர்மானிக்க வேண்டும். வளர்ந்து வருகின்ற பொதுச்செலவு அதன் அளவாலும், இயல்பாலும் மக்களின் பொருளாதார நலனில் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏறபடுத்துகின்றன.

பொதுச்செலவின் தேவையையும், விளைவுகளையும் பற்றிய கருத்து காலப்போக்கில் பெரிதும் மாறியுள்ளது. தொன்மைப் பொருளியறிஞர்கள் ‘தலையிடாக்கொள்கையின்’ அடிப்படையில் குறைந்த அளவில் பணிகளை மேற்கொள்கின்ற அரசையே சிறந்ததென்று கருதினர். ஆவர்களின் கருத்துப்படி பொதுச்செலவு குறைந்த மிகவும் தேவையான அளவில் இருக்க வேண்டும்.

1. பொதுச்செலவு சமுதாயத்திற்குள் வாங்கும் சக்தியைக் கை மாற்றுகின்றது. ஒரு பகுதியினரிடமிருக்கும் வாங்கும் சக்தியை அரசுவரி விதிப்பின் மூலம் பெற்று, பொதுச்செலவின் மூலம் சமுதாயத்தில் பிறபகுதியினருக்குக் கிடைக்கச் செய்கின்றது. ஏழைகளின் நுகர்வு விருப்பம் மிகுதியாக இருக்கும், இதனால் பொருட்களின் தேவை கூடி உற்பத்தி உயரும்.
2. பொதுச்செலவு மக்களின் அகத்திறன்களைப் பெருக்குகின்றது. அரசு மிகுதியாக கல்வி, சுகாதரம், செய்தி போக்குவரத்து போன்றவைகளுக்குச் செலவிடுவதால் மக்களின் ஆற்றல்கள் வளர்கின்றன. இவை மறைமுகமாக நாட்டின் செல்வ வளர்ச்சிக்குத் துணை செய்கின்றன.
3. பொதுச் செலவு கூடுகின்ற பொழுது நாட்டில் பல்வேறு பொருட்களுக்கும் பணிகளுக்கும் உள்ள தேவை கூடும். இதனால் நாட்டின் மொத்த பொருளாதார நடவடிக்கைகள் அதிகரிக்கும்.
4. துனியார் செலவுக்கும் பொதுச்செலவுக்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உண்டு. தனியார் அங்காடி செயல்படுவதை ஒட்டித் தங்களுக்கு நன்மை கிடைக்குமென்றால் மட்டுமே பணத்தைச் செலவிடுவார்கள். அரசு தேவையானால் ஒரளவு அங்காடி விதிகளை புறக்கணித்து பொதுச் செலவை மேற்கொள்கின்றது.

**பொது வருவாய்**

பொதுவருவாய் விளக்கமும் முக்கியத்துவமும்

அரசுக்கு பல்வேறு பணிகளையும் மேற்கொள்ள மிகுந்த அளவில் வருவாய் தேவைப்படுகின்றது. பொருளியலில் உற்பத்திக்கு உள்ள இடமும் முக்கியத்துவமும் பொதுநிதியில் பொதுவருவாய்க்குக் கிடைக்கின்றது. நுகர்வுக்கு உற்பத்தி வழிவகுப்பதைப் போன்று பொதுச் செலவுக்கு பொதுவருவாய் வழி வகுக்கின்றது.

விளக்கம் :பொதுவருவாய் என்ற சொல் அரசின் எல்லாவகையான வருவாய்களையும் குறிக்கின்றது. டாலடன், “பொது நிர்வாகத்தின் வருவாயை விரிவான பொருளிலோ, குறுகிய

பொருளிலோ விளக்கலாம். விரிவான பொருளில், எல்லா வகையான 'வருவாய்களையும்' அல்லது 'வரவுகளையும்' உள்ளடக்கியதாக இருக்கின்றது. குறுகிய பொருளின் சாதாரண வழக்கில் 'வருவாய் என்று கருதக் கூடியவை மட்டுமே அடங்கும்' என்று கூறுகின்றார்.

முக்கியத்துவம் : பொதுநிதியில் பொது வருவாய் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. பொதுவருவாயின் அளவும் பொது வருவாய் கிடைக்கின்ற வழிமுறைகளும் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளின் அளவைத் தீர்மானிக்கும் வகையில் பல விளைவுகளை ஏற்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, பொதுவருவாயில் வரி வருவாய்தான் பெரும் பங்கு பெறுகின்றது. பொத வருவாய் கூடக்கூட வரிகளின் அளவு கூடுகின்றது.

பொதுச்செலவைப் போன்றேபொது வருவாயும் சமுதாயத்தில் விரும்புகின்ற சில விளைவுகளைக் கொண்டு வருகின்ற ஆற்றல்மிக்க கருவியாக இருப்பதால், அதனைப்பற்றி விரிவாக ஆராய வேண்டியது தேவையாகின்றது.

**பொது வருவாயின் மூலங்கள்**

பொதுவருவாய் பல வகைகளில் கிடைக்கின்றன.

1.மானியங்களும் நன்கொடையும்: ஓர் அரசு மற்றொரு அரசுக்கு பொதுவாகவோ, குறிப்பிட்ட பணிகளைச் செய்வதற்காகவோ தருவதை மானியம் என்கின்றோம். கூட்டரசு நிதியில் மத்திய அரசு மாநில அரசுகளுக்கு நிதியுதவியாக மானயம் வழங்குகின்றது. இதுபோல மாநில அரசுகள் உள்ளாட்சி மன்றங்களுக்கு பொதுவாகவோ, சிறப்பாகச் சில பணிகளைச் செய்வதற்காகவோ நிதியுதவி அளிக்கின்றன. எடுத்துக்காட்டாக, கல்விச் செலவுக்காக, சாலைகள் போட, மருத்துவ வசதிகளைப் பெருக்க மேல் நிலையலுள்ள அரசு கீழ்நிலையிலுள்ளவற்றிற்குக் கொடுப்பதைக் கூறலாம். கூட்டரசு நிதியில் இத்தைகைய மானிய உதவிகள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. உள்ளாட்சி மன்றங்களின் வருவாயில் பெரும்பகுதி மானியமாகவே கிடைக்கின்றது.

2.நிர்வாக வருவாய்: அரசின் நிர்வாக பணிகளின் விளைவாக அரசுக்குக் கிடைக்கின்றதை 'நிர்வாக வருவாய்' என்கின்றோம். கட்டணங்கள் அனுமதிக் கட்டணங்கள் அபராதம் பறிமுதல் செய்பவை தனித்தீர்வைகள் ஆகியவற்றை நிர்வாக வருவாயாகக் கருதலாம். இவற்றைச் செலுத்தலாம். இலலையேல் விட்டுவிடலாம். செலுத்துகின்ற பணத்திற்கும் நேரடியாகப் பெறுகின்ற நன்மைக்கும், அல்லது அரசு விதித்த தண்டனைக்கும் தொடர்பு இருக்கின்றது. ஆனால் கட்டாயமாக செலுத்துகின்ற பணத்திற்கும் பெற்ற நன்மைக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டுமென்ற தேவையில்லை. தொழில் லைசென்ஸ் கட்டணம் வாகனவரி, பதிவுக்கட்டணம், போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

கட்டணம் : பேராசிரியர் செலிக்மான், "அடிப்படையில் பொதுநலன் கருதியும், ஆனால் கட்டணம் செலுத்துகின்றவருக்கு அளவிடக் கூடிய திரும்பத்திரும்ப அரசு செய்யக்கூடிய ஒவ்வொரு பணிக்காகவும் அதன் செலவைத் தரும் வகையில் செலுத்தப் பெறுவது "கட்டணம்", என்கிறார். குட்டணத்தில் ஓரளவு 'கட்டாயம்' இருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட நன்மையைப் பெற விரும்புகின்றவர்கள் கட்டாயமாகக் கட்டணம் செலுத்தவேண்டும்.

எடுத்துக்காட்டாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்பவர்கள் 'நீதிமன்றக் கட்டணம்' செலுத்த வேண்டுமென்பதைக் கூறலாம். இது ஒன்றைப் பெற மற்றொன்றைக் கொடுப்பதாக உள்ளது. இதில் பொது நன்மையும் கலந்திருக்கின்றது. அரசுத் துறையின் நிர்வாகச் செலவை ஓரளவு ஈடுகட்டுவதாகக் கட்டணம் உள்ளது.

3.வாணிப வருமானங்கள்: ''அரசு உற்பத்தி செய்த பண்டங்களுக்கோ பணிகளுக்கோ விலைகளின் வடிவத்தில் செலுத்தப்பெற்று அரசு பெறுகின்ற வருமானங்களை வாணிப வருவாய் என்கின்றோம்''. என்று டெய்லர் குறிப்பிடுகின்றார். அரசும் பொது நிறுவனங்களும் பலவகையான தொழில் நிறுவனங்களை ஏற்று நடத்துகின்றன. இதற்குப் பலகாரணங்கள் உள்ளன. மிகுதியாக மூலதனக் தேவை இருப்பதாலோ, குறைந்த அளவிலேயே ஆதாயம் கிடைக்குமென்ப தாலேயோ, நீண்டகாலத்திற்குப் பிறகே ஆதாயம் கிடைக்கும் சூழ்நிலை இருப்பதாலேயோ தனியார் அந்தத் தொழில்களை ஏற்றுநடத்தத் தயங்காலம். பொதுநலன் கருதி அவற்றை அரசு மேற்கொள்கின்றது.

அரசின் வாணிபவருவாய் வரியிலிருந்து வேறுபடுகின்றது. 1) வரிகட்டாயம் செலுத்த வேண்டிய ஒன்று. அரசின் பொருட்களையோ, பணிகளையோ பெற விரும்புபவர்கள் மட்டும்தான் அவற்றிற்கு 'விலை' கொடுக்க வேண்டும் 2) வரி செலுத்துபவர்கள் அதற்காக எந்த தனி நன்மையையும் பெறுவதில்லை. ஆனால் விலை கொடுப்பவர்கள் பதிலாகப் பொருளையோ பணியையோ பெறுகின்றனர். கொடுக்கும்.

முற்றுரிமையின் அடிப்படையில் அரசு ஒரு தொழிலை ஏற்றுநடத்துவதை 'நிதித்துறை முற்றுரிமை' என்கின்றோம். அரசுவருவாய் பெறும்நோக்கிலோ, சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கும் நோக்கிலோ நிதித்துறை முற்றுரிமைகளை ஏற்படுத்தலாம்.

வரிகள்

''செலுத்துவர் நேரடியாக எந்தப் பலனையோ நன்மையையோ எதிர்ப்பார்க்காமல் கட்டாயமாக அரசுக்குச்செலுத்துபவை வரிகளாகும்'', என்று டெய்லர் விளக்குகின்றார். பேராசிரியர் செலிக்மான், ''எலலோருடைய பொது நன்மைக்காக ஏற்படுகின்ற செலவுகளுக்காக, எந்த தனிவகை நன்மைகளையும் அளிப்பதற்கென்று இல்லாமல், ஒருவர் அரசுக்குக் கட்டாயமாகச் செலுத்துவது'', என்று வரிக்கு விளக்கம் தருகின்றார்.

இயல்புகள்: வரியில் கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க இயல்புகள் உள்ளன 1) வரி தனிமனிதர் ஒரு நாட்டில் வாழ்வதாலோ, சொத்துக்களை வைத்திருப்பதாலோ கட்டாயமாகச் செலுத்து கின்றதாகும். இது கட்டாயமாகச் செலுத்தப் பெறுவதாகும். வரி செலுத்தமறுப்பவரை அரசு தண்டிக்கலாம். ஆனால் வரி விதக்கப்பெற்றிருக்கும் பொருளைப் பயன்படுத்தாமல் வாயைத் தனிப்பட்டவர்கள் தவிர்க்கலாம். ஆனால் அந்தப்பொருளைப் பயன்படுத்த வேண்டுமென்றால் கட்டாயமாக வரி செலுத்த வேண்டும்.

2) வரி செலுத்துவது ஒருவரின் கடமையாகும். வுரி செலுத்துவதைத் தவிர்க்க நினைக்கக் கூடாது. அரசு கேட்காவிட்டாலும் வாயைக் கட்ட வேண்டும்.

3) வரி செலுத்துபவர் குறிப்பிட்ட நன்மைகளைக் கருதி வரி செலுத்துவதில்லை. பொதுவான நன்மைக்காகவே வரி செலுத்துகின்றனர்.

கூறுபாடுகள்: வரியிலுள்ள கூறுபாடுகளைத் தொகுத்துக் கூறலாம்.

1. சட்டப்படி விதிக்கின்ற வரி கட்டாயமாகச் செலுத்த வேண்டியது.
2. அரசு மட்டுமே வரி விதிக்கலாம்.
3. வரி செலுத்துவதில் ஓரளவு தியாகம் இருக்கின்றது.
4. வரிச்சட்டபூர்வமான வசூலாகும்.
5. தனிமனிதர்களின் மீதோ, சொத்துக்களின் அடிப்படையிலோ, வருவாயை ஒட்டியோ வரி விதிக்கலாம்.
6. வரிக்கும் அரசின் செலவால் கிடைக்கின்ற நன்மைக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை.
7. வரிவிதிப்பின் நோக்கம் பொதுநலப்பணிகளை அரசுமேற்கொள்ள வேண்டிய வருவாயைப் பெறுவதாகும்.
8. சொத்தின்மீதோ, வருவாய் மீதோ, தனிமனிதர்கள் மீதோ வரிவிதிக்கலாம்.

**நோக்கங்கள்:**

1. வருவாயைப் பெறும் நேர்ககில் அரசு வரிவிதிக்கின்றது. அரசின் நிதித்தேவை கூட வரியும் கூடும்.
2. நுகர்வைக் கட்டுப்படுத்த அரசு சிலவரிகளை விதிக்கின்றது. மது, சிகரெட் போன்ற பொருட்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்த அரசு மிகுதியாக வரிவிதிப்பதைச் சுட்டிக்காட்டலாம்.
3. உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் அரசு இறக்குமதிப் பொருட்களின் மீது வரிவிதிக்கின்றது. நுகர்வோரின் நலனைக்காக்க ஏற்றுமதியைக் கட்டுப்படுத்த ஏற்றுமதி வரிகளை விதிக்கின்றது.
4. நாட்டில் உள்ள ஏற்றத்தாழ்வைக் குறைக்கும் நோக்கில் சில வரிகளை அரசு விதிக்கின்றது. செல்வந்தர்களின் மீது மிகுதியாக வரி விதித்து வரிப்பணத்தை எழை எளியவர்களுக்கான நலன் தரும் திட்டங்களுக்குச் செலவிடுகின்ற பொழுது ஏற்றத்தாழ்வு குறையும்.வரி விதிப்பின் நோக்கங்கள்

**வரி விதிப்பின் பொதுவான நோக்கங்கள்**

இருபதாம் நூற்றாண்டில் வரி விதிப்பது வருவாய் பெறும் நோக்கமாக மட்டும் இருக்கவில்லை. இப்பொழுது வரி அரசிடமிருக்கும் ஆற்றல்மிக்க கருவியாக இருக்கின்றது. சரியான முறையில் வரி விதிப்பதன் மூலம் எதிர்நோக்குகின்ற சமுதாய பொருளாதார விளைவுகளை ஏற்படுத்த முடிகின்றது. வலுவான பொதுநிதியின் கருவியான வரி விதிப்பை தனிமனித, சமுதாய அரசின் கண்ணோட்டங்களில் பார்க்கலாம். துனி மனிதருக்கு வரி செலுத்துவது ஓரளவு தியாகமாகும். மகிழ்ச்சியோடு வரி செலுத்துபவர்களைக் காணமுடிவதில்லை. வரிவிதிப்பின் பழைய புதிய நோக்கங்களைத் தொடர்ந்து விளக்கலாம்.

1. வருவாய் நோக்கம்: தொன்மைப் பொருளியலறிஞர்கள் வருவாய் பெறுவதே வரி வதிப்பின் நோக்கமென்று கருதினர். பொதுச்செலவு கூடக்கூட வரியும் கூடுமென்று எண்ணியர். வருவாய் பெறும் நோக்கமின்றி வேறு நோக்கத்தோடு வரிவிதிப்பது நியாயமல்லவென்பது தொன்மை பொருளியலறிஞர்களின் உறுதியான கருத்து. "வரி வருவாய் உண்மையில் அரசின் உள்ளாட்சிகளின் வாழ்க்கைக் குறிதியாகும். விரும்பத்தகாத வரி முறைகளைப் பின்பற்றியாவது தேவையான அளவு வருவாயைப் பெறுவது அவற்றின் கடமையாகும். வருவாய்க்காக மட்டுமே வரிவிதிக்கப்பெறுகின்றதென்ற கருத்தை இன்றையப் பொருளியலறிஞர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. டூல்டன் இந்தக் கருத்தை "ஆழமற்றதாகவும், தவறானதாகவும்", கருதுகின்றார்.

2. சமுதாய-அரசியல் நோக்கு: ஜெர்மானியப் பொருளியலறிஞர்கள் வரியின் மூலுமாக விரும்புகினற சமுதாய, பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வரலாமென்பதை வலியுறுத்தினர். அரசு சமதர்மத்தைக் கொண்டுவரவோ, மாறாக வெறு சூழ்நிலையை உருவாக்கவோ தக்க முறையில் வரிவிதப்பதைப் பயன்படுத்தலாம். ஆனால் வரி விதிப்பிலுள்ள சமுதாய அரசியல் நோக்கத்தைப் புறக்கணிக்க இயலாது.

3. வருவாயிலும் செல்வத்திலும் மறுபகிர்வை ஏற்படுத்துதல்: இயற்கையாகவும், சட்ட அமைப்பு முறையினாலும், மரபு வழிப்பழக்கங்களாலும் சிலரிடம் செல்வம் மிகுதியாகவும் வருவாய் அதிகமாகவும், இருக்கின்றன. இத்தகைய பகிர்விலுள்ள உள்ளார்ந்த குறையை சரிசெய்வதாக வரிவிதிப்பு இருக்க வேண்டும்.

4. ஏற்றத் தாழ்வைக் குறைத்தல்: வருவாய்க்கிடையில் இருக்கும் ஏற்றத்தாழ்வைக் குறைப்பது இன்று பெரும்பாலான அரசுகளின் தலையாய நோக்கமாயிருக்கின்றது. ஆனால் "குறுகிய காலத்திற்குப் பிறகு அழிக்கப் பெற்ற ஏற்றத்தாழ்வு மறுபடியும் தோன்றும். குறுகிய கால இடைவெளிகளில்தான் மறுபகிர்வின் மூலம் சமத்துவத்தை ஏற்படுத்த முடியும்", என்ற பேரட்டோவின் கருத்தைக் கொண்டிருக்கின்ற பொருளியலறிஞர்கள் இன்றும் உள்ளனர்.

5. மந்தநிலையைப் போக்கும் நோக்கம்: நாட்டில் வாணிபச் சுழலால் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டால் அதனிலிருந்து பொருளாதாரம் மீட்சிபெறும் வகையில் வரி விதிப்பு முறையை மாற்றி அமைக்கலாம். புதிய வரிகளைத் தவிர்க்க வேண்டும். மக்களிடம் வாங்கும் சக்தி மிகுதியாக இருக்கும் வகையில் சில வரிகளைக் குறைக்கலாம். மொத்தத்தில் நுகர்வைப் பாதிக்காத வகையில் வரி விதிப்பு அமைய வேண்டும்.

6. பண வீக்கத்தைப் போக்கும் நோக்கம்: நாட்டில் பண வீக்கப்போக்குகள் தலைதூக்கினால் அவற்றை நீக்கும் நோக்கில் வரிக்கொள்கையை அமைக்கலாம். இந்திய வரிவிதிப்பு விசாரணைக்குழு "பணவீக்கக் காலங்களில் அதனுடைய

பாதக விளைவுகளைப் போக்க வரிவிதிப்பு முக்கியபணி புரியலாம்'', என்று கூறுகின்றது.

7. நெறிப்படுத்தும் நோக்கம்: பொருளாதார அமைப்பில் சில கூறுபாடுகளையும் நடவடிக்கைகளையும் நெறிப்படுத்தும் நோக்கத்தோடு வரிகளை விதிக்கலாம். சில பொருட்களின் நுகர்வைக் கட்டுப்படுத்த அந்தப் பொருட்களின் மீது மிகுதியாக வரி விதிக்கலாம்.

8. ஊக்கநோக்கம்: வரிவிதிப்பின் மூலம் சில பொருளாதார நடடிக்கைகளை ஊக்குவிக்கலாம். ஆதனை 'ஊக்குவிக்கும் வரி வதிப்பு' என்கின்றனர்

9. பணிசார் நிதி நோக்கம் : டாக்டர் அப்பா பி.லெர்னர் போன்ற சில பொருளியல் அறிஞர்கள் ''பணிசார் நிதிக்'' கருத்தை வலியுறுத்துகின்றார். தேசிய வருவாயைப் போதுமான அளவில் நிறுத்துதலே பொதுநிதியின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். லெர்னர், ''அரசுக்குப் பணம் வேண்டுமென்பதற்காகப பணத்தைத் திரட்டும் வழிமுறையாக மட்டும் எப்பொழுதுமே வரியை விதிக்கக் கூடாது'', என்கின்றார்.

10. வட்டாரவளர்ச்சி நோக்கம்: பின்தங்கிய வட்டாரங்களின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை செய்யும் வகையில் வரிகளை அரசு விதக்கலாம். எங்கு தொழில்கள் மிகவும் செறிவாக வளர்ந்திருக்கின்றதோ, அங்கு தொழில்கள் தொடங்கினால் மிகுதியாக வரி விதிக்கலாம். பின்தங்கிய வட்டாரங்களில் தொழில் தொடங்குபவர்களுக்கு வரிச்சலுகைகள் அளிக்கலாம்.

**இந்தியாவின் வரி நோக்கங்கள்**

நமது நாட்டின் வரி நோக்கங்கள் நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய அரசியல் கொள்கைக்கும் ஏற்ற வகையில் அமைந்துருக்கின்றன. திட்டங்கள் இயற்றி நாடு முன்னேறும் சூழ்நிலையில் வரி நோக்கங்கள் எப்படி இருக்க வேண்டுமென்பதை வரி விசாரணைக் குழுவின் அறிக்கை விளக்குகின்றது. அதன்படி, 1) பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவது; 2) வருவாயிலும் சொத்திலும் இருக்கின்ற ஏற்றத்தாழ்வைக் குறைக்கும் வகையில் வருவாயை மறுபகிர்வு செய்தல், 3) பொருளாதாரத்தில் நிலையான போக்கை ஏற்படுத்துதல்,'' ஆகியவை இந்தியாவின் வரி விதிப்பின் நோக்கங்களாகும்.

1. பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துதல்: விரைவாகப் பொருளாதார வளர்ச்சியை அடையவேண்டுமென்பது நாட்டின் குறிக்கோளாக இருக்கின்றது. அதற்கேற்ற வகையில் வரி விதிப்பு இருக்க வேண்டும். பொதுத் துறையில் மூலதனம் உருவாகி, வளரத்தக்க வகையில் நாட்டிலுள்ள உற்பத்திச் சாதனங்களை எல்லாம் திரட்டிக் கொடுப்பதாக அரசின் வரிக்கொள்கை இருக்க வேண்டும். அரசின் வருவாய்க்கூடினால் பொதுத்துறையில் புதி தொழில்களைத் தொடங்கலாம்; இருக்கின்ற தொழில்களை வள்ர்லாம்.

அரசு தனது வருவாயில் ஒரு பகுதியை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒதுக்கு வேண்டும். இது பொதுச் செலவைப் பற்றிய தென்றாலும், மிகுதியாக வரி வருவாய் கிடைக்கின்ற பொழுது தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும். ஒதுக்கி விடாமல், ஒரு பகுதியை வளர்ச்சிச் செலவுக்கு ஒதுக்க வேண்டியது நமது வரிக் கொள்கையாகும்.

2. வருவாய் மறு பகிர்வு: நமது நாட்டில் மக்களின் வருவாயிலும் சொத்திலும் மிகவும் ஏற்றத்தாழ்வு இருக்கின்றது. சமதர்ம சமுதாயத்தை அமைப்பதை நாட்டின் குறிக்கோளாக ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். நமது குறிக்கோளை அடைய வேண்டுமானால் இன்றுள்ள வருவாய் ஏற்றத்தாழ்வைக் குறைக்கும் வகையில் நாட்டின் வரி விதிப்பு இருக்க வேண்டும். இந்தக் கருத்தை வரி விதிப்பு விசாரணைக் குழு வலியுறுத்துகின்றது.

வருவாய் மறுபகிர்வினால் கிடைக்கக்கூடிய நன்மைகளைச் சுட்டிக்காட்டலாம். நமது பொருளாதார அமைப்பு முறை, உற்பத்தியாற்றல் உயரத் துணை செய்யும். மறுபகிர்வினால் பொருளாதார நிலையில் கீழ்த்தட்டில் உள்ளவர்களின் வாங்கும் சக்தி கூடும். அவர்களுடைய நுகர்வு விருப்பம் மிகுதியாக இருப்பதால் உள்நாட்டு அங்காடியில் தேவை கூடும். இது மேலும் தனியாரின் முதலீட்டுத் தூண்டுகோலாக அமையும். ஆதலால் வருவாய் மறுபகிர்வுக்கு வழி வகுக்கும் வகையில் வரி வதிப்பை அமைப்பது நமது நோக்கமாக இருக்கின்றது.

3. பொருளாதாரத்தில் நிலையானதன்மை: திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி விகிதம் ஒரே வகையில் அமைய வேண்டும். வாணிபச் சுழல் ஏற்பட்டு பணவீக்கப் போக்குகளினால் வளர்ச்சி விகிதம் பாதிக்கப்படக்கூடாது. பணவீக்கம் தலைதூக்கினால் பொருளாதாரத்தில் பல சீர்கேடுகள் ஏற்படும். மக்களுக்கு பணமுறை மீதுள்ள நம்பிக்கை குறையும். பொருளாதார சாதனங்களைத் திட்டமிட்டபடி பயன்படுத்தாமல் எவற்றில் பயனபடுதினால் மிகுதியாக ஆதாயம் கிடைக்குமோ அவற்றில் பயன்படுத்துவாகள். இந்தப் போக்கு எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றுவதைப் போல மேலும் பணவீக்கத்தை வளர்க்கும். பணவீக்கம் வெளிநாட்டு உதவி வருவதைத் தடுத்து நிறுத்துமென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நிறைவுரை:

நமது நாட்டின் வரிக்கொள்கை பொருளாதார வளர்ச்சிக்குத்துணை செய்யும் வகையில் உருவாக்கப் பெற்றிருக்கின்றது. ஆனால் வரிக்கொள்கையைக் செயல்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் தோன்றுகின்றன. பணவீக்கப் போக்கையும் பொருளாதார வளர்ச்சியையும் பிரிக்க இயல்வதில்லை. பணவீக்கம் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை செய்யுமென்பதைச் சிலர் சுட்டிக் காட்டுகின்றர். பொருளாதார நடவடிக்கைகளில் நிலையான போக்கை ஏற்படுத்தி பொருளாதார வளர்ச்சி அடைய ஒரு கருவியாக வரி விதிப்புமுறை இருக்க வேண்டுமென்று கருதுகின்றோம்.

**பொதுக்கடன் விளக்கம்**

பொதுக்கடன் கருத்து

தற்காலத்தில் அரசு தனக்குவேண்டிய பணத்தைப் பெறுகின்ற பலமுறைகளில் ஒன்றாகப் பொதுக்கடனை வைத்திருக்கின்றது. பாஸ்டபிளின் கருத்துப்படி கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகத்தான் இன்றுள்ள முறையில் பொதுக்கடன் வளர்ந்துள்ளது. பண்டையக் காலத்தில், மன்னர்கள் அமைதியான காலத்தில் தேடி வைத்த செல்வத்தை நெருக்கடி காலங்களில் செலவிட்டனர். தனியாரிடம் கடன் பெற்றுப் பொதுச்செலவை மேற்கொள்வதைச் சிறப்பாகக் கருதவில்லை. இடைக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் மன்னர்களிடம் கடன்வாங்குகின்ற பழக்கம் தோன்றியது. இங்கிலாந்திலும், பிரான்சிலும் மன்னர்கள் அரசின் செலவை ஈடுகட்ட முடியாமல் கடன்வாங்கினர். தனியார் வங்கிகள் கடன்கொடுத்தன. இங்கிலாந்து வங்கியே இப்படி அரசுக்கடனில் தோன்றி வளர்ந்ததென்பதை வரலாறு கூறுகின்றது.

பொதுக் கடன் அரசுக்கு வரியைப்போல உடனடி வருவாயாக இருப்பதில்லை. அது ஒரு தற்காலிகச்சுமை, இந்தச்சுமையை அரசு எதிகாலவரியின் மூலமாகவும், பிறவருவாய்களின் துணையாலும் தீர்த்து கொள்ளும். இந்தக்கோணத்தில் அரசு தனது எதிர்கால வருவாயை நிகழ்காலத்தில் செலவிட கடன் ஒரு கருவியாகின்றதென்று கூறலாம்.

விளக்கம்: பொதுக்கடன் என்பது நாட்டின் பொதுநிர்வாகங்கள், உள்ளாட்சி மன்றமோ, மாநில மத்திய அரசோ தனது குடிமக்களிடமிருந்தோ அயல்நாட்டினரிடமிருந்தோ பெற்றிருக்கும் மொத்தக் கடனைக் குறிக்கின்றது. அரசு வங்கிகளிடமிருந்தும், வாணிப நிறுவனங்களிடமிருந்தும், தனியாரிடமிருந்தும், பொது அமைப்புகளிடமிருந்தும் கடன் பெறலாம். பொதுவாக அரசு வட்டியோடு குறுகிய காலத்தில் திருப்பித் தருவதால் வாக்குறுதியளிக்கும் கடன்பத்திரங்களை வெறியிட்டுக் கடன் பெறுகின்றது.

**கடன் பெறும் வழிகள்**

1. தனிமனிதர்களிடமிருந்து: அரசு தனிமனிதர்களிடமிருந்து கடன் பெறுகின்றது. அரசு வெளியிடுகின்ற கடன்பத்திரங்களைத் தனியார் விரும்பி வாங்குகின்றனர். தனியார் கடன் பத்திரங்களை வாங்கவதற்கும், நாட்டில் பழக்கத்திலுள்ள பணத்தின் அளவிற்கும் தொடர்பு இருக்கின்றது.
2. நிறுவனங்களிடமிருந்து: அரசு ஆயுள் காப்பீட்டுக்கழகம் போன்ற பொது நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுகின்றது. இத்தகைய நிறுவனங்களிடம் இருக்கின்ற மிகுதியான காப்பு நிதிகளை அரசு பொதுக்கடன் மூலம் பயன்படுத்துகின்றது. அரசின் பத்திரங்கள் நீர்மைத் தன்மை கொண்டவைகளாகவும், பாதுகாப்பானவைகளாகவும். இருப்பதால் பொது நிறுவனங்கள் அரசுக்குக் கடன் தருகின்றன.
3. வணிக வங்கிகள்: அரசு வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெறுகின்றது. வணிக வங்கிகள் அரசின் பத்திரங்களைத் தனது கடன் பெருக்க ஆற்றலைப் பயன்படுத்தி வாங்குகின்றது. வங்கி களிடம் அரசுக்குக் கடன் கொடுக்க ரொக்கப்பணம் இருக்க

வேண்டும் மென்பதில்லை. வுங்கிக் கணக்கில் காசோலை மூலம் பணத்தைக் கொடுத்து வாங்குகின்றவரை வங்கிகளால் கையிருப்பைவிட மிகுதியாகக் கடன்கொடுக்க இயல்கின்றது.

4. மைய வங்கி: அரசு தனது பத்திரங்களை மைய வங்கிக்கு விற்பனை செய்து கடன் பெறுகின்றது. அரசு மையவங்கிகளிடம் கடன் பெறுகின்றபொழுது அந்த அளவிற்கு அது மைய வங்கியின் மீது காசோலைகளை வழங்குகின்றது. அரசிடமிருந்து பணம்பெற வேண்டியவர்கள் அரசு மையவங்கியின் மீது தரும் காசோலைகளைப் பெறகினறனர்.

5. வெளிநாட்டுக் கடன்: அரசு கடன் பெறும் வழிகளில் ஒன்றாக வெளிநாட்டுக் கடன் இருக்கின்றது. அரசு வெளிநாடுகளில் தனியாரிடமிருந்தோ, வெளிநாட்டு அரசுகளிடமிருந்தோ, பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்தோ கடன் பெறலாம். 1997-98 இல் இந்தியா வெளிநாட்டிற்கு 56,000 கோடி ரூபாய் கடன்பட்டிருந்தது.

## பொதுக்கடன் வகைகளும், காரணங்களும்

## பொதுக்கடன் வகைகள்

அரசு பெறுகின்ற கடன்களின் அளவிலும், இயல்பியலும், முறையிலும் வேறுபாடுகள் உ ள்ளன. எலலாக் கடன்களும் ஒன்றுபோல் இல்லாததால் அவற்றைப் புரிந்துகொள்ள வகைப்படுத்திப் பார்ப்பது தேவையாகின்றது. பொதுக்கடன்களை வெவ்வேறு வகையான அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பகுத்துக் கூறலாம்.

1. உற்பத்திக்கடன்: அரசு வருவாய் கிடைக்கும் துறைகளில் முதலீடு செய்வதற்காகக் கடன் பெறுவதை உற்பத்திக்கடன் என்கின்றோம். பெருந்தொழில்கள், நீர்ப்பாசனத்திட்டங்கள் போன்றவற்றில் முதலீடு செய்வதற்காக வாங்கும் கடன்களை இந்த வகையில் சேர்க்கலாம். இத்தகைய கடனையும் அதற்குச் செலுத்த வேண்டிய வட்டியையும் இந்தக் கடன் முதலீட்டிலிருந்து வருகின்ற வருவாயைக் கொண்டு செலுத்தி விடலாம். ஊற்பத்தியாற்றலுடைய பொதுக்கடன் அரசுக்கோ வரி செலுத்துகின்றவர்களுக்கோ சுமையாக அமைவதில்லை.
2. உற்பத்தியற்ற கடன் அல்லது பயனில் சுமைக்கடன்: அரசின் செலவுகளுக்காக வருவாயற்ற துறைகளில் செலவிடுதற்காகப் பெறுகின்ற பொதுக்கடனை உற்பத்தியற்ற கடன் என்று கூறலாம். அரசு போர்ச் செலவுக்காக, புயல் வெள்ளம் போன்றவற்றால் ஏற்படும் இழப்புக்களை ஈடுசெய்யும் நிர்மாணப் பணிகளுக்காக அரசுகடன் பெறுவதை இத்தகைய கடனுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இந்த வகைக் கடன்களை அரசு வரிவிதிப்புப் போன்ற பிற வருவாயிலிருந்து தீர்க்க வேண்டும்.

### பொதுக்கடனுக்கான காரணங்கள்

வளர்ந்து வருகினற செலவினங்களுக்குத் தேவையான வருவாயை இன்றைய அரசுகளால் வருவாயின் மூலமை் பெற முடிவதில்லை. ஆதலால் பொதுக்கடன் வாங்குவது

நல்ல பொது நிதிமுறையில் ஒரு பகுதியாகி விட்டது. பொதுக்கடன் பெறுவதற்கான காரணங்களில் கீழ்க்கண்டவற்றை முதன்மையானவை என்று கூறலாம்.

1. வரவுசெலவுத்திட்டப்பற்றாக்குறை: அரசின் வரவும் செலவும் எப்பொழுதும் சமமாக இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது. பேராசிரியர் ஜேக்கப் வைனர், “சூழ்நிலைகளைக் கருதாமல் ஒவ்வொரு ஆண்டிலும் வரவு செலவுத் திட்டம் சமநிலையில் இருக்க வேண்டும்மென்பது தவறுடைய கருத்தாகும்.
2. போர் போன்ற நெருக்கடி: திடீரென்று ஏற்படும் வெளிநாட்டினரின் தாக்குதலைச் சமாளிக்க அரசு மிகுதியாகச் செலவிட வேண்டியதேற்படும். இன்றைப் போர்முறை அரசின் செலவைப் பலமடங்கு மிகுதிப்படுத்துவதாகத் தோன்றுகின்றது.
3. சமுதாயத்தேவைகள்: சமுதாயத்தின் வளர்ச்சிக்காக கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், நூலகங்கள், பூங்காக்கள் போன்றவற்றை அமைப்பது தவிர்க்க முடியாததாகும். இவற்றை வரி வருவாயின் மூலம் அமைப்பதே சிறந்தது.
4. பழைய கடன்களைத் தீர்க்க: உரிய காலத்தில் பழைய கடன்களைத் தீர்க்கவேண்டுவது அரசின் பொறுப்பாகும். இதற்காக ஓர் அரசினால் வரவு செலவுத் திட்டத்தை எச்சநிலையில் வைத்துக் கொள்ள முடிந்து, கடன் கழிவு நிதிகளை உருவாக்க முடிந்தால், அது வரவேற்கத்தக்கதாகும்.
5. கொடுப்பல் நிலைச் சீர்படுத்தல்: ஒரு நாட்டின் அயலகச் செலாவணி செலுத்துநிலை தொடர்ந்து பாதகமாக இருப்பது நல்லதல்ல. தற்காலிகமாகக் கொடுப்பல் நிலைப் பற்றாக்குறையை ஈடுசெய்ய வெளி நாட்டுக்கடன் வாங்குவது தேவையாகின்றது பன்னாட்டுப் பணநிதி, உலகவங்கி போன்ற நிறுவனங்கள் இத்தகைய கடன்களை வழங்குகின்றன.

**பொதுக் கடன் தீர்வு முறைகள்**

1. மக்களின் வரிச்சுமை குறையும். பொதுக்கடன் இருக்கின்ற வரை அதற்கு வட்டி செலுத்த மிகுதியாக வரிவிதப்பது வேவையாகின்றது.
2. அரசின் மீது மக்களுக்கு நம்பிக்கை வளரும். பொதுக்கடனைத் தீர்க்காத அரசின் மீது மக்களுக்கு நல்ல எண்ணம் ஏற்படாது.
3. அரசு திவாலாகும் நிலைக்குச் செல்லாமல் தடுக்கின்றது. பழைய கடன்களைத் தீர்க்காமல் மேலும்மேலும் புதிய கடன் வாங்கிக் கொண்டிருந்தால், வட்டிகூட செலுத்த முடியாத நிலை அரசுக்கு வரலாம்.
4. அரசு வீணான செலவுகளை மேற்கொள்வதைக் குறைக்கின்றது.
5. எதிர்காலத்தில் எளிதாகக் கடன் வாங்க முடியும். உரிய காலத்தில் கடனைத் திருப்பித்தரும் அரசுக்கு மக்கள் தாராளமாகக் கடன் தருவார்கள்.
6. கடன் நிர்வாகச் செலவு குறையும்.
7. இன்றையக் கடனை எதிர்காலத் தலைமுறையின் தலையில் சுமத்துவதைத் தவிர்க்கினறது.

8. அரசுக் கடனைத் திரும்பச் செலுத்துகின்ற பொழுது அந்தப் பணத்தைத் தனியார் துறையில் முதலீடு செய்வார்கள். தனியார் முதலீடு கூட, இது வாய்ப்பளிக்கின்றது.
9. அரசு கடனைத் திரும்பச் செலுத்துவதால், பொதுச்செலவு குறிப்பிடத்தக்க அளவில் குறையும், இதனால் பணவீக்கம் கட்டுப்படும்.

## மேற்கோள் (References)


1. மா. பா. குருசாமி (2012), நுண்ணியியல் பொருளியல் (பாகம் 1 & 2).
2. மா. பா. குருசாமி (2012), பணவியல்.
3. மா. பா. குருசாமி (2012), பன்னாட்டுப் பொருளாதாரம்.
4. ஸ்ரீனிவாச ராதா (2011), பொதுநிதியியல்.



**பாட தொகுப்பு**

**முனைவர் கோ.மணிகண்ட பிரசாத்**

உதவி பேராசிரியர், பொருளாதாரத்துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி-12.


*****